வெளியீடு 16-5-2006 Issued 16-5-2006

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**புதன்கிழமை, ஜனவரி 18, 2006—தொகுதி 87—எண் 3**

**Wednesday the 18th January, 2006 —Volume 87—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

920
21.9.06

**18-1-2006**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. **வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 313-348 |
| 2. **விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| அனைத்து ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்களில் பொருட்காட்சி மற்றும் ஊரக இளைஞர் விளையாட்டு விழாக்களை நடத்துதல் — மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 348-352 |
| 3. **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 352-417 |
| *திரு. கே. மகேந்திரன் | 352-354, 369-370 |
| திரு. சி. சிவசாமி | 371-392 |
| *திரு. ஜெக. வீரபாண்டியன் | 393-417 |
| 4. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 417-418 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 5, பார்த்திப – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஜனவரி 18, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்*
*நடைதெரிந்த நன்மை யவர்"*

*சொற்களின் நடைமுறைப் போக்கினை ஆராய்ந்தறிந்த நல்லறிவாளர்கள், அவையின் நேரம், நிலைமை ஆகியவற்றை ஆராய்ந்து, தெரிந்து, நன்றாக உணர்ந்து சொல்ல வேண்டும்.*

### 1. வினாக்கள்–விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா எண் 21, திரு. கோவை தங்கம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.*

**21—**

#### கிரானைட் தொழிற்சாலை

*** 62263—திரு. கோவை தங்கம்:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வால்பாறை, ஆழியார் நகரில் கிரானைட் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு வால்பாறை பகுதியில் கிரானைட் குவாரிகள் ஏதும்

[2006 ஜனவரி 18

இல்லாததால், வால்பாறை ஆழியார் நகரில் கிரானைட் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் தற்போது தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ஆழியார் நகரில் கிரானைட் தொழிற்சாலை ஏற்படுத்தினால் ஆழியார் நகரின் அருகில் இருக்கின்ற பிலிசின்னம்பாளையம், அங்கலக்குறிச்சி, கரியசெட்டிபாளையம், கம்மாளப்பட்டி, அர்த்தநாரிப்பாளையம், ஜல்லிப்பட்டி, தென்சங்கம்பாளையம், சோமந்துறை, ரமணிமுதலியூர், பெத்தநாயக்கனூர், காளிகாபுரம், தென்சித்தூர், மேலும் வால்பாறை, கோட்டூர், வேட்டைக்காரன்புதூரிலுள்ள படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மைக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் ஆழியார் நகரில் கிரானைட் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கிரானைட் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்று சொன்னால் 50 அல்லது 60 கிலோ மீட்டர் சுற்றளவில் கிரானைட் பாறைகள் இருக்க வேண்டும். கிரானைட் பாறைகள் இருந்து அங்கு குவாரிகள் வேலை நடக்கின்ற இடத்தில்தான் தொழிற்சாலைகள் ஏற்படுத்த முடியும். அவ்வாறு அந்தப் பகுதியில் இதுவரையிலும் பாறைகள் எதுவும் கண்டெடுக்கப்படவில்லை. அவ்வாறு கண்டெடுக்கப்படுகின்ற நேரத்தில் இதுபற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் தேயிலைத் தொழிலைத் தவிர தொழிற்சாலைகள் எதுவுமே கிடையாது. 99 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும், விவசாயப் பெருங்குடி மக்க[illegible]ல்பாறை சட்டமன்றத் தொகுதியில்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227002



2006 ஜனவரி 18]

ஆழியார் நகரில் கிரானைட் தொழிற்சாலை ஏற்படுத்தினால் உபயோகமாக இருக்கும். அங்கே போதுமான உபயோகமற்ற நிலங்கள், விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்கள், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்தும் இருக்கின்றன. மேலும் ஆழியார் நகர், அதைச் சுற்றிலும் கிரானைட் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு கிரானைட் கற்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து ஆய்வு செய்தால் அங்கே கிரானைட் கற்கள் கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், பெங்களூர் போன்ற மற்ற மாநிலங்களிலிருந்து எல்லாம் கிரானைட் கற்களைக் கொண்டு வந்து அங்கே கிரானைட் தயார் செய்கின்ற ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி, வேலைவாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதைப்போல ஆழியார் நகரிலும் கிரானைட் தொழிற்சாலையை ஏற்படுத்தினால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும், அவர்களுடைய குடும்பக் கஷ்டங்கள் நீங்குவதற்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அரசு இதைப் பரிசீலனை செய்து வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ஆழியார் நகரிலே கிரானைட் தொழிற்சாலையைக் கொண்டு வருவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆழியார் பகுதியில், கிரானைட் பாறைகள் இருக்கின்றனவா என்பதை தமிழ்நாடு கனிம வள நிறுவனத்தினுடைய Geology and Mining படித்தவர்களை வைத்து ஆய்வு செய்து கண்டறிந்த பிறகு அரசு எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிறகு தனியார்கள் யாரேனும் முன்வந்தால் கண்டிப்பாக அதற்கு அனுமதி கொடுப்பதற்கும் அரசு தயாராக இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்தானம்.

[2006 ஜனவரி 18

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கிரானைட் கற்கள் என்பது எங்களுடைய பகுதிகளிலெல்லாம் எல்லா நிலங்களிலும், தனியார் வைத்திருக்கின்ற பட்டா நிலங்களிலெல்லாம் இருப்பதாக அறிகிறோம். அந்த பட்டா நிலங்களைச் சேர்ந்தவர்கள் அந்தக் கற்களை எடுப்பதற்கு அரசு சார்பிலே அனுமதி வழங்கப்படுகிறதா? அப்படி அனுமதி வழங்குவதற்கு உரிய நடைமுறைகள் என்ன என்பதனை அறிவதோடு அங்கிருக்கின்ற விவசாயிகள் எல்லாம் அதைத் தாங்களாகவே எடுத்து தொழில் செய்வதற்கு வழியற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நிலங்களை எல்லாம் அரசே கையகப்படுத்திக்கொண்டு புதிதாக கிரானைட் தொழிற்சாலை அமைப்பதற்கு முன்வருமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, மேலூர் பகுதிகளில் கிரானைட் கற்கள் அதிகமாக இருக்கின்றன. பட்டா நிலங்களிலிருந்து கற்களை எடுப்பதற்கு அரசு அனுமதி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அப்படி பட்டா நிலங்கள் வைத்திருப்பவர்கள் அந்த மாவட்டத்தினுடைய புவியியல் சுரங்கத் துறை அதிகாரியிடம் மனு கொடுத்து அது Commissioner of Mining, Chennai-க்கு வந்து, பிறகு அரசாங்கத்தின் அனுமதியோடு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் அரசாங்கத்தினுடைய இடமாக இருந்தால் அதை தமிழ்நாடு கனிம வள நிறுவனமே (TAMIN) ஏற்று, எடுத்து நடத்திக்கொண்டிருக்கிறது. மேலும், என்ன வசதிகள் தேவை என்று சொன்னாலும் அரசு தனியாக அவர்களுக்குக் கொடுப்பதற்கு தயார் நிலையில் இருக்கிறது என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிரானைட் தொழிற்சாலைகள், தமிழகத்திலே எத்தனை செயல்படுகின்றன. அரசின் சார்பிலே எத்தனை செயல்படுகின்றன என்ற விவரத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன். அதோடு இந்த கிரானைட் தொழிலில் நமது தமிழகத்தினுடைய தேவை அறிந்து அதற்குரிய முன்னுரிமை அளிப்பதற்கு அரசிடத்திலே திட்டம் இருக்கிறதா? காரணம் நாம் கிரானைட்டைப் பெறுவதற்காக இராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்குச் சென்று வரவேண்டிய நிலை இருக்கின்றது. இங்கே



2006 ஜனவரி 18]

கிடைக்கின்ற இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இந்தத் தொழிலைச் செய்வதற்கு அரசு என்ன முயற்சி எடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம வள நிறுவனம் மணலியிலும், மாதேபள்ளியிலும் இப்பொழுது தொழிற்சாலைகள் அமைத்து இயங்கிக்கொண்டிருக்கிறது. நல்ல இலாபகரமான முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதைப்போல் இப்பொழுது இருங்காட்டுக்கோட்டையில் 32 கோடி ரூபாய் செலவில் தனியாகத் தொழிற்சாலை ஒன்று தொடங்க இருக்கின்றோம். முன்பெல்லாம் கிரானைட் என்பது நமது தமிழ்நாட்டிலிருந்து அதிகமாக வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகிக்கொண்டிருந்தது. தற்பொழுது சீனா, தென் ஆப்பிரிக்கா, பிரேசில் போன்ற நாடுகள் அதிக அளவில், அதிக பொருட்களைக் குறைந்த விலையில் தருவதற்கு உலகச் சந்தையில் முன்வந்திருக்கிறது. இருந்தாலும் தமிழ்நாட்டினுடைய கிரானைட் நல்லமுறையில் வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகிக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனிம வள நிறுவனம் சமீபத்தில் சில தினங்களுக்கு முன்னதாக கோவை மாவட்டம், அட்டப்பாடி என்கிற பகுதியிலே 10 கிலோ மீட்டர் சுற்றளவில் தங்கம் கிடைப்பதாக மிகப்பெரிய ஆய்வு செய்து அறிக்கைகளை வெளியிட்டு, பத்திரிகைகளில் அது வந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்விக்கு அது சம்பந்தம் இல்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. கனிம வளம், கனிம வளம் சம்பந்தமானது. 10 கிலோ மீட்டர் சுற்றளவில் கிடைப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. ஒரு மிக முக்கியமான, தமிழ்நாட்டின் கேந்திரமான தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் வாய்ப்பளிக்கும் என்பதால் அது பற்றி ஆய்வு செய்வதற்கு அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2006 ஜனவரி 18

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் கனிம நிறுவனத்தின் மூலம் கிரானைட் வெட்டி எடுக்கப்படுகின்றது. தொழிற்சாலைகள் இல்லாத அதுபோன்ற மாவட்டங்களுக்கு கிரானைட் தொழிற்சாலை அமைப்பதிலே முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம வள நிறுவனம், எங்கெங்கெல்லாம் கிரானைட் கற்கள் கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் தொழிற்சாலையை அமைத்து நடத்தும் என்பது சற்று சிரமமான காரியமாக இருக்கின்றது. ஆகவே, அங்கே கிடைக்கின்ற கிரானைட் கற்களை வெட்டி எடுப்பதற்கு Agency மூலமாக Tender விடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது. தேவை ஏற்படின் திருவண்ணாமலையில் தொழிற்சாலை அமைப்பதற்கு அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 22, திரு. ப. மோகன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**22—**

## கால்நடை கிளை நிலையம்

*** 81099—திரு. ப. மோகன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஒன்றியம், குதிரைசந்தல் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதியதாக கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடையாணை அமலில் உள்ள நிலையில், சின்னசேலம் ஒன்றியம், குதிரைசந்தல் ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க தற்போது வாய்ப்பில்லை என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2006 ஜனவரி 18]

முற்பகல் 10–10

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் எப்போதும் இல்லாத சாதனையாக 306 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. சின்னசேலம் தொகுதியில் அனுமனந்தல், இந்திலி என்ற பகுதிகளில் இப்படித் தரம் உயர்த்தப்பட்டு அதற்கு தலா 19 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்தமைக்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை தொகுதி சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று இந்த குதிரைசந்தல் என்கிற ஊராட்சிப் பகுதியில் பல்வேறு கிராமங்கள் அதிலே உள்ளடக்கி இருக்கின்றன. அந்தக் கிராமத்திலே 5 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிற பகுதி, கால்நடைகள் அதிகமாக உள்ள பகுதி, அதைச் சுற்றி இருக்கிற 20 கிராமங்கள் அதனால் பயன்பெறும். எனவே, இந்த குதிரைசந்தல் கிராமத்தில் கால்நடை கிளை நிலையத்தை அமைத்துத் தந்திட வேண்டுமென்று பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நியாயமான கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளில் இயங்குகின்ற கால்நடை கிளை நிலையங்களை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த அரசிடம் ஏதேனும் குறிப்பு உள்ளதா? அவ்வாறு இருப்பின் செஞ்சி தொகுதி, தையூர் கிராமத்தில் இயங்குகின்ற கால்நடை கிளை நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

[2006 ஜனவரி 18

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் 316 கால்நடை கிளை நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு கால்நடை மருந்தகங்களாக மாற்றிக் கொடுத்த பெருமை, ஒரு இமாலய சாதனையைப் படைத்த பெருமை, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, வர இருக்கின்ற 2006 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலேயும் வெற்றி பெற்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு அமையும். (மேசையைத் தட்டும் ஒலி) அமைந்தவுடன் உங்களுடைய செஞ்சி தொகுதியிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் அம்மாவினுடைய அரசு கால்நடை கிளை நிலையங்களை மருந்தகங்களாக மாற்றிக் கொடுப்பார்கள் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சின்னசேலம் தொகுதியில் பால்வளத் துறையின் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மூன்று இடங்களிலே bulk cooler அமைப்பதற்காக ஆணையிட்டு அந்தப் பணிகள் சின்னசேலம் தொகுதியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக 45 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று 25 ஆண்டு காலமாக சின்னசேலம் தொகுதியிலே பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றியதற்கும், பெரம்பலூர் மாவட்டத்தையும், விழுப்புரம் மாவட்டத்தையும் இணைக்கின்ற அந்தப் பாலத்தையும், பாண்டியன்குப்பம், ஈரியூர் போன்ற பாலங்களையெல்லாம் அமைப்பதற்கும் மூன்று கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே பணிந்து நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது குதிரைசந்தலில் இப்போது அமைக்க இயலாது என்று குறிப்பிட்டார்கள். கால்நடை கிளை நிலையம் அமைக்கும் வரை, அங்கேயிருக்கின்ற கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்வதற்கு உடனடியாக ஆவன செய்யப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குதிரைசந்தல் ஊராட்சிக்கு 5 கிலோ



2006 ஜனவரி 18]

மீட்டர் தொலைவில் கள்ளக்குறிச்சி கால்நடை மருத்துவமனையும் மற்றும் இந்திலி கால்நடை மருந்தகமும் உள்ளன. இவை மூலம் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இங்குள்ள இணைப்புத் தம்பதியர் மூலமாக தடுப்பூசிப் பணிகள், ஆடுகளுக்கு குடற் புழு நீக்கம் மற்றும் முதலுதவி சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, கால்நடை மருந்தகத்தின் கிளை நிலையங்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் ஒரு வித்தியாசமும் தெரியவில்லை. அதனாலே, மருத்துவமனைகளுக்கு என்னென்ன அதிகாரம் இருக்கின்றன, கிளை நிலையத்திற்கு என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா? ஆனால் பார்வையிலே இரண்டும் ஒன்றாகவே இருக்கிறது. எனவே, இதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையங்களுக்கும், கால்நடை மருந்தகங்களுக்கும் வித்தியாசம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களாகவே இங்கே சொல்கிறார்கள். ஆகவே, அவர்கள் சொன்னதிலிருந்தே இரண்டும், அதாவது கிளை நிலையமானாலும் சரி, மருந்தகங்களானாலும் சரி, அம்மாவினுடைய ஆட்சியில் சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதை உறுப்பினர் அவர்களே ஒத்துக்கொண்டார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதி, வடக்குமேடு கிராமத்தில் கால்நடை துணை மருந்தகம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டிருக்கிறேன். அதற்குரிய இடங்களும் தேர்வு செய்யப்பட்டு ஊர் பொதுமக்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அதேபோல, மதுரை பெருமட்டூரில், கனகம்பட்டு பஞ்சாயத்து, மதுரை

பெருமட்டூர் கிராமத்திற்கும் துணை கால்நடை மருந்தகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப அம்மாவினுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்நடை மருந்தகங்களும், கிளை நிலையங்களும் முழு நேரமும் செயல்படுகின்ற நிலையங்களாக மாறி வருகின்ற நேரத்தில் பல பகுதிகளிலும் பழைய கால்நடை மருந்தகக் கட்டடங்கள் பழுதடைந்து சேதம் அடைந்து இன்று செயல்பட முடியாத அளவில் உள்ளன. குறிப்பாக, செம்மங்காலை, குழித்துறை போன்ற பகுதிகளிலே எல்லாம் இந்த நிலைமை நீடிக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு, பழுதுபார்க்கும் நடவடிக்கையைத் துரிதமாகச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இந்த ஆண்டு மட்டும் 90 கால்நடை மருந்தகங்கள் கட்டுவதற்காக ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திற்கும் 19 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயை ஒதுக்கிக் கொடுத்து ஒரு பெருமையைச் சேர்த்திருக்கின்றது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே உள்ள பழுதடைந்த கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் எவையாக இருந்தாலும் அம்மாவினுடைய அரசு கனிவுடன் பரிசீலித்து கட்டிக் கொடுக்க ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 23, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.





**23—**

**உயிரியல் பூங்கா**

***49285—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், ஏற்காடு மலையோரம் உள்ள உயிரியல் பூங்காவை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஏற்காடு மலையடிவாரத்தில் உள்ள குறும்பம்பட்டி உயிரியல் பூங்காவிற்கு மத்திய உயிரியல் குழுமத்தின் அங்கீகாரம் கோரி 24–08–2005–ல் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர், தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, ஏற்காடு செல்கின்ற சுற்றுலாப்பயணிகள் எல்லாம் இந்த உயிரியல் பூங்காவிற்குச் சென்று அங்கே பார்வையிட்டு பூங்காவிலே பொழுதைப் போக்கி வந்துகொண்டிருந்தார்கள். சுற்றுலாப்பயணிகள் மிக அதிக அளவிலே சென்று கொண்டிருந்ததெல்லாம் மாறி இப்போது தரம் குறைந்து அங்கே சுற்றுலாப்பயணிகள் செல்ல முடியாத ஒரு நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றது. மேலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாலைகளெல்லாம் மண் சாலைகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அந்த மண் சாலைகளையெல்லாம் மாற்றி புதிய தார்ச் சாலைகளாக அமைத்துக் கொடுத்தால் அந்தப் பூங்காவிற்கு மக்கள் எளிதாகச் சென்று வருகின்ற நிலைமை ஏற்படும் என்பதனைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சாலைகளைச் செப்பனிட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2006 ஜனவரி 18

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை மிகவும் பிரசித்திபெற்ற மலைப்பகுதி. அங்கு மயில்கள், குயில்கள் போன்ற பறவைகளும், குரங்குகள், மான்கள் போன்ற பலதரப்பட்ட விலங்குகளும் இருக்கின்றன. மிகவும் குறைந்த செலவில் சுற்றுலாப் பயணிகள் நிறைய பேர் வந்து கொண்டிருக்கின்றார்கள். அதை மனதில் வைத்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் ஒரு உயிரியல் பூங்கா அமைக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** Central Zoo Authority அதாவது மத்திய உயிரியல் குழுமம் சில வரைமுறையை வகுத்துள்ளது. அதன்படி உயிரியல் பூங்கா அமைப்பதற்கு குறைந்தபட்சம் 10 ஹெக்டேர் நிலம் வேண்டும். அங்கு வன உயிரினங்கள் அதிகமாக இருக்க வேண்டும். சுற்றுலாப்பயணிகளை அதிகமாக ஈர்க்கக்கூடிய இயற்கைச்சூழல் இருக்க வேண்டும். இவை இருந்தால், Central Zoo Authority அதாவது மத்திய உயிரியல் குழுமத்திற்கு அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் குரும்பம்பட்டி உயிரியல் பூங்காவானது, சேலம் 2–வது தொகுதியினுடைய எல்லையிலும், ஓமலூர் சட்டமன்றத் தொகுதியினுடைய எல்லையிலும் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே, 22 ஏக்கர் அளவிலே, அமைந்திருக்கின்றது. அதிலே சுமார் 12 ஏக்கர் நிலம் மூலிகைச் செடி வளர்ப்பதற்கான இடமும் இயற்கையாக அமைந்திருக்கின்றது. அந்தப் பகுதியிலே இன்றைக்குப் பராமரிப்பதற்கு 5 பணியாளர்கள் மட்டுமே இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வன



2006 ஜனவரி 18]

உயிரியல் பூங்காவிலே சிங்கம், புலி உள்ளிட்ட அனைத்து மிருகங்களும் இருந்து வந்தன. ஆனால், தற்போது வெறும் மான்களும், மயிலும் மட்டுமே இருந்து கொண்டிருக்கின்றன. மற்ற விலங்குகள் எல்லாம் அங்கேயிருந்து எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த உயிரியல் பூங்காவிலே இன்றைக்குப் பொழுதுபோக்குவதற்கு வருகின்ற மக்கள் பார்க்கக்கூடிய அளவிற்கு எதுவுமே இல்லை. காரணம் ஆண்டுக்கு ஒரு முறைதான் மார்ச் மாதத்திலே அந்த உயிரியல் பூங்காவிலே இருக்கின்ற மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் அவற்றைப் பராமரிப்பதற்காக விலங்குகளின் உணவிற்காக உணவுப் படியாக வழங்குகிறார்கள். அந்த உணவுப்படியானது மிகப் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினாலே, அதிலே இருக்கின்ற மிருகங்கள் இன்றைக்குச் சரியான முறையிலே பராமரிப்பில்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன.

அதேபோன்று, அதிலே பணிபுரிகின்ற 5 பணியாளர்களும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்படவில்லை. தற்காலிகப் பணியாளர்களாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாதத்திற்கு 1,500 ரூபாய் மட்டுமே இன்றைக்குச் சம்பளமாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். வண்டலூரில் இருக்கின்ற பணியாளர்கள் அத்தனை பேரும் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட்டு அவர்களுக்கு 4,500 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும். சேலம் மாநகராட்சி எல்லையிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திலே மாநகரத்தின் மிக அருகிலே அமைந்திருக்கின்ற அந்தப் பூங்காவானது சேலம் மாவட்டத்து மக்களுக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கின்றது. மக்கள் பொழுதுபோக்கக்கூடிய இடம். ஏற்காடு அடிவாரத்திலே மிக ரம்மியமாக ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பின் நடுவிலே அமைந்திருக்கிறது. ஆகவே அதிலே மூலிகைப் பண்ணை என்று 12 ஏக்கர் பரப்பளவிலே இருந்தாலும்கூட இன்றைக்கு ஒரேயொரு மூலிகைச்செடி கூட அதிலே பயிரிடப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. மு. கார்த்தி:** ஆகவே, அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து அந்த உயிரியல் பூங்காவிற்கு மேலும் மிருகங்களையும் பறவைகளையும் கூடுதலாக்கி, உணவுப்படியை ஆண்டுக்கு 3 முறை என்று வழங்கியும் அதேபோல் இயற்கையாகவே மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு மிக எளிய இடமாக இருக்கிற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே மூலிகைப்

[2006 ஜனவரி 18

பண்ணை அமைக்கவும் முன் வருவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த உயிரியல் பூங்கா 20 ஹெக்டேர் நிலத்தில் இருக்கிறது என்று கூறினார்கள். அதனுடைய பரப்பளவு 11.6 ஹெக்டேர்தான். அங்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. Central Zoo Authority-யினுடைய அங்கீகாரம் கிடைத்த பிறகுதான், அந்த உயிரியல் பூங்கா தரம் உயர்த்தப்பட்டு, அங்கு வேலையாட்கள் நிரந்தரப்படுத்தப்பட்டு, அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கி, அந்த உயிரியல் பூங்காவைப் பராமரிக்க முடியும். இப்போது அது சிறிய உயிரியல் பூங்காவாக இருப்பதால், நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. அங்கு தற்போது புள்ளிமான்கள் 20, மயில்கள் 4, முதலை 3, ஆமை 6 ஆகிய வன விலங்குகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று Central Zoo Authority அனுமதிக்கு அனுப்பி, அனுமதி கிடைத்தவுடன் இந்த உயிரியல் பூங்கா அவர் நினைத்தபடி தரம் உயர்த்தப்பட்டு பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அவர் மூலிகைச் செடிகள் அங்கே வளர்க்கப்படவில்லை என்று சொன்னார். அது ஆய்வு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாம்புகளைக் கொண்டுவந்து விடுவதாக இருந்தால் விடுங்கள்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அதிலே பணி செய்கின்ற பணியாளர்கள் 5 பேர்தான் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கி அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டும். ஏனென்றால் வெறும் 1,500 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டும். அதேபோல அங்கே இருக்கின்ற விலங்குகளுக்கு ஆண்டுக்கு ஒரு முறைதான் அந்த உணவுப்படி வழங்கப்படுகிறது. அதில் இருக்கின்ற விலங்குகளுக்கு அது போதவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, ஆண்டுக்கு 3 முறை அந்த உணவுப் படியை அந்த மிருகங்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



2006 ஜனவரி 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் அருகே குறும்பம்பட்டியில் உயிரியல் பூங்கா ஆரம்பிக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் அந்த இடத்திற்குச் சென்று வந்தார்கள். ஆனால் அங்கே வசதிகள் குறைந்த காரணத்தினால் இப்போது சுற்றுலாப்பயணிகள் செல்ல முடிவதில்லை. சேலம் புதிய பஸ் நிலையத்திலிருந்தும், பழைய பஸ் நிலையத்திலிருந்தும் நேரடியாக பஸ் வசதி செய்து கொடுத்து, மாநில வனத் துறையும், சுற்றுலாத் துறையும் இணைந்து அங்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். மத்திய அரசினுடைய அனுமதி வரும்போது வரட்டும். ஆனால் சுற்றுலாத் துறையும், வனத் துறையும் சேர்ந்து ஏற்கெனவே இருந்த வசதிகளை செய்து கொடுத்தால் சுற்றுலாப்பயணிகள் சேலம் அருகிலுள்ள அந்த இடத்திற்குச் சென்று வருவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே வனத் துறை இதில் கவனம் செலுத்தி கூடுதல் வசதி செய்து கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்திரசேகரன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுகின்ற ஏலகிரி சுற்றுலா மையம் அங்கே அமைந்திருக்கிறது. அங்கே ஏழை எளிய மக்கள் எல்லாம் கோடைக்காலங்களில் தங்களுடைய பொழுதினைப் போக்குவதற்காக அதைப் பெருமளவில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே அங்கே ஒரு உயிரியல் பூங்காவினை அமைத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதற்கு அரசு ஆவன செய்யுமா, நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைகள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் உயிரியல் பூங்கா அமைக்க முடியாது. சுற்றுலாப்பயணிகள் அதிகமாக வரவேண்டும். அங்கே அந்த இயற்கைச் சூழ்நிலை இருக்க வேண்டும்.

வன உயிரினங்கள் அதிகமாக இருக்க வேண்டும். செலவை ஈடுகட்டுகின்ற அளவுக்கு சுற்றுலாப்பயணிகள் வந்தால்தான் இப்படி உயிரியல் பூங்கா அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அந்த இடம் தகுதியான இடமா என்று ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம் கோடியக்கரை இயற்கையாகவே மான்கள், குதிரைகள் கொண்ட அழகு சிறந்த காடுகளாக இருக்கின்றது. சமீபத்தில் ஏற்பட்ட சுனாமியால் அந்த வேலிகள் எல்லாம் பழுதடைந்து பாதுகாக்க முடியாத ஒரு சூழ்நிலை வந்து அங்கே இருக்கக்கூடிய மான்கள் வெளியேறக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அங்கே இருக்கின்ற உயிரினங்களைப் பாதுகாக்கின்ற முறையிலும், அங்கே சுற்றுலாப்பயணிகள் அதிகமான அளவிலே வந்து பார்த்து சென்று கொண்டிருக்கின்ற காரணத்தாலும், இந்தியாவிலேயே கடைகோடியாக இருக்கின்ற கோடியக்கரையை அபிவிருத்தி செய்வதற்கும் வனத் துறை மற்றும் சுற்றுலாத் துறை மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** கோடியக்கரை வனச் சரணாலயமாக அறிவிக்கை செய்யப்பட்டு மத்திய நிதியுதவி, மாநில நிதியுதவி கொடுத்து தக்க முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று சிறந்த முறையில், நல்ல முறையில் சுற்றுலாப்பயணிகளைக் கவரும் வகையில் அந்தச் சரணாலயத்தை மேம்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 24, திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.



**24—**

## பொறியியற் கல்லூரி

***22863—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை பகுதியில், பொறியியற் கல்லூரி ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை பகுதியிலே புதிதாக பொறியியற் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை பகுதியைப் பொறுத்தவரையிலே அதிகமாக விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய பகுதி. பொருளாதாரத்தில் மிகப் பின்தங்கிய மக்கள் வசிக்கக்கூடிய பகுதி. எனவே, அவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, பட்டுக்கோட்டை பகுதியிலே ஒரு பொறியியற் கல்லூரி அமைப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 6 அரசு பொறியியற் கல்லூரிகளும், 3 அரசு உதவி பெறுகின்ற பொறியியற் கல்லூரிகளும், அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய 4 உறுப்புக் கல்லூரிகளும், 226 தனியார் சுயநிதிக் கல்லூரிகளும் மொத்தம் 239 கல்லூரிகள் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பொறியியற் கல்லூரிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 69,475. 2004–2005–லே சேர்க்கப்பட்ட மாணவர்களுக்குப் பிறகு 18,716 இடங்கள் காலியாக உள்ளன. அதுமட்டுமல்லாமல், பட்டுக்கோட்டை பகுதியில் இருக்கின்ற சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள மாவட்டம் திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில்

இருக்கின்ற கல்லூரிகளின் எண்ணிக்கை 27. அதிலே தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பொறியியற் கல்லூரிகளுக்கும் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 840. அதிலே தற்போது காலியாக இருக்கின்ற இடங்கள் 212. ஆக, ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட இடங்களிலே பெரும்பாலான இடங்கள் காலியாக உள்ள நிலையிலே புதியதாக பொறியியற் கல்லூரி ஆரம்பிக்கின்ற செயற்குறிப்பு ஏதும் இல்லை. அதுமட்டுமல்லாமல், ஒரு பொறியியற் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் நிலம் நீங்கலாக 10 கோடி ரூபாய் தேவைப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. அங்கு விவசாயம் செய்துதான் தொழில் நடத்துகிறார்கள். அப்படி இருக்கின்றபொழுது மாணவ, மாணவிகள் படித்துவிட்டு நீண்ட தூரம் கல்லூரிக்குச் செல்லவேண்டியிருப்பதால் சங்கராபுரம் தொகுதியில் ஒரு கல்லூரி அமைத்துக் கொடுக்குமாறு தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கூறியதுபோல தமிழகத்தில் ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட இடங்களிலே பெரும்பகுதி — 18 ஆயிரம் இடங்களுக்குமேலே — காலியாக இருப்பதால் புதிதாக அரசின் சார்பாக பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 25, திரு. கே. மகேந்திரன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**25—**

### மகளிர் கல்லூரி

*** 37514— திரு. கே. மகேந்திரன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில், அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கலைக் கல்லூரிகள் எல்லாம் அந்தந்த பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்ட பிறகு, அந்தப் பகுதியிலே ஏதாவது புதிதாக ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால், அந்தப் பல்கலைக்கழகங்கள் அதற்கான செயற்குறிப்பை அரசாங்கத்திற்கு அனுப்பினால் அதுபற்றி சிந்திக்கப்படும். அப்படி எதுவும் அந்த பெரம்பூர் பகுதியிலே கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சென்னை பல்கலைக்கழகத்திடமிருந்து எந்தப் பரிந்துரையும் வரப்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட மக்கள், உழைப்பாளி மக்கள் கூடுதலாக வாழ்கிறார்கள். சென்னை மாநகரத்திலே இன்றைக்குக் கூடுதலான கல்வி நிலையங்கள் இருந்தாலுங்கூட வடசென்னை பகுதியைப் பொறுத்தவரையில், மூன்றே மூன்று கல்லூரிகள்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. வடசென்னையில் இருக்கக்கூடிய மாணவ, மாணவியர்கள் உயர்படிப்புக்குச் செல்லவேண்டுமென்றால், கல்லூரிகளுக்குச் செல்லவேண்டுமென்றால், அந்த மூன்று கல்லூரிகளில் இருக்கக்கூடிய இடங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால், பெரம்பூர் தொகுதியில் ஒரு அரசு மகளிர் கல்லூரி தொடங்கப்பட்டால், அங்கு இருக்கக்கூடிய சாதாரண மக்களுக்கு, உழைப்பாளி மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். அரசுக் கல்லூரிகள் இன்றைக்கு பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளாக மாறியிருக்கக்கூடிய சூழ்நிலையில், நம்முடைய சட்டப் பேரவையில் இந்தக் கோரிக்கையை ஏற்று, சென்னை பல்கலைக்கழகத்தின் சார்பாக பெரம்பூரிலே ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரியை உருவாக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் பகுதி உட்பட சென்னை மாவட்டத்திலே மொத்தம் 6 அரசு கலைக் கல்லூரிகளும், 14 அரசு உதவி பெறுகின்ற கலைக் கல்லூரிகளும், 13 சுயநிதி அடிப்படையிலே செயல்படுகின்ற கல்லூரிகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, புதிதாகக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால், அதைச் சார்ந்த அந்தப் பகுதியில்

இருக்கின்ற பல்கலைக்கழகம் அரசுக்கு முன்மொழிவு அனுப்பினால் கண்டிப்பாக, அதைப்பற்றி அரசு சிந்திக்கும். ஏற்கெனவே மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆண்டிப்பட்டியிலே ஒரு கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. அதேபோன்று சாத்தான்குளத்திலே மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினுடைய பரிந்துரையை ஏற்று ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல கடலூரிலே பாரதியார் பல்கலைக்கழகத்தினுடைய பரிந்துரையை ஏற்று ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பல்கலைக்கழகங்கள் தங்கள் பகுதியிலே புதிதாக ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று ஏதாவது பரிந்துரை அனுப்பினால் அரசு அதுபற்றி சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் *10–35*

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே கூடுதலான எண்ணிக்கையில் கல்லூரிகள் இருந்தாலுங்கூட, வடசென்னை பகுதியைப் பொறுத்தவரை, அரசு கல்லூரிகள் இரண்டும், அரசு உதவி பெறக்கூடிய கல்லூரி ஒன்றும் இருக்கிறது. இந்த *3* கல்லூரிகளில் வடசென்னை மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்கள் மட்டுமல்லாமல், சுற்றுப்புறப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களும் கல்வி பயில வேண்டுமென்றால், போதுமான இடம் இல்லாத காரணத்தினால், உயர் கல்வி என்பது இன்றைக்கு வடசென்னை மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, வடசென்னை, பெரம்பூர் பகுதியிலே ஒரு அரசு மகளிர் கல்லூரியை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகள் அமைப்பதற்கு பல்கலைக்கழகங்கள் பரிந்துரை செய்தாலே தவிர, அரசு தானாகவே எந்த கலைக் கல்லூரியையும் ஆரம்பிக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்றால், தனியார் சுயநிதி அடிப்படையிலே அந்தப் பகுதியிலே கல்லூரி ஆரம்பிப்பதற்கு யாராவது முன்வந்தால், அதற்கு அனுமதி அளிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் முதுகலை பட்டப் படிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. அங்கே முதுகலைப் பட்டப்படிப்புகள் தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகள் அந்தந்த பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்ட பிறகு, புதிய பாடப் பிரிவுகள், கூடுதலான பாடப் பிரிவுகள் ஏதாவது ஆரம்பிக்க வேண்டுமென்றால், அந்தந்தப் பல்கலைக்கழகங்களே அதைச் செய்துகொள்ளலாம் என்று விதிகள் இருக்கின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரி மிகச் சிறப்பான முறையிலே இயங்கி வந்து கொண்டிருக்கிறது. அதன்மூலம் சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய பல கிராம மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். ஆனால் அதே நேரத்திலே அங்கே ஆசிரியர் பணியிடங்கள் பல்லாண்டுகாலமாக காலியாக இருந்து வரக்கூடிய ஒரு நிலையிருக்கிறது. அதுகுறித்து நான் கேள்விகூட எழுப்பியிருக்கிறேன். இன்னும் அந்தக் கேள்வி வரவில்லை. எனவே, மாணவர்களுடைய நலன் கருதி, அங்கே சிறப்பான முறையிலே இயங்கி வருகின்ற அரசுக் கலைக் கல்லூரியிலே போதிய ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அரசு கலைக் கல்லூரிகளிலே *1,703* இடங்கள் தற்போது காலியாக இருக்கின்றன. அதேபோன்று அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகளிலே, கலைக் கல்லூரிகளிலே

2,203 இடங்கள் தற்போது காலியாக இருக்கின்றன. இந்தப் பேராசிரியர் பணியிடங்களை, விரிவுரையாளர் பணியிடங்களை படிப்படியாக நிரப்ப வேண்டுமென்று, தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்கள். அரசு கலைக் கல்லூரிகளுக்கு 500 விரிவுரையாளர்களும் தனியார், அரசு உதவி பெறுகின்ற அரசு கலைக் கல்லூரிகளுக்கு 300 விரிவுரையாளர்களும் முதற்கட்டமாக எடுப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால் அதை எதிர்த்து, கௌரவ விரிவுரையாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்தார்கள். அதிலே தங்களை நியமிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். ஆனால் உயர் நீதிமன்றம் அவர்களுடைய கோரிக்கையை நிராகரித்தது மட்டுமல்லாமல், 31–3–2006-க்குப் பிறகு அரசு கலைக் கல்லூரிகளாகட்டும், அரசு உதவி பெறுகின்ற கலைக் கல்லூரிகளாகட்டும், நியமிக்கப்படுகின்ற அந்த விரிவுரையாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட வேண்டும். அரசு தேர்வு வாரியம் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது முறையிலோ தேர்ந்தெடுக்கப்பட்டு, நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தது. ஆனால் நம்முடைய அரசு, விரிவுரையாளர்கள் மாதத்திற்கு 6,000 ரூபாய் சம்பளத்திலே பணியமர்த்தப்படுவார்கள் என்றும், 5 ஆண்டு காலத்திற்குப் பிறகு அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்றும் அரசாணை வெளியிட்டது. ஆகவே உயர் நீதிமன்றத்திலே, அவர்கள் கொடுத்த அந்தத் தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று modification petition போடப்பட்டு, அது நிலுவையிலே உள்ளது. அந்தத் தீர்ப்பு வந்தபிறகு உடனடியாக விரிவுரையாளர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

முற்பகல் 10–40

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, எதிர் வரும் சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றி வாகை சூட வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். என்னுடைய பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதி மிகமிகப் பின்தங்கிய தொகுதி ஆகும். தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் சீர்மரபினர் வாழ்கின்ற பகுதியாக இருந்து வருகின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 வருடங்களாக





நான் என்னுடைய தொகுதிக்கு ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரி வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டு வருகின்றேன். சேர நாடு யானையுடைத்து, சோழ நாடு சோறுடைத்து, பாண்டிய நாடு முத்துடைத்து, தொண்டை நாடு சான்றோருடைத்து என்பதுபோல், மாண்புமிகு அம்மா அவர்கள் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை வேலூர் மாநகரிலே அமைத்துள்ளார்கள். இந்த திருவள்ளுவர் பல்கலைக்கழகமானது பேரணாம்பட்டிற்கு ஒரு மகளிர் கல்லூரி அவசியம் வேண்டுமென்று பரிந்துரை செய்து கருத்துரு ஒன்று அனுப்பியுள்ளதாக அறிகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் சிந்தனைச் சிற்பி, சீர்திருத்த அன்னை, படிக்காத ஏழைக்குப் பரிசாகக் கிடைத்த அன்னை ஆவார். மாண்புமிகு அம்மாவின் அரசு எனது பேரணாம்பட்டு தொகுதியிலே ஒரு பெண்கள் அரசு கலைக் கல்லூரியை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு பகுதியிலே புதிதாக பெண்கள் கலைக் கல்லூரி ஆரம்பிப்பதற்காக அந்தப் பகுதியைச் சேர்ந்த திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திலேயிருந்து அரசுக்கு முன்மொழிவுகள் வந்தால் அதுபற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான அரூர் தொகுதி, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மிக அதிகம் இருக்கிற ஒரு தொகுதி. எந்தவிதமான தொழில் வளர்ச்சியும் இல்லாத வானத்தைப் பார்த்து விவசாயம் செய்கிற விவசாயிகள் நிறைந்த ஒரு பகுதி. அங்கே மேல் படிப்பிற்குச் செல்ல வேண்டுமானால் மிக நீண்டதூரம் சென்று படிக்க வேண்டியிருக்கிறது. எனவே, எனது தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரியைத் தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால், அந்தப் பகுதியில் இருக்கின்ற பல்கலைக்கழகத்தின்மூலம் அரசுக்கு முன்மொழிவுகள் வரப்பெற்றால் அதைப்பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஜனவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 26, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.*

**26—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***56957—திருமதி மல்லிகா சின்னசாமி:**

*மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*முசிறி தொகுதி, புலிவலம் ஊராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதி, புலிவலம் ஊராட்சியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் திருச்சி மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது அரசு இயந்திரத்தை பம்பரமாகச் சுழல வைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக வந்து, நான் இருக்கிறேன், கவலை வேண்டாமென்று ஆறுதல் கூறி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கி வந்தமைக்கும், பாதிக்கப்பட்ட ஏரி, குளம், பாலம், சாலை எல்லாவற்றிற்கும் சீர்செய்ய நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், எனது தொகுதியில் சிறுகாம்பூரில் பாதிக்கப்பட்ட பாலத்திற்குப் பதிலாக, தற்காலிக பாலம் அமைத்தமைக்கும் அங்கு புதிய பாலம் கட்டுவதற்காக 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றியினை சமர்ப்பணம் செய்கிறேன். மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு நன்றி. புலிவலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர்களின் சங்கத்திற்கு எவ்வளவு கொள்ளளவு உள்ள பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க உத்தேசித்துள்ளீர்கள்? அதன் மதிப்பீடு என்ன? இந்தச் சங்கமானது 23 வருடங்களாக இலாபகரமாக சிறப்பாக இயங்கி வருகின்றது. வரும் இலாபத்தில் பாதியை உறுப்பினர்களுக்குப் போனசாக வழங்கி வருகிறார்கள். 2002-ல் நானே நேரில் சென்று அந்த வறட்சியான காலகட்டத்தில் அந்த உறுப்பினர்களுக்குப் போனசைக் கொடுத்து வந்தேன். அங்கு நான் சென்றபோது, அங்கே இருக்கக்கூடிய அந்த உறுப்பினர்கள், நாங்கள் அனைவரும் சுயஉதவிக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளோம், நாங்கள் 2,160 உறுப்பினர்கள் உள்ளோம். தினமும் 4,500 லிட்டர் பால் ஊற்றுகிறோம். எங்களுக்கு மேலும் கட்டட வசதி வேண்டும் என்று கேட்டார்கள். நானும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தேன். ஆனால், திட்ட அலுவலர், பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்குக் கொடுக்க அரசு விதிமுறையில் இடம் இல்லை என்று கூறிவிட்டார். ஆகவே, மகளிர் நலனில் அக்கறை உள்ள அம்மாவின் அரசு வேறு ஏதேனும் ஒரு திட்டத்தில் கட்டட வசதி செய்து தர மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*



2006 ஜனவரி 18]

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்களிடம் கொள்முதல் செய்யப்படும் பாலின் தரத்தை உயர்த்தவும், பால் உற்பத்தியாளர்களுடைய பால் கறக்கும் நேரத்தினை அதிகாலை என்பதை காலை 6-00 மணி அளவிற்குக் கொண்டு வரவேண்டும் என்கிற அந்த நல்ல நோக்கத்தோடு 8 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நாள் ஒன்றுக்கு 4,71,000 லிட்டர் பால் குளிரூட்டும் வசதி ஏற்படுத்த ரூபாய் 12.4 கோடி செலவில் 121 இடங்களில் சங்க அளவில் மொத்த பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே திருச்சி ஒன்றியத்தில் 22 இடங்களில் நிறுவப்பட உள்ளன. குறிப்பாக முசிறி தொகுதியில், புலிவலம் ஊராட்சியில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ரூபாய் 15 இலட்சம் மதிப்பில் அமைக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற மகிழ்ச்சியான தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அந்தச் சங்கத்திற்குக் கட்டடம் வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தேவையான நிதி இருக்குமானால் பால் வளத் துறை ஆணையரின் அனுமதி பெற்று கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒரு வேளை அப்படி*

இல்லையென்றாலும் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொல்லி மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக அந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மல்லிகா சின்னசாமி.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**27—**

## தனிநபர் வருமானம்

*** 18438—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனிநபர் வருமானம் ஓராண்டுக்கு எத்தனை சதவிகிதம்?

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள மக்கள் தொகையில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் எத்தனை பேர் உள்ளனர்?

(இ) ஆம் எனில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களின் வருமானத்தைப் பெருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ): மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பின்படி தனிநபர் வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. 2002 ஆம் ஆண்டு வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் கணக்கெடுப்பு இன்னும் இறுதி செய்யப்படவில்லை.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி நபர் வருமானமும் தமிழ்நாட்டினுடைய மக்கள் தொகையும் அதிலே வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுடைய கணக்கெடுப்பும் நடத்தப்படாமல் ஒரு நாடு முன்னேறுகிறது, ஒரு மாநிலம் முன்னேறுகிறது என்று சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்க முடியும்? ஆகையால் அந்தக் கணக்கெடுப்பே இல்லாமல் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை எப்படி நிறைவேற்றப் போகிறோம்? அதற்குரிய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2002 முதல் 2007 வரை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் கணக்கெடுக்க உரிய வழிமுறைகள் மைய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் தனது 13-9-2002 தேதியிட்ட கடிதம், Q-16025/04/2002-ன்மூலம் அறிவித்தது. அதன்படி வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் கணக்கெடுப்பு பின்வரும் 13 அளவுகோல்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது:

பயன்பாட்டில் உள்ள நிலத்தின் அளவு, வீட்டின் தன்மை, சராசரியாக இருக்கும் உடுக்கும் உடை, உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம், வீட்டு உபயோகப் பொருட்களான தொலைக்காட்சி, வானொலி, மின்விசிறி முதலியன உள்ளதா, கல்வித் தகுதி, குடும்ப உழைப்பு நிலை, குடும்ப வருமானத்தின் தன்மை, குழந்தைகளின் நிலை, குடும்பத்தின் கடன் தன்மை, இடம் பெயர்ந்ததன் காரணம், அரசு உதவி தேவைப்படும் தன்மை. இக்கணக்கெடுப்பிற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தனிநபர் வருமானம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால், தனிநபரின் சமூகப் பொருளாதார அடிப்படையில் மதிப்பெண்ணின் மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் கண்டறியப்படுவர். இருப்பினும், தமிழ்நாடு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையில் 2004 ஆம் ஆண்டு அறிக்கையின்படி தனி நபர் ஆண்டு வருமானம் ரூபாய் 13,423 ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனத்திற்கு 4 மதிப்பெண்கள் என வழங்கப்பட்டு கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. 13 இனங்களில் அதனடிப்படையிலே பெற்ற மதிப்பெண்கள் வரிசைப்படுத்தப்பட்டு, மைய அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் கடிதத்தில் கூறப்பட்டுள்ள அளவுகோலின்படி, 16 மற்றும் அதற்குக் கீழாக மதிப்பெண்கள் பெற்றவர்கள் வறுமைக்

[2006 ஜனவரி 18

கோட்டிற்குக் கீழே உள்ளவர்களாகக் கருதப்படுவார்கள். மத்திய திட்டக் குழு அறிவித்துள்ள வறுமைக் கோட்டிற்கான குறியீட்டு விதிகளின்படி, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கப்படவேண்டியவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 26.77 இலட்சமாகும். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் 16 மற்றும் அதற்குக் கீழாக மதிப்பெண்கள் பெறப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 25.48 இலட்சமாகும். அவையே வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களாகத் தெரிவிக்க அரசுக்குக் கருத்துரு வரப்பெற்று, அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. இதனிடையே உச்சநீதிமன்றத்தில் இப்பொருள் குறித்து பொது நல வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டது. அது நிலுவையில் உள்ளதால், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியலை இறுதி செய்ய தடை உள்ளது. எனவே, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியலை இறுதி செய்ய முடியாத நிலை உள்ளது.

*முற்பகல் 10-50*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரிவான பதிலை அளித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும், ஒரு நாட்டினுடைய முன்னேற்றம், ஒரு முன்னோடி மாநிலம் என்று சொல்கிறபோது, எந்த அடிப்படையிலே அந்த மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம் என்பதை இன்னும் இந்த அரசு செயல்படுத்தவில்லை என்பதற்கான சான்றாகத்தான் அவருடைய அறிக்கை அமைந்திருக்கிறது. மேலும், இதை நிறைவேற்றிச் செயல்படுத்துவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உச்சநீதிமன்றத்திலே ஒரு பொது நல வழக்கு இருக்கிற காரணத்தினாலே இறுதி செய்யப்படவில்லை என்று சொல்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** அது இந்தியா பூராவும் இருக்கிற வழக்கு. தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியாவிலே இருக்கிற சில மாநிலங்களுக்கும் சேர்த்துதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், அது இந்தியா முழுவதும் இருக்கிற வழக்குதான்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதனாலே, அது தமிழ்நாடு மாநிலத்திற்கு என்று மட்டுமல்ல.



2006 ஜனவரி 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனாலே அமைச்சரை நீங்கள் குற்றம் சொல்லக்கூடாது.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, நமக்கு இல்லை, நமக்கு இல்லை. தமிழ்நாட்டிற்குக் கிடையாது, பிற பல மாநிலங்களிலும் இருக்கிறது. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**28—**

## சார்பதிவாளர் அலுவலகம்

*** 53774—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகம் புதிதாக கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்தின் அரசுக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. போதிய இடவசதி உள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி என்னும் அரக்கனை அழித்து, வெள்ளம் என்ற சூறாவளியை விரட்டி, தமிழகத்தை எல்லாத் துறைகளிலும் உயர்த்திக் காட்டி புதிய சகாப்தம் படைத்த உலகத் தமிழர்களின் ஒளிவிளக்காய் ஜொலித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கழுகுமலை குடவறை கோயில் அழகுபடுத்தும் பணிக்காக, தமிழக சுற்றுலா வளர்ச்சிக்

கழகத்தின்மூலமாக ரூ.48.60 இலட்சங்களை ஒதுக்கீடு செய்து சுற்றுலாத்தலத்தைச் சிறப்பாக அமைத்து, கழுகுமலையை பூஞ்சோலையாக மாற்றி 14–1–2006 அன்று, தமிழர் திருநாள் அன்று, கழுகுமலையில் அமைந்துள்ள கழுகாஸ்வரமூர்த்தி கோயிலிலே அன்னதானத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து, பக்தர்களின் வயிற்றில் பால் வார்த்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும், பக்தர்கள் சார்பாகவும் நன்றியினைக் காணிக்கையாகச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே சார்பதிவாளர் அலுவலகம் 1865 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு, 140 வருடங்களாக மிகப் பழமைவாய்ந்த ஒரு ஓட்டுக் கட்டடத்திலே செயல்பட்டு வருகிறது. இங்கு 35 கிராம மக்கள் பத்திரப் பதிவு செய்து வருகிறார்கள். ஆகையினால் அந்த ஆவணங்களைப் பாதுகாக்கக்கூடிய அளவில் அரசுக் கட்டடம், ஒரு புதிய கட்டடம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகம் ஊரின் பிரதான மையத்தில், அனைத்துத் தரப்பு மக்களும் வந்து போகும் வசதியான இடத்தில் அமைந்துள்ளது. மக்கள் அமர மற்றும் கணினிமயமாக்கப்பட்ட வசதியுடன் போதிய இட வசதி உள்ளது. கட்டடம் நல்ல நிலையில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக அரசுக் கட்டடங்களில் இயங்கிவரும் சார்பதிவகங்களைப் பொறுத்தவரையில், கட்டடங்கள் உறுதியிழந்து, பழுதுபார்க்க இயலாத நிலையில் உள்ள அரசுக் கட்டடங்களை இடித்துவிட்டு, புதிய கட்டடங்கள் முன்னுரிமை அடிப்படையில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒட்டப்பிடாரம் சார்பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில், மீண்டும் அதனுடைய உறுதித்தன்மையை பரிசோதனை செய்து, உறுதித்தன்மை இழந்திருந்தால் சார்பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, என்னுடைய தொகுதியில் உள்ள கழுகுமலை, கடம்பூர் ஆகிய இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்கள் தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கட்டடங்களையாவது அரசுக் கட்டடங்களாக மாற்றி, புதிய கட்டடங்கள் அமைத்துத் தர ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தனியார் கட்டடத்திலே இயங்கிவருகின்ற சார் பதிவாளர் அலுவலகங்களைப் படிப்படியாக அரசு கட்டடங்களிலே மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். நடப்பு நிதியாண்டில் 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் தனியார் கட்டடத்தில் இயங்கிவருகின்ற அலுவலகங்களை அரசுக் கட்டடத்தில் கட்டி நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை வருகின்ற நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் எல்லா துறை மக்களும் மிகவும் சந்தோஷத்தோடு வாழ்ந்து வருகின்ற இந்தக் காலத்தில், சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகம் ஏறத்தாழ 100 வருடங்கள் பழமைவாய்ந்தது. அதைச் சுற்றிலும் 100 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அந்தப் பகுதியில்தான் பதிவு செய்ய வரவேண்டும். அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்து ஒழுகுகிற நிலையிலே உட்காருவதற்கு இடமில்லாத நிலையிலே உள்ளது. அந்தக் கட்டடத்தைப் பழுதுபார்த்தோ அல்லது புதிய கட்டடம் கட்டவோ அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய சார்பதிவாளர் அலுவலகத்தினுடைய கட்டடத்தின் உறுதித் தன்மையைப் பரிசீலனை செய்து நடப்பாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2006 ஜனவரி 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஈரோட்டில் மாவட்டப் பதிவாளர் அலுவலகமும், சார்பதிவாளர் அலுவலகமும் வாடகைக் கட்டடத்திலே இயங்கிவருகின்றன. அந்த இரண்டு கட்டடங்களுக்கும் புதிய அரசு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நடப்பு நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29. திரு. சி. சிவசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**29—**

**தனி மாவட்டம்**

***74269—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருப்பூர் நகரை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஜனவரி 18]

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் என்பது 15 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய மிகப்பெரிய மாவட்டம் ஆகும். அந்த மாவட்டத்தில், கோவை மாநகருக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய நகரமாகத் திகழ்வது திருப்பூர் நகரமாகும். திருப்பூர் நகரம் மிகப்பெரிய ஏற்றுமதி தொழில் நகரம். அந்தத் திருப்பூர் நகரத்தில் மோட்டார் வாகன வரி வசூலாகட்டும் அல்லது மின் துறை கட்டணத்தினுடைய வரி வசூலாகட்டும் தமிழகத்திலேயே அதிகப்படியான வருவாய் உள்ள இடமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே, பொதுமக்களினுடைய வசதிக்காகவும், தொழிலினுடைய முன்னேற்றத்திற்காகவும் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு கோவை மாவட்டத்திலே இருக்கின்ற பல்லடம், பொங்கலூர், அவிநாசி, மேட்டுப்பாளையம் போன்ற தொகுதிகளையும், 10 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளடங்கிய ஈரோடு மாவட்டத்தில் இருக்கின்ற, திருப்பூருக்கு அருகில் இருக்கின்ற பவானிசாகர், பெருந்துறை சட்டமன்றத் தொகுதிகளையும் இத்தோடு இணைத்து ஒரு புதிய மாவட்டம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சட்டமன்ற, பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட உள்ளதாலும், 15-2-2004 முதல் நிர்வாக அலகுகளைப் பிரிக்கவோ அல்லது சேர்க்கவோ கூடாது என தடை விதித்து எல்லை வரம்பிடுதல் ஆணையம் ஆணையிட்டுள்ளதாலும், கோவை மாவட்டத்தைப் பிரித்தும், ஈரோடு மாவட்டத்தின் சில பகுதிகளைச் சேர்த்தும் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கக் கோரும் கோரிக்கை தற்போது ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைக்கின்ற சூழ்நிலை தற்போது இல்லாவிட்டாலுங்கூட, திருப்பூர் நகராட்சி என்பது மிகப்பெரிய நகராட்சியாக இருக்கின்ற காரணத்தினாலும், அதையொட்டி இருக்கின்ற பேரூராட்சிகளாக வேலம்பாளையம், நல்லூர் போன்ற பேரூராட்சிகள் எல்லாம் நகராட்சிகளாக உருவாகியிருக்கின்ற காரணத்தாலும், திருப்பூரை ஒரு

[2006 ஜனவரி 18

மாநகராட்சியாகவாவது அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி போடவேண்டிய இடம் வேறு. வினா எண் 30. திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**30—**

**கணினி மென்பொருள் உற்பத்தி மையம்**

*** 67557—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஈரோடு மாவட்டத்தில் கணினி மென் பொருள் உற்பத்தி மையம் அமைத்திடும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஆனால், தனியார் நிறுவனங்கள் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைக்க முன்வந்தால் அரசு அதனை ஊக்குவிக்கும்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசில்...

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கான அமைச்சரின் பதில் முடிகிறவரை வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசில் 10,730 கோடி ரூபாய் மென்பொருள் ஏற்றுமதி செய்து, 15,000 கோடி ரூபாய் என்று இந்த ஆண்டு இலக்கு நிர்ணயித்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய



2006 ஜனவரி 18]

அரசில் தமிழகத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு தொகுதி, சித்தோட்டில் உள்ள போக்குவரத்துப் பொறியியல் கல்லூரி வளாகத்தில் 350 ஏக்கருக்கும் மேலாக இடம் உள்ளது. ஈரோட்டைச் சுற்றியுள்ள வட்டாரப் பகுதிகளில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் உள்ள மாணவர் சமுதாயத்தின் வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றிவைத்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஈரோடு மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாணவர் சமுதாயத்தின் வாழ்க்கையில் ஒளிவிளக்கு ஏற்றுகின்றவகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மறுபரிசீலனை செய்து தனியார் நிறுவனங்களின்மூலம் ஈரோடு மாவட்டத்தில் கணினி மென்பொருள் உற்பத்தி செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, தனியார் மென்பொருள் நிறுவனங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்னென்ன சலுகைகள் வழங்குகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த அதாவது, I.T.E.S. Policy எந்தக் கொள்கையும் இல்லாத ஒரு நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு தெளிவான கொள்கையை வகுத்துத் தந்தார்கள். அந்த அடிப்படையிலே நிதிச் சலுகைகள், நிர்வாகச் சலுகைகள் மற்றும் I.T.E.S. சலுகைகள் என்று பல்வேறு சலுகைகள் அம்மா அவர்கள் அளித்து எந்த ஒரு தனியார் நிறுவனமும் I.T.-யோ அல்லது I.T.E.S.-யைச் சார்ந்த நிறுவனம் அமைப்பதற்கு முன்வந்தால் அவர்களுக்கு முழுமையான அளவிற்கு ஆதரவு கொடுத்து கரம் நீட்டி அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு எல்லாவிதமான ஒத்துழைப்பையும் அம்மா அவர்கள் கொடுத்து வருகின்றார்கள். எனவே, இந்த அடிப்படையில் கடந்த 1996–2001 ஆம் ஆண்டு வளர்ச்சி என்று பார்க்கும்போது 3116 கோடி ரூபாய், 2001 ஆம் ஆண்டு இறுதியிலே இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வந்த முழுமையான நடவடிக்கையின் காரணமாக, தெளிவான கொள்கையின் காரணமாக கிட்டத்தட்ட 10,830 கோடி ரூபாய் 2004–2005 ஆம் ஆண்டில் இருந்த மென்பொருள் ஏற்றுமதி இந்த ஆண்டு மார்ச் திங்கள் வரும்போது நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கையின் காரணமாக 15,000 கோடி ரூபாய் அளவிற்கு எட்டும் என்பதை நான் மிக

[2006 ஜனவரி 18

மகிழ்ச்சியோடு இங்கே கூறிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், முந்தைய 1996–2001 ஆம் ஆண்டு ஆட்சியிலே கிட்டத்தட்ட 757 நிறுவனங்கள் இருந்த சூழ்நிலையில், இன்றைக்கு 1200-க்கு மேற்பட்ட நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே, சென்னையிலே தங்களுடைய தொழில்களைத் தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு நிறுவனம் என்கின்ற அடிப்படையிலே இன்றைக்கு—கடந்த 2004–2005 ஆம் ஆண்டைப் பொறுத்தளவிலே, 400 நிறுவனங்கள் — மென்பொருள் நிறுவனங்கள் தொடங்கப்பட்டு கிட்டத்தட்ட 20 million sq.ft. 20 இலட்சம் சதுர அடிகள் இடத்தில் தங்களுடைய நிறுவனங்களின் வேலைகளைத் தொடங்கியிருக்கிறார்கள். எனவே இந்த நிலை இப்படி போகும்போது, அடுத்த ஒரு ஆண்டு காலத்தில் இன்னும் ஒன்றரை இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாவதற்கு நம்முடைய அம்மா அவர்கள் வழிவகுத்திருக்கின்றார்கள். எனவே, ஈரோடு மாவட்டம் அல்ல, எந்த ஒரு மாவட்டத்திலும் Tier-II cities அதாவது மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, அதேபோன்று திருச்சி போன்ற பெருமாநகரங்களில்கூட உருவாக்குவதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். தனியார் முன்வந்தால் நிச்சயமாக I.T. Policy மற்றும் I.T.E.S. Policy-யிலே, கொள்கையின் அடிப்படையிலே அவர்களுக்கு உதவிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### அனைத்து ஊராட்சி ஒன்றியத் தலைமையிடங்களில் பொருட்காட்சி மற்றும் ஊரக இளைஞர் விளையாட்டு விழாக்களை நடத்துதல் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் (குறுக்கீடுகள்) அது ஆளுநர் உரையிலே இருக்கிறது. நன்றாகப் படித்துப் பாருங்கள். பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



2006 ஜனவரி 18] [பேரவைத் தலைவர்]

அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், மணி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒத்திவைப்புத் தீர்மானம் எதுவும் இப்போது எடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஆளுநர் உரை மீதான விவாதத்திலே எதையும் பேசலாம். நீங்கள் பேச வேண்டிய கருத்துகளைப் பேசலாம். ஆகவே, எதையும் இப்போது எடுத்துக்கொள்ளவில்லை. பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–05

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை எழில் மிக்க சுற்றுலாத் தலங்களையும், பக்தர்கள் நாடிச் சென்று வழிபடும் திருத்தலங்களையும் ஏராளமாகக் கொண்டுள்ள மாநிலம் என்ற பெருமையைத் தமிழகம் பெற்றுள்ளது. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும், மாவட்டத்தின் ஒவ்வொரு பகுதியும் ஏதேனும் ஒரு வகையில் சிறப்புப் பெற்றதாகவே உள்ளன. இந்தச் சிறப்புகளை மையப்படுத்தி, தொழில்களைப் பெருக்கவும், வர்த்தகத்தை மேம்படுத்தவும் பொருட்காட்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகள் தற்போது மாநிலத் தலைநகரான சென்னையிலும் மற்றும் ஓரிரு மாவட்டங்களில், அம்மாவட்டத் தலைநகரங்களிலும் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சென்னை மாநகரிலும் மற்றும் மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களிலும் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள், கலை நிகழ்ச்சிகள், சிந்தனையைத் தூண்டும் தகவல்கள் நிறைந்த அரங்கங்கள் மற்றும் பல்வகைக் கடைகளுடன் நடத்தப்படும் பொருட்காட்சிகளை தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடத்த வேண்டுமென்று இந்தச் சட்டமன்றப் பேரவையில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்று, தமிழகத்தின் நகர்ப் பகுதிகளிலும், ஊரகப் பகுதிகளிலும் வாழுகின்ற அனைத்து மக்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்தகைய பொருட்காட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்று நான் முடிவெடுத்துள்ளேன். இதன்படி, தமிழகத்தின் அனைத்து

மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் தலைமை இடத்திலும் பொருட்காட்சிகள் நடத்த நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் பொருட்காட்சிகளை அரசின் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து நடத்தும். குறிப்பாக, விவசாய உற்பத்தியை வெகுவாகப் பெருக்கும் வகையிலான வேளாண் தொழில்நுட்பங்கள், ஊரகப் பகுதி மக்கள் பொருளாதாரத்தை மேம்படுத்த உறுதுணையாக நிற்கும் கால்நடைகள் குறித்த பல்வேறு விவரங்கள், நோய்கள் மற்றும் அவற்றை முன்கூட்டியே தடுக்கின்ற வழிவகைகள் குறித்த தகவல்கள், நகரங்களுக்கு இணையாக மேம்படுத்தப்பட்டுள்ள மருத்துவ வசதிகள் பற்றிய விவரங்கள், ஊரகத் தொழில் வளர்ச்சியால் மக்கள் பெறுகின்ற வசதிகள் மற்றும் நன்மைகள், சிறுதொழில் முனைவோருக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் அரசின் நலத் திட்ட உதவிகள் குறித்த விவரங்கள் ஆகியவற்றை விளக்கும் அரங்குகள் இப்பொருட்காட்சிகளில் இடம்பெறும். இதுவன்றி, சிறுகடைகள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகளை விற்பனை செய்யும் கடைகள், குடை ராட்டினம் மற்றும் ரங்க ராட்டினம் முதலான பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்கள், பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு நாடகங்கள் ஆகியன இந்தப் பொருட்காட்சிகளில் இடம்பெறும்.

ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் இந்தப் பொருட்காட்சி இம்மாதம், அதாவது, சனவரி 29 ஆம் தேதி தொடங்கப்பட்டு, ஒரு மாத காலம், அதாவது பிப்ரவரி 28 ஆம் தேதி வரை நடைபெறும். ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து மக்களும் இப்பொருட்காட்சியினைக் கண்டுகளிக்க வேண்டும், அதன்மூலம் பயன்பெற வேண்டும் என்பதால் இப்பொருட்காட்சிக்கு அனுமதி இலவசம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து வகை விளையாட்டுகளிலும் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக்கி, விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக தமிழகத்தை உருவாக்கிட வேண்டும் என்பதற்காக எனது அரசு பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் செயல்படுத்தி வருவதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்தகைய விளையாட்டு வசதிகள் நகர்ப்புறங்களில் வழங்கப்படுவதைப் போலவே, கிராமப்புறப் பகுதிகளுக்கும் கிடைக்கப்பெற வேண்டும். கிராமப்புறங்களில், திறமைகளைத் தேக்கி வைத்துக்கொண்டு,



வாய்ப்புகள் இல்லாததால் குடத்தில் இட்ட விளக்காக இருக்கும் மாணவர்களையும், மாணவிகளையும், இளைஞர்களையும், இளம் பெண்களையும் அடையாளம் கண்டு, அவர்களுக்குத் தேவையான ஊக்கத்தையும், உதவிகளையும் வழங்கிட வேண்டும் என்பது எனது எண்ணமாகும். இதனைச் செயல்படுத்தும் வகையில், ஊரக இளைஞர் விளையாட்டு விழாக்களை இப்பொருட்காட்சியுடன் இணைத்து நடத்திட நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரகப் பகுதிகளில் உள்ள இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் தங்களது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்திக் காட்டும் வகையில், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும். கிரிக்கெட், வாலிபால், கபடி, கோகோ முதலிய விளையாட்டுப் போட்டிகளும், ஓட்டப் பந்தயம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், வட்டு எறிதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், தடை தாண்டுதல் போன்ற தடகளப் போட்டிகளும் இந்த ஊரக விளையாட்டு விழாவில் நடத்தப்படும். இந்த விளையாட்டுப் போட்டிகள் சார் இளநிலை (Sub-Junior), இளநிலை (Junior), முதுநிலை (Senior) என்ற பல்வேறு பிரிவினருக்கும் தனித்தனியே நடத்தப்படும். மேலும், குழந்தைகள் பங்கேற்கும் சாக்கு ஓட்டப் பந்தயம் (Sack Race) போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்படும். இந்த விளையாட்டுப் போட்டிகள் பொருட்காட்சியின் நிறைவு நாட்களான 26–2–2006 மற்றும் 27–2–2006 ஆகிய இரு நாட்களில் நடத்தப்படும்.

முற்பகல் 11–10

ஒவ்வொரு போட்டியிலும் முதல், இரண்டு, மூன்று என்கிற நிலைகளைப் பெறுகின்ற வெற்றி வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் முதற் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசு என மூன்று பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். 28–2–2006 அன்று நடைபெறும் பொருட்காட்சியின் நிறைவு விழாவில் இந்தப் பரிசுகள் வழங்கப்படும்.

இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான உபகரணங்கள் அரசால் வழங்கப்படும். இந்த விளையாட்டு உணர்வு ஊரக விளையாட்டு விழாவுடன் நின்றுவிடாமல், தொடர்ந்து பயிற்சி பெற்று தங்களது திறமைகளை வளர்த்துக்கொள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இந்த உபகரணங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதற்கு ஏதுவாக, இந்த உபகரணங்கள், அந்தந்த ஊராட்சி நிர்வாகிகளின் பொறுப்பில் ஒப்படைக்கப்படும்.

மேலும், போட்டிகளில் பங்கேற்கும் அனைவரும் தொடர்ந்து துடிப்புடன் பயிற்சிகளில் ஈடுபட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு டி.ஷர்ட், ஒரு தொப்பி மற்றும் டிபன் பாக்ஸ் ஆகியவை இலவசமாக வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சென்னை மாநகரைப் போன்றே ஊரகப் பகுதிகளில் வாழ்ந்துவரும் மக்களும் பயன்பெறும் வகையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பொருட்காட்சி மற்றும் ஊரக விளையாட்டுப் போட்டிகள், ஊரக மக்களிடையே பெருத்த வரவேற்பைப்பெறும் என்று நான் திடமாக நம்புகிறேன் என்று கூறி அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடர்ச்சி. திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது கருத்துகளைச் சொல்வதற்கு அனுமதி வழங்கிய தங்களுக்கு முதலில் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 4 ஆண்டு காலமாக மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையிலே உரையாற்றியிருக்கிறார்கள். அந்த உரையினுடைய பக்கங்களோடு இந்த ஆண்டு ஆற்றிய உரையினுடைய பக்கங்களை ஒப்பிடும்போது, கூடுதலான எண்ணிக்கையில் மேதகு ஆளுநர் அவர்களது உரை இந்த ஆண்டு இந்த அவையிலே படிக்கப்பட்டு இருக்கிறது. கடந்த 4 ஆண்டு காலமாக இந்த அரசு எடுத்து வந்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், அதேபோன்று 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அறிக்கையினுடைய தொடக்கப் பகுதியில் சென்னை மாநகரமும், இந்த மாநிலமும் இதுவரை சந்தித்திராத வெள்ள நிவாரண நடவடிக்கைகள் சம்பந்தமான விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வெள்ள நிவாரண நடவடிக்கைகளைப்





பொறுத்தவரை அக்டோபர் மாதம் 27 – 28 தேதிகளில் சென்னை மாநகரம் இதுவரை சந்தித்திராத ஒரு கடுமையான மழை பெய்து, குறிப்பாக, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி, பூங்கா நகர் சட்டமன்றத் தொகுதி என்று, வடசென்னை மாவட்டம் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்தது. நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட கடுமையான மழையின் காரணமாக, செம்பரம்பாக்கம் ஏரியிலே ஏற்பட்ட கூடுதல் நீரினுடைய அளவின் காரணமாக, சென்னை மாநகரத்திலே ஓடக்கூடிய பல ஆறுகளில் தண்ணீர் கூடுதலாக வந்த காரணத்தால், தென் சென்னை மாவட்டம் கடுமையான பாதிப்புகளை சந்தித்த நிலைமை சென்னை மாநகரத்திலே ஏற்பட்டது.

வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் சென்னை மாநகராட்சி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் எல்லோரும் அந்தத் தொகுதியைப் பார்வையிடுவதற்காக வருவதற்குக்கூட மூன்று, நான்கு தினங்கள் காத்திருக்கவேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. ஏனென்றால், வியாசர்பாடி இரயில்வே மேம்பாலமாக இருந்தாலும் சரி, கணேசபுரம் இரயில்வே உட்கடவாக இருந்தாலும் சரி, பெரம்பூர் இரயில்வே உட்கடவாக இருந்தாலும் சரி, இந்தப் பகுதிகளில் எல்லாம் கடுமையான வெள்ள நீர் சூழ்ந்த காரணத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திப்பதற்குக்கூட வரமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது. கடந்த காலத்தில் 2002 ஆம் ஆண்டு இதேபோல ஒரு வெள்ளம் சென்னை மாநகரத்திலே ஏற்பட்டபோது, அன்றைக்குப் பார்வையிடுவதற்காக வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்று அறிவித்தார்கள். அறிவிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பின்பும்கூட அந்த இரயில்வே மேம்பாலம் கட்டப்படாத காரணத்தால், கடந்த ஆண்டு பெய்த கடுமையான மழையின் காரணமாக மீண்டும் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி ஒரு தீவைப் போல காட்சியளிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது. இதுபோன்ற நிலைமைகள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம், கணேசபுரம் இரயில்வே மேம்பாலம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்ட பெரம்பூர் இரயில்வே மேம்பாலத்தையும் உடனடியாக கட்டுவதற்கு நிதி ஒதுக்கீட்டை உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று வெள்ள நிவாரண நடவடிக்கைகள்

அனைவரையும் சென்றடையும் வகையில் நன்கு வடிவமைக்கப்பட்டு மற்றும் தாராளமான நிவாரண திட்டத்தை இவ்வரசு அறிவித்து செயல்படுத்தியது என்று ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11–15*

நான் தொடக்கத்தில் சுட்டிக்காட்டியதுபோல, அக்டோபர் மாதம் 27, 28 தேதிகளிலே பெய்த கடுமையான மழையின் காரணமாக மக்கள் சந்தித்த சிரமத்தைவிட, மாநில அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட வெள்ள நிவாரண நிதிகளை, உதவிகளைப் பெறுவதற்கு கூடுதல் சிரமங்களை சென்னை மாநகர மக்கள் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நவம்பர் மாதம் 6–ஆம் தேதி என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே அரசு அம்பேத்கர் கலைக் கல்லூரியில் கூட்ட நெரிசலில் சிக்கி 6 பெண்கள் மரணம் அடைந்த ஒரு கோரம் ஏற்பட்டது. 18–12–2005 ஆம் தேதியிலே எம்.ஜி.ஆர். நகரில் இருக்கக்கூடிய பேரறிஞர் அண்ணா மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் அதேபோன்று ஒரு கூட்ட நெரிசலில் 42 பேர் மரணம் அடையக்கூடிய ஒரு சோகம் ஏற்பட்டது. நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது 6–11–2005–ல் அரசு அம்பேத்கர் கலைக் கல்லூரியிலே இதுபோன்று ஒரு கூட்ட நெரிசலில் 6 பேர் வெள்ள நிவாரணத்தைப் பெறுவதற்காக வந்தபோது மரணம் அடைந்தார்கள் என்றால், இந்த அரசாங்கம் அந்த மரணத்தை ஒரு பாடமாகக் கற்றுக்கொண்டு அதுபோன்ற மரணங்கள் தொடர்ச்சியாக நிகழாமல் தடுத்திருக்க வேண்டும். அனைவரையும் சென்றடையும் வகையில், நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் தாராளமான நிவாரணத் திட்டத்தை இவ்வரசு அறிவித்து செல்படுத்தியது என்று ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டமாக இருந்தால், ஒரு குறிப்பிட்ட பள்ளிக்கூடத்தில் 4 ஆயிரத்திற்கும் அதிகமாக குடும்ப அட்டைதாரர்கள் இரவோடு இரவாக கூடுவதற்கான நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதை இந்த மாநில அரசு சிந்தித்து....

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 18–12–2005 அன்று ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 42 பேர் உயிரிழந்தனர். 37 பேர் காயமடைந்தனர். இந்த நிகழ்வுக்கான காரணம் பற்றி விசாரித்து அரசுக்கு அறிக்கை அளிக்க ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி, நீதியரசர் திரு. ஆர். ராமன் அவர்கள் விசாரணை ஆணையமாக செயல்பட



18–12–2005 அன்றே நியமிக்கப்பட்டுள்ளார். எனவே, கூட்ட நெரிசலில் உயிரிழப்பு தொடர்பான சம்பவம் குறித்து இந்த மாமன்றத்தில் பேசுவது சரியில்லை என்றாலும், இந்தப் பிரச்சினையை எதிர்க்கட்சியினர் இங்கே திரும்பத் திரும்ப பேசுகின்ற காரணத்தால், இதற்குரிய விளக்கத்தைக் கூறுவது எனது கடமையாகிறது.

தமிழகத்தில் முன் ஒருபோதும் இல்லாத வகையில் 2005 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கடைசி வாரத்தில் தொடங்கி டிசம்பர் மாதம் 2–வது வாரம் முடிய அடுத்தடுத்து தொடர்ந்து பெய்த கன மழையின் காரணமாக 22 மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்த 22 மாவட்டங்களைச் சேர்ந்த வெள்ள பாதிப்புக்கு உள்ளான அனைவருக்கும் நிவாரண உதவிகள் கிடைத்திட நான் நடவடிக்கை மேற்கொண்டேன்.

சாதாரணமாக குடியிருந்த வீடு முழுவதுமாகவோ, பகுதியாகவோ சேதம் அடைந்தவர்களுக்கு மட்டுமே நிவாரணத் தொகுப்பு உதவிகள் வழங்கப்படும் என்ற நிலையை முற்றிலும் மாற்றி, குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டிருந்தாலோ, குடியிருப்புப் பகுதிகளில் ஒரு நாளேனும் வெள்ளம் சூழ்ந்திருந்தாலோ, குடியிருப்புப் பகுதிகளைவிட்டு மக்கள் வெளியேற்றப்பட்டு, நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தாலோ அப்பகுதிகளைச் சேர்ந்த அனைவருக்குமே வெள்ள நிவாரணத் தொகுப்பு உதவி வழங்கிட வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன்.

தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவி தேவைப்படும் இக்கட்டான நேரத்தில் தொகுப்பு உதவிகள் பாரபட்சம் இன்றி அனைவருக்கும் கிடைப்பதை நான் நேரிடையாக உறுதி செய்தேன். வேறு எந்த ஒரு அரசும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் இவ்வளவு தாராள மனப்பான்மையோடு கணிசமான தொகுப்பு உதவி அளித்ததில்லை என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சென்னையில் ஒரு தெரு பாதிக்கப்பட்டிருந்தால், வீடு வீடாகக் கணக்கெடுக்கும் வழக்கமான சிக்கல் மிகுந்த நடைமுறையை பின்பற்றாமல், வெள்ள நீர் சூழ்ந்ததால், வீட்டை விட்டு வெளியேற முடியாமல் பாதிக்கப்பட்ட தரைத் தளத்திற்கு மேல் வசிப்பவர்கள் உள்ளிட்ட

அத்தெருவில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் நிவாரணத் தொகுப்பு உதவி அளிக்கப்பட வேண்டுமென நான் ஆணையிட்டேன். வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இத்தகைய தாராளமான, விரைவான அணுகுமுறை பின்பற்றப்படவில்லை. மேலும், ஒரு குடியிருப்பு அல்லது ஒரு வார்டில் ஒரே ஒரு நாள் வெள்ள நீர் சூழப்பட்டிருந்தாலும், அப்பகுதியில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் நிவாரண உதவி அளித்திட தெளிவான வழிமுறைகளை நான் அளித்தேன். இந்தத் தாராள கொள்கையினாலேயே நான் வழங்கும் இந்த நிவாரணத் தொகுப்பு உதவியை இதுவரை இல்லாத அளவுக்கு தமிழகம் முழுவதும் 33 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெற்றுள்ளன. சென்னையில் மட்டும் இதுகாறும் இல்லாத அளவாக 6.61 இலட்சம் குடும்பங்கள் இதுவரை வெள்ள நிவாரண தொகுப்பு உதவி பெற்றுள்ளன.

*முற்பகல் 11–20*

ஐந்து முறை பெய்த தொடர் மழை மற்றும் ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு ஆகியவற்றால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மக்களை உடனடியாக மீட்டு, போர்க்கால அடிப்படையில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள எனது அரசு ஏடுத்துவரும் நடவடிக்கைகளை நல்மனம் கொண்ட எல்லோரும் பாராட்டுகின்றனர். மேதகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர், வெள்ள பாதிப்புகளை பார்வையிட வந்த மத்தியக் குழு, ஊடகங்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரின் ஏகோபித்த பாராட்டை எனது தலைமையிலான தமிழக அரசு (மேசையைத் தட்டும் ஒலி) பெற்றுள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

மக்களின் முழு ஒத்துழைப்போடு நிவாரண உதவி அளிக்கின்ற இந்த அசாதாரணமானதும், மிகப் பெரிய அளவிலானதுமான பணி, மிகத் துரிதமாக மேற்கொண்டு, வெள்ள நிவாரணப் பணிகளில் அபார சாதனை படைத்த என்னுடைய அரசுக்கு அவப்பெயரையும், களங்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், என்னுடைய அரசின் மீது கடும் பகைமை கொண்டுள்ள எனது அரசியல் எதிரிகளின் ஆதரவோடு, சில தீய, சமூக விரோத விஷமிகள் கண்டிக்கத்தக்கதும், அருவருக்கத்தக்கதுமான சம்பவங்களைத் திட்டமிட்டு, கொடிய முறையில் அரங்கேற்றினர்.



Vultures என்னும் வல்லூறுகள், பிணம் தின்னிக் கழுகுகள், ஏதாவது பிணங்கள் கிடைக்காதா, கொத்தித் தின்னமாட்டோமா என்று வானத்திலே வட்டமிட்டு பறப்பதைப்போல, ஏதாவது அசம்பாவிதம் நிகழாதா, அதை வைத்து அரசியல் பண்ண முடியாதா என்று சிலர், குறுகிய அரசியல் நோக்கத்திலும், அடுத்தவர் இழப்பில் ஆதாயம் தேடும் போக்கிலும் ஈடுபடுவது உள்ளபடியே அதிர்ச்சி அளிப்பது ஆகும். இந்தக் கெடுமதியாளர்கள் வெள்ள நிவாரணத் தொகுப்பு உதவிகள் வழங்குவதில் என்னுடைய அரசுக்குக் கிடைத்து வருகின்ற நற்பெயரைக் கண்டு, பொறுக்கமாட்டாமல், பொறாமைத் தீயில் புழுங்கித் தவித்து, ஈவு இரக்கமற்ற முறையில், தீய நோக்கத்துடன், திட்டமிட்டு வீண் வதந்திகளைப் பரப்பி, மனித உயிர்களை பலி கொள்கிற அளவுக்கு தரம் தாழ்ந்து செயல்பட்டிருப்பது கண்டு தமிழ் கூறும் நல் உலகு வெட்கித் தலை குனிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

6–11–2005 அன்று சென்னை வியாசர்பாடியில் ஒரு சம்பவம்; அதில் 6 பேர் மரணம். 18–12–2005 அன்று சென்னை எம்.ஜி.ஆர். நகரில் ஒரு சம்பவம்; அதில் 42 பேர் மரணம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அவர்களது வாழ்க்கையை மறுசீரமைத்துக்கொள்ள வகை செய்யும் தொகுப்பு உதவி அளிக்கப்படும் என்று நான் திரும்பத் திரும்ப உறுதிபடக் கூறினேன். பாதிக்கப்பட்ட எந்த ஒரு குடும்பமும் விடுபட்டுப் போகாது என மக்களுக்கு நான் திரும்பத் திரும்ப உறுதி அளித்தேன். ஒருவர்கூட விடுபட்டுப் போகாமல் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிவாரண உதவி கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதே எனது குறிக்கோள் என்று ஊடகங்களுக்கு அளித்த பேட்டிகள் வாயிலாகவும், பத்திரிகைச் செய்திகள் வாயிலாகவும் திரும்பத் திரும்ப தெளிவுபடத் தெரிவித்தேன். பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரண உதவி கிடைக்காமல் போய்விடுமோ என்ற கவலையோ, அச்சமோ கொள்ளத் தேவையில்லை என்பதை வலியுறுத்திக் கூறினேன். இத்தனைக்குப் பிறகும் இத்தகைய நெஞ்சைப் பிளக்கும் இந்த சோகச் சம்பவங்கள் அரங்கேற என்ன காரணம்?

நிவாரணத் தொகுப்பு உதவி பெறுவதற்கான டோக்கன்கள் மற்றும் நிவாரண உதவிகள் வழங்கும் பணி, நிவாரண உதவி மையங்களில், காலை 9 மணிக்குத்தான் தொடங்கும். ஆனால், சென்னை,

வியாசர்பாடியில் சில விஷமிகள், 6–11–2005 அன்று, அதிகாலை 4–30 மணி அளவிலேயே நிவாரணப் பொருட்கள் வழங்கும் மையத்திற்குச் சென்று நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும், இல்லையென்றால் கிடைக்காமல் போய்விடும் என்று ஒரு அபாயகரமான வதந்தியை வேண்டுமென்றே பரப்பினர். இதன்விளைவாக, அதிகாலை 4–30 மணி அளவிலேயே 3,000 பேருக்கு மேற்பட்டோர் திரண்ட காரணத்தால் ஏற்பட்ட நெரிசலில் 6 பேர் உயிர் இழந்தனர்.

இந்த நிகழ்வுக்குப் பின்னர், நான் அதிகாரிகளுடன் விரிவான ஆலோசனை நடத்தி, நிவாரணப் பொருட்கள் வழங்கும் முறையை மேலும் சீர்படுத்தி பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்தேன். இதன்படி, நிவாரண டோக்கன்கள் மற்றும் நிவாரணத் தொகுப்பு உதவிகள் வழங்கப்படும் எந்த ஒரு கவுன்டரிலும், ஒரு நாளில், 500 பேருக்கு மட்டுமே நிவாரணத் தொகுப்பு உதவிகள் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டது. எந்தெந்த நாட்களில் எந்தெந்தத் தெருக்களைச் சேர்ந்த மக்களுக்கு, எந்தெந்த நிவாரண உதவி மைய கவுன்டர்களில் உதவிகள் வழங்கப்படும் என்ற விவரமும் மிகத் தெளிவாக அறிவிக்கப்பட்டது.

முற்பகல் 11–25

சென்னை மாநகரில், கிண்டி மற்றும் மாம்பலம் வட்டம் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அதற்கெனக் குறிப்பிடப்பட்ட பல்வேறு நிவாரண மையங்களில் 17–12–2005 மற்றும் 18–12–2005 ஆகிய நாட்களில் வழங்குவது எனவும், அந்த நிவாரணப் பொருட்களைப் பெறுவதற்கான டோக்கன்களை 107 அரசு உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகளில் வழங்குவது எனவும், டோக்கன்களைப் பெற்றவர்களுக்கு நிவாரணப் பொருட்களை 17–12–2005 மற்றும் 18–12–2005 ஆகிய தேதிகளில் 28 நிவாரண மையங்களில் வைத்து வழங்குவது எனவும், மாவட்ட நிர்வாகத்தால் திட்டமிடப்பட்டது.

17–12–2005 அன்று 68,000 குடும்பத்தினருக்கு டோக்கன்கள் வழங்கப்பட, சுமார் 62,000 குடும்பத்தினர் எந்தவிதமான பிரச்சினையும் இன்றி நிவாரணப் பொருட்களைப் பெற்றுச் சென்றனர். 18–12–2005 அன்றும் 71,000 குடும்பத்தினருக்கு டோக்கன்கள் வழங்குவதற்காகவும், நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காகவும் அதேபோன்று ஏற்பாடுகள் செய்யப்பட்டன.



சென்னை எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்த மூன்று நியாய விலைக் கடைகள் குறுகிய சாலைகளில் அமைந்துள்ள காரணத்தால் மக்கள் எந்த சிரமமுமின்றி நிவாரண உதவிகளைப் பெறுகின்ற வகையில், அந்த நியாய விலைக் கடைகளில் பதிவு செய்துள்ள குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்குரிய வெள்ள நிவாரண டோக்கன்களை அருகில் உள்ள போதிய இட வசதியுடன்கூடிய அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் வைத்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மூன்று நியாய விலைக் கடைகளுக்குரிய 8,566 குடும்பங்களுக்கும் டோக்கன்கள் மற்றும் நிவாரணத் தொகுப்பு உதவிகளை 17–12–2005 மற்றும் 18–12–2005 ஆகிய இரண்டு நாட்களில் பிரித்து வழங்கிடவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், நெருக்கடியைத் தவிர்க்க 9 கவுன்டர்கள் அமைக்கப்பட்டு ஒரு கவுன்டருக்கு 500 பேருக்கு மட்டுமே டோக்கன்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதைத் தவிர, இந்த இரு தினங்களிலும் நிவாரண உதவி பெற வர முடியாதவர்கள், வேறு நாட்களில் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்கின்ற வசதியும் செய்யப்பட்டது. எந்தெந்தத் தெருக்களுக்கு, எந்தெந்த கவுன்டர்களில் டோக்கன்கள் வழங்கப்படும் என்பதையும், காலை 9 மணி முதல் டோக்கன்கள் வழங்கும் பணி தொடங்கும் என்பதையும் ஒலிபெருக்கி வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் சம்பந்தப்பட்ட தெருக்களில் முன்னறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது.

எனினும், சில விஷமிகள் பரப்பிய வதந்தியை நம்பி, 18–12–2005 அன்று அதிகாலை சுமார் 3–30 மணி அளவில், எம்.ஜி.ஆர். நகர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 4,000 பேர் எம்.ஜி.ஆர். நகர், கோவிந்தசாமி தெருவில் உள்ள அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு முன்பாக குழுமினார்கள். பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல் அலுவலர்கள் அந்தக் கூட்டத்தினரை ஒழுங்குபடுத்தி வரிசையில் நிற்க வைத்தனர். அதிகாலை சுமார் 4–00 மணியளவில் திடீரென பெருமழை பெய்தது. திடீரென்று மேற்படி கூட்டத்தினர் பள்ளியின் வாயிலைத் தள்ளிவிட்டு காவல் பாதுகாப்பு அரணையும் உடைத்துத் தள்ளிவிட்டு, காவல் துறையினரின் அறிவுரையையும் பொருட்படுத்தாமல் பள்ளிக் கட்டடத்திற்குள் வருவதற்காக வேகமாக வந்தனர்.

இந்த நெரிசலில் 20 பெண்கள் உட்பட 42 பேர்கள் இறந்து போயினர். 17 பெண்கள் உட்பட 37 பேர்கள் மற்றும் 17 காவல் அலுவலர்கள்

ஆகியோர் காயங்களுற்று, அரசு பொது மருத்துவமனை மற்றும் அரசு ராயப்பேட்டை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர்.

நெஞ்சைப் பிளக்கும் இந்த சோகச் சம்பவத்தால், தாங்கொணாத வேதனைக்கும் கடும் துயருக்கும் ஆளாகிய நான் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று உயிர் இழந்தவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறியதுடன், காயமுற்றோரிடம் நேரில் நலம் விசாரித்து, அவர்களுக்குச் சிறப்பான சிகிச்சை அளிக்கும்படி மருத்துவ அதிகாரிகளை அறிவுறுத்தினேன்.

இது சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் வழக்கொன்று ஆர்-10 எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலைய குற்ற எண் 747/2005, பிரிவு 174 கு.வி.மு.ச. படி பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கின் புலன் விசாரணையில் 130-வது வார்டு தி.மு.க. மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் கே. தனசேகரன் தனது சகாக்களான செந்தில், ரவி, ராமமூர்த்தி மற்றும் ஜோசப் ஆகியோரோடு குற்றச் சதித் திட்டம் தீட்டி, 18-12-2005 அன்று அதிகாலை நேரத்திலேயே எம்.ஜி.ஆர். நகரில் உள்ள அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் உள்ள நிவாரணம் வழங்கும் இடத்தில் மக்களைக் குழுமிடத் தூண்டும் வண்ணமாகவும் மற்றும் வெள்ள நிவாரண உதவிகள் மூலமாகப் பயனடைவோரின் மனதில் பீதியையும், குழப்பத்தையும் உருவாக்கிடவும் வதந்திகளைப் பரப்புவது என முடிவு செய்தனர் எனத் தெரிய வந்தது.

முற்பகல் 11-30

அவர்கள் தங்களது குற்றச் சதித் திட்டத்தின் தொடர்ச்சியாக, வேண்டுமென்றே கீழ்க்கண்ட வதந்திகளைப் பரப்பியுள்ளனர்:

(1) 18-12-2005-தான் டோக்கன்கள் வழங்குவதற்கான கடைசி நாள்.

(2) குறிப்பிடப்பட்டுள்ள காலை 9-00 மணிக்கு மாறாக டோக்கன்கள் 18-12-2005 அன்று அதிகாலை நேரத்திலேயே வழங்கப்பட உள்ளது.

(3) நிவாரணப் பொருட்கள் பற்றாக்குறையாக உள்ளதால் டோக்கன்கள் முதலில் வருபவருக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கப்பட உள்ளது.

இத்தகைய வதந்திகளை எம்.ஜி.ஆர். நகர், கோவிந்தசாமி தெருவில் உள்ள டீக்கடை, கே.கே. நகர் பேருந்து நிலையம் மற்றும் பள்ளியின்



முன்புறம் போன்ற இடங்களில் குழுமியிருந்த மக்களிடையே பரப்பி, அதன் மூலமாக அவர்களின் மனதில் பீதியையும், குழப்பத்தையும், தெளிவற்ற நிலையையும் இவர்கள் ஏற்படுத்தி உள்ளனர்.

இவ்வாறு, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தனசேகரன் தனது சகாக்களான செந்தில், ரவி, ராமமூர்த்தி மற்றும் ஜோசப் ஆகியோருடன் பரப்பிய வதந்திகளின் காரணமாக, 18-12-2005 அன்று அதிகாலை 3-30 மணி அளவிலேயே சுமார் 4,000 பொதுமக்கள் எம்.ஜி.ஆர். நகர், கோவிந்தசாமி தெருவில் உள்ள அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியின் முன்பு குழுமினார்கள். தொடர்ந்து தனது சகாக்களுடன் சேர்ந்து தீட்டிய சதித் திட்டத்தினை நிறைவேற்றிடும் வண்ணமாக, தனசேகரன் தனது சகாக்கள் செந்தில், ரவி, ராமமூர்த்தி மற்றும் ஜோசப் ஆகியோரோடு 18-12-2005 அன்று அதிகாலை 3-45 மணியளவில் எம்.ஜி.ஆர். நகர், கோவிந்தசாமி தெருவில் உள்ள அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு வந்துள்ளார். அந்த இடத்தில் குழுமியிருந்த பொதுமக்களின் மனதில் குழப்பத்தையும், தெளிவற்ற நிலையையும் ஏற்படுத்திடும் நோக்கத்துடனும், அங்கு கூட்ட நெரிசலை ஏற்படுத்திடும் வகையிலும், தனசேகரன் தனது சகாக்கள் செந்தில், ரவி, ராமமூர்த்தி மற்றும் ஜோசப் ஆகியோருடன் பொதுமக்களைத் தூண்டிவிடும் வண்ணமாக, "டோக்கன் கொடுக்க வந்துட்டாங்க, உள்ளே போய் இடம் பிடிங்க" என்று கூறியுள்ளார். அதிகாலை சுமார் 4-00 மணியளவில் திடீரென மழை பெய்திடவே, ராமமூர்த்தி, ஜோசப் ஆகிய தனசேகரனின் நெருங்கிய சகாக்கள் தண்ணீர் தொட்டியின்மீது ஏறி பள்ளிக்குள் நுழைந்து பூட்டப்பட்டிருந்த பிரதான வாயிலைத் திறக்க முயற்சித்துள்ளனர். அதேநேரத்தில் மக்களின் பெரும் கூட்டம் காவல் அலுவலர்களின் அறிவுரையைப் பொருட்படுத்தாமல் வேகமாக முன்னேறி வந்து பள்ளி வளாகத்திற்குள் உள்ளே செல்ல முயற்சிக்க, அவர்களது பெருத்த அழுத்தத்தின் காரணமாக அந்தக் கதவு வழிவிட்டுத் திறக்க, கூட்டத்தினர் ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டும், தள்ளிவிட்டுக் கொண்டும் முன்னேறிச் செல்ல, அதன் காரணமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டு 42 அப்பாவி பொதுமக்கள் இறந்துபோக நேரிட்டது.

இதன் காரணமாக, வழக்கின் சட்டப் பிரிவானது இ.த.ச. பிரிவுகள் 147, 109, 120 (பி) 304, 323 மற்றும் 325-ஆக மாற்றம் செய்யப்பட்டது. வழக்கின் புலன் விசாரணையின்போது தனசேகரன் 20-12-2005 அன்று கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் சென்னை, சைதாப்பேட்டை, 23-வது பெருநகர குற்றவியல் நடுவர் முன்பாக ஆஜர்படுத்தப்பட்டு,

3–1–2006 வரை சென்னை, மத்திய சிறையில் காவல் கைதியாக அடைக்கப்பட்டார்.

காவல் கைதி தனசேகரன் ஆர்.10 எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலைய குற்ற எண் 747/2005 வழக்கில் சென்னை, முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் முன்பாகக் குற்றப் பல்வகை மனு எண் 10913/2005–ல் ஜாமீன் கோரும் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிக்க, தனசேகரன் தினமும் காலை 10–00 மணிக்கு நாகர்கோவில், தலைமை நீதித் துறை நடுவர் முன்பாக ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனையுடன் கூடுதல் அமர்வு நடுவர் 26–12–2005 அன்று அவருக்கு ஜாமீன் வழங்கினார். மாநில அரசு மேற்படி ஜாமீனை ரத்து செய்யக் கோரியும், மேற்படி ஜாமீன் ஆணைக்கு தடை விதிக்கக் கோரும் கோரிக்கையுடனும் உயர் நீதிமன்றத்தின் முன்பாக மனுவைத் தாக்கல் செய்திட, 27–12–2005 அன்று கூடுதல் அமர்வு நடுவர் அவர்களின் ஆணையை தற்காலிகமாக ரத்து செய்து இடைக்கால ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 5–1–2006 அன்று உயர்நீதிமன்றம், மாநில அரசு தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்து, கூடுதல் அமர்வு நடுவர் பிறப்பித்த ஜாமீன் உத்தரவை உறுதி செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

தனசேகரன் தமிழ்நாடு சட்டம் எண் 14/1982–ல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு, அவருக்கு 29–12–2005 அன்று தடுப்புக் காவல் ஆணை சென்னை. மத்திய சிறையில் சர்வ் செய்யப்பட்டது.

முற்பகல் 11–35

இதற்கிடையில், காவல் துறையினர், தலைமறைவாக இருந்து வருகின்ற ஏனைய எதிரிகளான செந்தில், ரவி, ராமமூர்த்தி மற்றும் ஜோசப் ஆகியோரைப் பிடிக்க விரிவான முயற்சிகளை எடுத்து வருகின்ற நிலையில், அவர்கள் சென்னை, முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் முன்பாக 3–1–2006 அன்று முன்ஜாமீன் கோரும் மனுவைத் தாக்கல் செய்தனர். அம்மனு மீதான விசாரணை 18–1–2006 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

18–12–2005 அன்று வெள்ள நிவாரண தொகுப்பு உதவிக்கான டோக்கன்களைப் பெற சென்னை எம்.ஜி.ஆர். நகரில் உள்ள அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வளாகத்தின் வெளியே மக்கள் கூடியிருந்தபோது ஏற்பட்ட நெரிசலில் 42 பேர் மரணமடைவதற்கும், 37 பேர் காயம் அடைவதற்கும் காரணமாய்



அமைந்த காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்தும், பொழுது விடிவதற்கு முன்னதாகவே, அதாவது ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த காலை 9 மணிக்கு மிக முன்னதாக விடியற்காலைக்கு முன்னதாகவே, நிவாரணத் தொகுப்பு உதவிகள் வழங்கும் பணி தொடங்கப்பட்டுவிடும் என்றும், நிவாரணத் தொகுப்பு உதவிகள் பெற்றுக்கொள்வதற்கு அன்றுதான் கடைசி நாள் என்றும், நிவாரணப் பொருட்கள் தட்டுப்பாடாக உள்ளன என்றும், எனவே, முதலில் வருபவர்களுக்குத்தான் நிவாரண உதவிகள் கிடைக்கும் என்றும், இரவு நேரத்தில் வேண்டுமென்றே வதந்திகள் பரப்பப்பட்டது குறித்தும், 18–12–2005 அன்று சென்னை எம்.ஜி.ஆர். நகர் அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் டோக்கன்கள் வழங்கப்படுவதற்கு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தனவா என்பது குறித்து விசாரணை மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அளிக்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி நீதியரசர் ஆ. ராமன் அவர்கள் விசாரணை ஆணையமாக செயல்பட நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த விசாரணை ஆணையம் வருங்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்தும் தனது கருத்துகளை அரசுக்குத் தெரிவிக்கும். ஆகவே இங்கே பேசிய மாமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், அரசின் அஜாக்கிரதையாலோ அலட்சியத்தாலோ இந்தத் துரதிருஷ்ட வசமான சம்பவம் நடைபெறவில்லை. ஒரு சதித் திட்டம் தீட்டி வேண்டுமென்றே அரசின் எதிரிகள் இந்தக் கோர சம்பவத்தை நிகழ்த்தியுள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர் கேளுங்கள். திரு. ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருவர் கேளுங்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் கேளுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசுகிறார் அல்லவா? (குறுக்கீடுகள்) யாராவது ஒருவரைப் பேச விடுங்கள் இப்போது.

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எம்.ஜி.ஆர். நகரிலே நடைபெற்ற கோர சம்பவத்தைக் குறித்தும், வியாசர்பாடியிலே நடைபெற்ற சம்பவத்தைக் குறித்தும் நீண்ட அறிக்கையை வாசித்திருக்கிறார்கள். இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலேயும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாரை நான் நேரிலே போய்ச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் வளர்மதி அவர்களும்கூட அங்கே இருந்தார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, முதலமைச்சர் ஒரு பகுதியிலே படிக்கும்போது 500 பேருக்குத்தான் ஒரு நாளைக்கு டோக்கன் வழங்க வேண்டும் என்று பிறகு நான் ஆணையிட்டேன் என்று சொல்லியிருக்கிறார். இந்த ஆணையை முதலிலேயே பிறப்பித்திருந்தால் இந்த அசம்பாவிதம் நடைபெற்றிருக்காது. ஆனால் தவறுகள் அரசாங்கத்தின்மீது இருக்கும்போது, மாவட்ட ஆட்சித் தலைவரை மாற்றிவிட்டு, Deputy Commissioner of Police அவர்களை மாற்றிவிட்டு, அந்தப் பகுதி இன்ஸ்பெக்டரையும் மாற்றிவிட்டு, ராமன் கமிஷனையும் நியமித்துவிட்டு, அதற்குப் பிறகு பழியை யார்மீதாவது சுமத்த வேண்டும் என்பதற்காக தனசேகரன்மீது இப்போது வழக்குப் போட்டார்கள். தனசேகரனை நீதிமன்றம், காவல் துறையினர் போட்ட வழக்கு முறையாக இல்லை, அவர் நிரபராதி என்று ஜாமீனிலே விட்டது. மூன்று மணி நேரத்திலே மாநில அரசு அப்பீல் செய்தது. உயர் நீதிமன்றமும் அவரை ஜாமீனிலே விட்டுவிட்டது. அதற்கிடையிலே அவர் குண்டர் சட்டத்திலே இப்போது கைது செய்யப்பட்டிருக்கிறார். இதற்கிடையில் நம்முடைய அரசு உச்ச நீதிமன்றத்திற்குக்கூட அவர்கள் ஜாமீன் கொடுத்தது தவறு என்று போயிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். எது எப்படியிருந்தாலும் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 42 பேர் எம்.ஜி.ஆர். நகரிலேயும், அதைப்போல 6 பேர் பெரம்பூர் பகுதியிலேயும் உயிரிழந்த அந்த சோக சம்பவத்திற்கு உள்ளபடியே இந்த அவையில் ஏற்கெனவே நம்முடைய இரங்கலைத் தெரிவித்திருக்கிறோம். ஆனால் ஏற்பட்டுவிட்ட இந்த அசம்பாவிதத்திற்கு தி.மு.க. மீது பழி போட வேண்டுமென்பதற்காக தனசேகரன், பகுதிக் கழகச் செயலாளரைக் கைது செய்து அவரைக் குண்டர் சட்டத்திலே போட்டிருப்பது எந்த வகையிலே நியாயம் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்றை உறுதியாகச் சொல்கிறேன். இப்படிப்பட்ட



நடவடிக்கைகளை எடுத்தவர்களுக்கு எதிர்காலத்திலே அதே குண்டர் சட்டம் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் எங்களை மிரட்ட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதையும் சந்திக்க இதயம் உள்ளவர்கள், திராணி உள்ளவர்கள், தைரியம் உள்ளவர்கள் நாங்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தனசேகரன் கைது செய்யப்பட்டதும் குண்டர்கள் சட்டத்தின்கீழ் அடைக்கப்பட்டதும், பழி வாங்கும் நடவடிக்கை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். பழி வாங்குபவர்கள் நாங்கள் அல்ல. அதிகாரம் நல்லவர்கள் கைக்குப் போனால் நல்லது நடக்கும். நல்லவர்கள் பயன் பெறுவார்கள். தீயவர்கள் தண்டிக்கப்படுவார்கள். ஆனால் தீயவர்களின் கைகளுக்கு அதிகாரம் போனால் நாடு தாங்காது. (மேசையைத் தட்டும் ஒலி) பல பழிவாங்கும் படலங்கள் கட்டவிழ்த்து விடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நல்லவர்கள் பாதிக்கப்படுவார்கள். அந்தப் பழிவாங்கும் படலத்தை நான் ஏற்கெனவே சந்தித்து இருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் எந்தக் கட்சியைச் சார்ந்திருக்கிறாரோ அந்தக் கட்சி இங்கே ஆட்சி நடத்தியபோது தொடர்ந்து என்னை விரட்டி, விரட்டிப் பழிவாங்கினார்கள். அதையெல்லாம் சந்தித்துத்தான் மீண்டும் இன்றைக்கு ஆட்சி அமைத்து முதலமைச்சராக இங்கு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இப்போது அந்தக் கட்சி டெல்லியிலே கோலோச்சுகிறது. தி.மு.க., பா.ம.க. போன்ற கட்சிகளின் கைக்கு அதிகாரம் போய்விட்டதால் அதிகார வெறியாட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதும் பழிவாங்கும் படலம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால் இன்றைக்குக்கூட நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பழிவாங்குவதாக இங்கே தெரிவித்தார்கள். என்னுடைய அரசு பழிவாங்குவதாக தெரிவித்தார்கள். யார், யாரைப் பழிவாங்கிக் கொண்டிருக்கிறார்கள்? அண்மையில் நடைபெற்ற சுனாமி, அண்மையில் நடைபெற்ற கன மழை, பெருவெள்ளம் இவற்றால் மக்கள் பாதிப்படைந்தபோது இந்த அரசு விரைந்து மக்களைக் காத்த முறையை நிவாரணப் பணிகளை மேற்கொண்ட முறையை, அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிட்ட முறையை, அவர்களுக்கு மறுவாழ்வு

ஏற்படுத்திக் கொடுத்த முறையை, இன்றைக்கு உலகமே வியந்து பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வெளிநாடுகளில்கூட வல்லரசான பணக்கார நாடான அமெரிக்காவில்கூட புயல் வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டபோது இங்கே ஒரு மாநில அரசு செய்த அளவுக்கு அவர்களால் அங்கே செய்ய முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வாரம், இரண்டு வார காலத்திற்குக்கூட பிணங்கள் மிதந்து கொண்டிருந்தன தெருக்களில். ஆகவே UNICEF பாராட்டி இருக்கிறது. UNESCO பாராட்டி இருக்கிறது. ஐ.நா. சபை பாராட்டி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வெளிநாடுகளில் பிரதிநிதிகள் கூடிய கூட்டங்களில் தமிழகத்தைப் பாராட்டி இருக்கிறார்கள். தமிழக அதிகாரிகளைப் பாராட்டி இருக்கிறார்கள். தமிழக அரசைப் பாராட்டி இருக்கிறார்கள். இலங்கையிலிருந்து இத்தகைய நிவாரணப் பணிகளை எப்படி மேற்கொள்வது என்பதை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க தமிழக அரசு தன்னுடைய அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்களும் அனுப்பி வைத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ள நிவாரணப் பணிகளுக்காக இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள், செயல்பட்ட விதத்தை மேதகு இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் பாராட்டி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் பாராட்டி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இந்திய உள்நாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவராஜ் பாட்டீல் அவர்கள் பாராட்டி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இந்திய வேளாண் துறை மற்றும் உணவு அமைச்சர் திரு. சரத் பவார் அவர்கள் பாராட்டி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) பிற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் பாராட்டுகின்றனர். அனைத்திற்கும் மேலாக தமிழக மக்கள் நெஞ்சார, வாயாரப் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் தாங்கிக்கொள்ள முடியாமல் என்னுடைய செல்வாக்கு உயர்ந்து கொண்டே போகிறதே, எனது அரசுக்கு நல்ல பெயர் வந்து கொண்டே இருக்கிறதே என்பதைப் பொறுக்க மாட்டாமல் (மேசையைத் தட்டும் ஒலி) பழிவாங்கும் நடவடிக்கையாக எப்படியாவது எனது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்க வேண்டும் என்று சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

மத்திய நிதியமைச்சர் அடிக்கடி இங்கே சென்னைக்கு வந்து தி.மு.க. தலைவரை சந்திக்கிறார். அப்போது நாட்டுப் பிரச்சினைகளையா பேசுகிறார்கள்? இல்லை, அவர்கள் என்னைப் பற்றி எப்படிக்



குறிப்பிடுகிறார்கள் 'அந்தப் பொம்பள', – நான் அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தமாட்டேன். ஆனால் அவர்கள் சொன்னதை இங்கே தெரிவிக்கிறேன். அந்தப் பொம்பளையின் செல்வாக்கு உயர்ந்து கொண்டே போகிறது. இப்படியே விட்டுவிடக் கூடாது. அதற்கு தி.மு.க. தலைவர் அதற்காகவே பழனிமாணிக்கம் என்ற ஒரு இணை அமைச்சரை வைத்திருக்கிறார் மத்திய நிதித் துறையில். அவர் தொடர்ந்து இங்கே வருமான வரித் துறை அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். "இன்னும் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? ஜெயலலிதா வீட்டிற்குப் போங்கள். வருமான வரித் துறை raid நடத்துங்கள்" என்று திரும்பத் திரும்ப அவர் வற்புறுத்திக்கொண்டே இருக்கிறார். அதிகாரிகள் அதற்கு செவி சாய்க்க மறுத்துவிட்டனர். அதற்காக பலமுறை பழனிமாணிக்கம் பதவி ஏற்ற பின்பு சென்னையில் பணியாற்றிய வருமான வரித் துறை அதிகாரிகள் பந்தாடப்பட்டிருக்கிறார்கள். திரும்பத் திரும்ப மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–45*

இன்னும் சொல்கிறேன், இன்றையதினம் சென்னையில் பல இடங்களில் raid–கள் நடந்துகொண்டிருக்கின்றன. என்னுடைய குடும்ப டாக்டரின் வீட்டில் இன்று காலையிலிருந்து raid நடக்கிறது. அவர் எனக்கு வைத்தியம் பார்க்கின்ற என்னுடைய குடும்ப டாக்டர். அவர் மருத்துவமனைக்கு சென்று விட்டார். அவர்களது மகன் பள்ளிக்கூடத்திற்கு சென்று விட்டார். அவருடைய மனைவி தன்னந்தனியாக வீட்டில் இருக்கிறார். தன்னந்தனியாக இல்லத்தில் இருக்கின்ற ஒரு குடும்பத் தலைவியிடம், ஒரு பெண்ணிடம் வருமான வரித் துறை அதிகாரிகள் இன்று காலையிலிருந்து அங்கே இருந்துக்கொண்டு தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். எனது வயதான Auditor, அவர் வீட்டில், அவர் அலுவலகத்தில், இன்றைக்கு raid நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காலை முதல் நடந்துக்கொண்டிருக்கிறது. என்னுடைய குடும்ப டாக்டர் செய்த பாவம் என்ன? செய்த குற்றம் என்ன? எனக்கு வைத்தியம் பார்க்கிறார். அதற்காக அவர் பழி வாங்கப்படுகிறார். என்னுடைய Auditor செய்த குற்றம் என்ன? என்னுடைய கணக்குகளைப் பார்க்கிறார். அவர் இந்தியாவிலேயே புகழ்பெற்ற Auditor–களில் ஒருவர். அவர் பெயரைச் சொன்னால் வருமான வரித் துறை அதிகாரிகளும், பிற Auditor–களும் பய பக்தியுடன் வணங்குவார்கள். அப்படிப்பட்ட Auditor இல்லத்தில் இன்று raid நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனக்கு வேண்டியவர்கள்

இல்லங்களிலெல்லாம், அவர்கள் பணி செய்கின்ற அலுவலகங்களிலெல்லாம் இன்றைக்கு raid நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனது இல்லத்திற்கும் வந்திருப்பார்கள். திரு. கருணாநிதி திரும்பத் திரும்ப அதற்கு அழுத்தம் கொடுத்து, திரு. பழனிமாணிக்கம் திரும்பத் திரும்ப அழுத்தம் கொடுத்து எவ்வளவு வற்புறுத்தியபோதிலும் வருமான வரித் துறை அதிகாரிகள் எனது இல்லத்திற்கு வர மறுத்துவிட்டார்கள். அதனால்தான் இன்றைக்கு என்னுடைய இல்லத்திற்கு வரவில்லை. "நீங்கள் என்ன சொன்னாலும் சரி, இதற்கு முன்மாதிரியே கிடையாது. பதவியில் இருக்கின்ற, ஆட்சி செய்துகொண்டிருக்கிற ஒரு முதலமைச்சர் வீட்டிற்கு வருமான வரித் துறை அதிகாரிகள் சென்று raid நடத்தியதாக வரலாறே இல்லை. நாங்கள் செல்ல மாட்டோம்" என்று மறுத்துவிட்டனர். அதனால் இன்றைக்கு வரவில்லை. நாளை என்ன நடக்கும் என்பது தெரியாது. அவர்களே எனது வீட்டிற்குள் புகுந்து, எதையாவது அங்கே வீட்டில் வைத்துவிட்டு, ஜெயலலிதா வீட்டில் இதைப் பிடித்து விட்டோம் என்று அதை விளம்பரப்படுத்தி *(குறுக்கீடுகள்)* வேண்டுமென்றே களங்கம் விளைவிப்பதற்காக அவர்கள் திட்டம் தீட்டுகிறார்கள். அண்ணா அறிவாலயத்தில் நடக்கின்ற கூட்டணிக் கட்சிகளின் கூட்டங்களிலெல்லாம் இதைத்தான் பேசுகின்றார்கள். பா.ம.க. தலைவர், தி.மு.க. தலைவரிடம் "அந்தப் பொம்பளையை இப்படியே விட்டுவிடக்கூடாது. செல்வாக்கு வளர்ந்துகொண்டே போகிறது. துகிலுரித்துக் காட்ட வேண்டும்" என்றெல்லாம் பேசுகிறார்கள். இதுதான் அவர்கள் பேசுகின்ற அரசியல்.

ஆகவே, எதற்காக இதையெல்லாம் சொல்லுகிறேன் என்றால் பழி வாங்கப்படுபவர்கள் நாங்கள். நாங்கள் பழி வாங்குகிறவர்கள் அல்ல. நாங்கள் நல்லவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதனால் எங்களுக்கு மக்கள் துணை இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆண்டவன் துணை இருக்கிறார். என்ன வந்தாலும் சந்திப்போம், வெல்வோம் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகேந்திரன் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு... *(கூச்சல் குழப்பம்)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன், மகேந்திரன் பேசுங்கள். *(கூச்சல் குழப்பம்)*

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... *(கூச்சல் குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை ஒன்றும் இல்லை. *(குறுக்கீடுகள்)* மகேந்திரன் பேச்சைத் தொடருங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, நீங்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் சொல்ல வேண்டிய கருத்திற்கு முதலமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள். *(குறுக்கீடுகள்)* இனி அதோடு முடியுங்கள். *(குறுக்கீடுகள்)* அதோடு முடியுங்கள். அதோடு முடியுங்கள். இதை வளர்க்க வேண்டாம். *(குறுக்கீடு)* திரு. மகேந்திரன் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. மகேந்திரன் பேசுங்கள். மகேந்திரன் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மகேந்திரன் பேசுங்கள். தர வேண்டிய விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் தந்துவிட்டார்கள். ஆற்காடு வீராசாமி அவர்களுக்கு நான் இது சம்பந்தமாக வினா எழுப்புவதற்கு ஏற்கெனவே அனுமதி தந்தேன். அவர் வினாவை எழுப்பினார். அதற்குரிய விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் தந்துவிட்டார்கள். பிரச்சினை இத்தோடு முடிந்தது. மகேந்திரன் பேச்சைத் தொடருங்கள். *(குறுக்கீடுகள்)* மகேந்திரன் பேச்சைத் தொடருங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் *(குறுக்கீடுகள்)* நாற்பத்து...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை *(குறுக்கீடுகள்)* மகேந்திரன் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மகேந்திரன் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. கே. மகேந்திரன்:** அவர்கள் எல்லாம் சத்தம் போட்டுக் கொண்டிருக்கும்போது என்னைப் பேசச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அனுமதிக்க முடியாது. மகேந்திரன் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* மகேந்திரன் பேச்சைத் தொடருகிறீர்களா, இல்லையா?

**திரு. கே. மகேந்திரன்:** சத்தம் போட்டுக்கொண்டே இருந்தால் எப்படிப் பேசுவது? *(குறுக்கீடுகள்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன் அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) மகேந்திரன் அவர்கள் பேச்சைத் தொடரலாம். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-50*

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மரணம் அடைந்த... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சைத் தொடருங்கள். (குறுக்கீடுகள்) மகேந்திரன், பேச்சைத் தொடருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேச்சை முடிப்பதாக இருந்தால் அடுத்தவரை அழைக்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. கே. மகேந்திரன்:** இப்படிச் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தால் எப்படி நான் பேசுவது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகேந்திரன் அவர்கள் பேச்சைத் தொடர முடியாத காரணத்தால் அவர் அமருகிறார். திருப்பூர் சிவசாமி. (குறுக்கீடுகள்) சிவசாமி. (குறுக்கீடுகள்)

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கக்கூடிய நல்லாட்சியினுடைய சாதனைகளைக் கண்டு பொறுக்க முடியாமல் இன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் (குறுக்கீடுகள்) சட்டமன்றத்திலே தகராறு செய்வதையே ஒரு காரணமாகக் கொண்டு இங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இதற்கு எதிர் வருகின்ற காலக்கட்டத்தில் தமிழக மக்கள் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் இவர்களுக்குத் தக்க பாடத்தைப் புகட்டுவார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** வாய்ப்பு கொடுக்காததைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.)



**திரு. சி. சிவசாமி:** தகுதியும், திறமையும் இருக்கக்கூடியவர்களாக இருந்தால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமர்ந்திருக்கக்கூடிய இந்த மன்றத்திலே அமர்ந்து அதற்குரிய விளக்கத்தையும், அதற்குரிய கருத்தையும் எடுத்துச் சொல்வார்கள். அதற்குக்கூட தகுதியற்றவர்களாக நித்தம் நித்தம் இந்தச் சட்டமன்றத்திற்கு வருகை தந்து சட்டமன்றத்தை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவசாமி, கொஞ்சம் உட்காருங்கள். மகேந்திரன் பேச்சைத் தொடர விரும்புகிறார். இன்னொரு ஐந்து மணித் துளிகள்.

**திரு. கே. மகேந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கள் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) சிவசாமி உட்காருங்கள். (குறுக்கீடு) உரிய விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்குப் பிறகும் (குறுக்கீடு) ஏற்கெனவே கமிஷன் போடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்ததற்குப் பிறகும் மறுபடியும் அதையே பேசுகிற காரணத்தால் தாங்கள் இப்போது பேசியவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. சிவசாமி. (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகின்ற கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்கள் எல்லாம் இங்கே குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றார்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மதுரையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கவுன்சிலர் லீலாவதி அவர்கள் பட்டப் பகலிலே வெட்டிக் கொல்லப்பட்டார்களே (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு தி.மு.க.வோடு அவர்கள் இணைந்திருந்த காரணத்தால் அது ரொம்ப இனித்துக்கொண்டிருந்ததா என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டிக் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய செயல்பாடுகளால் மக்கள் மத்தியிலே மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு நற்பெயருக்கு களங்கம் கற்பிக்க வேண்டும் என்பதற்காகவே நித்தம் நித்தம் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்து தகராறு செய்து மாண்புமிகு பேரவைத்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தலைவர் அவர்களுக்குக்கூட கட்டுப்படாமல் நடந்து கொண்டிருக்கக்கூடிய எதிர்க்கட்சிகளுக்கு, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் நல்ல பல திட்டங்களைப் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய மக்கள் தக்கப் பாடத்தைப் புகட்டுவார்கள் என்று கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தின் ஒரு குக்கிராமத்திலே பிறந்த எனக்கு மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையினுடைய விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த நித்தம் நித்தம் நான் வணங்குகின்ற எங்களது குடும்ப தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற் பாதங்கள் பணிந்து எனது உரையைத் தொடங்குகிறேன்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கரை ஆண்டு காலத்திற்கு முன்பு தமிழகம் இருந்த நிலை என்ன என்பதை ஒரு கண்ம் திரும்பிப் பார்க்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கு தமிழகத்தினுடைய முதல்வராக பொறுப்பேற்றபோது தமிழகத்தினுடைய கஜானா காலியாக இருந்தது. காரணம் என்ன? கடந்த காலத்தில் ஆட்சி செய்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், திட்டமிட்டு செயல்படாத காரணத்தால், அவர்களுடைய திட்டங்களுக்காக கூடுதல் செலவுகளை செய்த காரணத்தால், தமிழகத்திலே கஜானா காலியாகியது. நான் பலமுறை மேற்படி கூட்டங்களிலே, இதே சட்டப் பேரவையிலே தெரிவித்திருந்தாலும்கூட, தி.மு.க. ஆட்சியினர் கடந்த காலத்தில் எவ்வாறு நிதியை எல்லாம் வீணடித்தார்கள் என்பதற்கு ஒரே ஒரு சிறிய எடுத்துக்காட்டை இந்த மன்றத்தில் மீண்டும் நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்கள் கட்டுகிறோம் என்று சொல்லிக்கொண்டு கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே பாலங்கள் கட்டினார்கள், திருச்சி மாவட்டத்தில் நாகப்பட்டினம்—கூடலூர் சாலையிலே ஒரு பாலத்தைக் கட்டுகிறார்கள். அந்த பாலத்தினுடைய உயரம் 5½ மீட்டர், அகலம் 7½ மீட்டர். அதனுடைய மதிப்பீட்டின் பிரகாரம் ஒரு ரன்னிங் மீட்டருக்கு அதனுடைய தொகை என்ன தெரியுமா? 1,44,000 ரூபாய். ஆனால் அதே மாவட்டத்தில் புளம்பாடி—



விடுதலைபுரம் என்கிற இடத்தில் ஒரு பாலத்தைக் கட்டுகிறார்கள். அந்த பாலத்தினுடைய உயரம் 3 மீட்டர். அகலம் 7½ மீட்டர். இந்த பாலத்தினுடைய மதிப்பீட்டின் பிரகாரம் ஒரு ரன்னிங் மீட்டருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய செலவுத் தொகை எவ்வளவு தெரியுமா? ஒரு ரன்னிங் மீட்டருக்கு 2,08,000 ரூபாய். இரண்டு பாலத்தினுடைய அகலமும் 7½ மீட்டர். ஆனால் முதலில் தெரிவித்த பாலத்தினுடைய உயரம் 5½ மீட்டர். அதற்குப் பிறகு தெரிவித்த பாலத்தினுடைய உயரம் 3 மீட்டர். 3 மீட்டர் உயரத்திற்கு பாலம் கட்டுவதற்கு ரன்னிங் மீட்டருக்கு 2,08,000 ரூபாய், 5½ மீட்டர் உயரத்திற்கு பாலம் கட்டுவதற்கு ரன்னிங் மீட்டருக்கு 1,44,000 ரூபாய். எண்ணிப் பார்க்க வேண்டும். இதுதான் கடந்த கால தி.மு.க. ஆட்சியினுடைய சாதனை. இப்படி அவர்கள் திட்டமிட்டு, திட்டமிட்டு அதிகப்படியான நிதியைச் செலவழித்ததன் காரணமாக தமிழகத்தினுடைய கஜானா காலியாகியது.

அதேபோலத்தான் கடந்த சட்டப் பேரவையிலே நான் குறிப்பிட்டதுபோல, தூர் வாருவதிலேகூட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தமிழகத்தினுடைய நிதியை வீணடித்தார்கள் என்பதை இங்கே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1997 ஆம் ஆண்டு ஒரு கிலோ மீட்டர் கால்வாய் தூர் வாருவதற்கு 45 ஆயிரம் ரூபாய். 1998 ஆம் ஆண்டு அதே ஒரு கிலோ மீட்டர் கால்வாய் தூர் வாருவதற்கு அவர்கள் செலவழித்த தொகை எவ்வளவு தெரியுமா? 1,36,000 ரூபாய். இப்படியெல்லாம் அளவுக்கு அதிகமாகச் செலவழித்து தமிழகத்தினுடைய கஜானாவை காலி செய்தார்கள். இப்படி கஜானா காலியாகி தமிழகம் கடனிலே மூழ்கி, அடுத்த மாத சம்பளத்திற்குக்கூட பணம் கொடுக்க முடியாத, பணம் கொடுக்க இயலாத நிலையில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்றார்கள். கடனிலே மூழ்கிக் கொண்டிருந்த தமிழகத்தை வழி நடத்திச் செல்வதற்கு அவர்கள் பொறுப்பேற்றபோது, தமிழகத்தினுடைய நிதிநிலை எவ்வாறு இருந்தது தெரியுமா? ஒப்பந்ததாரர்களுக்கு 700 கோடி ரூபாய் பாக்கி. மின்சார வாரியம் 5000 கோடி ரூபாய் இழப்பிலே தத்தளித்துக் கொண்டிருந்தது. போக்குவரத்துக் கழகம் 2035 கோடி ரூபாய் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருந்தது. ரிசர்வ் வங்கியிலே தி.மு.க. அரசு 242 கோடி ரூபாய் அதிகமாகக் கடன் பெற்றிருந்தது. அதேபோல மத்திய அரசு நெய்வேலி நிலக்கரிக்காக கொடுக்கின்ற அந்த ராயல்டி பணத்தைக்கூட, இரண்டு ஆண்டு காலத்தினுடைய பணத்தை முன்பணமாகப் பெற்றுக்கொண்டவர்கள் தி.மு.க. ஆட்சியினர். அப்படிப்பட்ட ஒரு

இக்கட்டான சூழ்நிலையில் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களது சீர்மிகு நடவடிக்கையால், தங்களது நிர்வாகத் திறமையால் இன்றைக்கு தமிழகத்தை இந்தியாவிலேயே ஒரு தலை சிறந்த மாநிலமாக உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். ஆம்.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்கின்றபோது, கடந்த 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில் வணிக வரித் துறையின் மூலமாக வந்த வருமானம் எவ்வளவு தெரியுமா? ஒட்டுமொத்தமாக 34,425 கோடி ரூபாய். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீர்மிகு நடவடிக்கையால், நிர்வாகத் திறமையால், திறமைமிக்க நடவடிக்கையின் காரணமாக இந்த 4 ஆண்டு 9 மாத காலத்தில் மட்டும், 5 ஆண்டு காலத்திற்கு இன்னும் 3 மாத காலம் குறைவாக இருக்கின்ற இந்த காலகட்டத்தில், வணிக வரித் துறையினுடைய வருமானம் 56,56,88,587 ரூபாய் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிட்டத்தட்ட 60,000 கோடி ரூபாய் இன்றைக்கு வணிக வரித் துறை மூலமாக வருமானம் வந்திருக்கிறது என்றால், தமிழகத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஏதேனும் புது வரி போட்டிருக்கிறார்களா என்று கேட்டால், கிடையாது. புதிய வரியும் போடவில்லை, ஏற்கெனவே இருக்கின்ற பொருட்களுக்கு எண்ணற்ற வரிச் சலுகையையும் வாரி வழங்கியிருக்கின்றார்கள்.

குறிப்பிட்டுக் காட்ட வேண்டுமேயானால், மருந்துக்கு உபயோகப்படுகின்ற கரும்புச் சாற்றுக் கழிவுக்கு வரி விலக்கு, இரப்பர் தொழிலை ஊக்குவிக்கின்ற விதமாக வரி விலக்கு, தேயிலை விற்பனையை ஊக்கப்படுத்துகின்ற விதமாக வரி விலக்கு, பிளாஸ்டிக் மூலப் பொருட்களின் மீதான நுழைவு வரி குறைக்கப்பட்டது, பேரீச்சம் பழத்திற்கு வரி குறைப்பு, சிறுநீரக சிகிச்சை, எய்ட்ஸ் நோய்களுக்குப் பயன்படுத்துகின்ற மருந்துகளுக்கு முழுமையாக வரி விலக்கு, கைவினைப் பொருட்களுக்கு வரி விலக்கு, இசைக் கருவிகளுக்கு வரி விலக்கு, கோழித் தீவனங்கள் தயாரிக்கப் பயன்படுத்துகின்ற சுண்ணாம்புக் கல்லுக்கு 12 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக வரி குறைப்பு, சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கட்டுமரம் வாங்க விற்பனை வரி விலக்கு, சிமெண்ட் ஆஸ்பெஸ்டாஸ் கூரைகள் வாங்க வரி விலக்கு, புதிய கட்டுமரம்; புதிய இயந்திரப் படகுகளுக்கு, பழுதடைந்த இயந்திரப் படகுகளைச் சரி செய்யத்



தேவையான உதிரிப் பாகங்களுக்கு வரி விலக்கு, அதனுடைய டீசலுக்கு வரி விலக்கு, திருப்பூர் நகரிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற பின்னலாடைத் தொழில்களுக்கு வரிச் சலுகை, கணினி உபரிப் பொருட்களுக்கு வரி விலக்கு, திரைப்படத் துறையை மேம்படுத்த திரைப்படங்களுக்கு வரிச் சலுகை என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கின்ற வரிச் சலுகையைப் பட்டியலிட்டுக் காட்டினால், இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முழுமைக்கும் நாம் பேசிக் கொண்டே இருக்கலாம். அப்படியெல்லாம், வரியே போடாமல் ஏற்கெனவே இருக்கின்ற பொருட்களுக்குக்கூட வரிகளைக் குறைத்து, இன்றைக்கு 56,000 கோடி, 60,000 கோடி ரூபாயை வணிக வரியாகப் பெற்றிருக்கின்றார்கள் என்றால், இது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிர்வாகச் சீர்திருத்தத்திற்கும், நிர்வாகத் திறமைக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்பதை நான் இங்கே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இன்றைக்கு ஒவ்வொரு துறையும் இந்தியாவில் முன்னோடித் துறையாக, முதன்மை பெற்று, தமிழகம் இந்தியாவிலேயே ஒரு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டுகின்றபோது முதலில் தொழில் துறையினுடைய நலனையும் அதனுடைய முன்னேற்றத்தையும் இங்கே நான் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே ஒரு கதை சொல்வார்கள். ஆட்டாங்கல் அப்படியே இருக்கிறது, அம்மிக் குழவி மட்டும் அப்படியே சுற்றிக் கொண்டேயிருக்கும். இன்றைக்கு காலப் போக்கிலே என்னவாயிற்று? கிரைண்டராக மாறிற்று. கிரைண்டரிலே என்னவாயிற்று? குழவி அப்படியே இருக்கிறது, கிரைண்டர் மட்டும் சுற்றிக் கொண்டேயிருக்கிறது. இதைப்போல, தமிழகத்திலே படித்த இளைஞர்களெல்லாம், வேலைதேடி வெளிநாடு சென்றது அந்தக் காலம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்று ஆட்சி செய்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், வெளிநாட்டிலே இருக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாம் இன்றைக்குத் தமிழகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) வேலைதேடி வெளிநாடு சென்ற நிலை மாறி, வெளிநாட்டிலே இருக்கின்ற தொழிலதிபர்கள் எல்லாம் தொழில் செய்வதற்கு உரிய இடம் தமிழகம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

ஆளுகின்ற, ஆட்சி செய்கின்ற இந்தத் தமிழகத்தை நோக்கி வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களெல்லாம் படையெடுத்து வந்திருக்கின்றன என்றால், இது எதைச் சுட்டிக்காட்டுகின்றது? மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியினுடைய, நல்லாட்சியினுடைய நிலையை எடுத்துக் காட்டுகின்றது அல்லவா? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிர்வாகத் திறமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு அல்லவா? இன்றைக்கு வெளிநாட்டிலே இருந்து எத்தனை எத்தனை கம்பெனிகள், எத்தனை ஆயிரம் கோடி ரூபாயில் தமிழகத்திலே முதலீடு செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

Saint Gobain நிறுவனம் 1400 கோடி ரூபாய், Asian Paints 88 கோடி, TATA Titanium Di-oxide Company 2,000 கோடி, Hyundai 2,000 கோடி, Ennore Foundries 300 கோடி, Infosys 129 கோடி, Xansa 235 கோடி, Road improvement 2,160 கோடி, TICEL Park 6,250 கோடி, Nokia 675 கோடி, Flextronics 500 கோடி, B.M.W. 300 கோடி, Southern Automobile Testing Unit 250 கோடி, இப்படி பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். இன்றைக்கு வெளிநாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து நிறுவனங்களும் தமிழகத்திலே தங்களுடைய நிறுவனத்தைத் தொடங்கியிருக்கிறார்கள் என்றால், அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த புதிய தொழில் கொள்கைதான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) 1992 ஆம் ஆண்டு புதிய தொழில் கொள்கையை அமைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதற்குப் பிறகு, 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய தொழிற்கொள்கையை அமைத்தார்கள். ஆனால், தி.மு.க.–வினுடைய ஆட்சிக் காலத்தில் ஒருமுறையாவது தொழில் வளர்ச்சிக்காக ஒரு புதிய தொழிற்கொள்கையைக் கொண்டு வந்தார்களா என்று கேட்டால், கிடையாது.

பிற்பகல் 12-05

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1992 ஆம் ஆண்டு கொண்டு வந்த அந்த தொழிற்கொள்கையைத்தான், அடுத்து வந்த தி.மு.க. ஆட்சியும் பின்பற்றியதே தவிர, புதியதாக தொழில் வளர்ச்சிக்காக எந்தவிதமான புதிய தொழிற்கொள்கையும் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய டாமின் நிறுவனம், கடந்த 1996–2001 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 258.40 கோடி ரூபாய்க்கு வியாபாரம்



செய்தார்கள். விற்பனை செய்தார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த 2001–2006 இந்தக் காலகட்டத்தில் ரூபாய் 397.43 கோடி அளவிற்கு இன்றைக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 60 சதவிகிதம் இன்றைக்கு விற்பனை அதிகரித்திருக்கிறது.

அதேபோல, சிவகங்கை கிரானைட் தொழிற்சாலையினுடைய மொத்த உற்பத்தியை இங்கே நான் கோடிட்டுக் காட்டுகின்றபோது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 14,804 மெட்ரிக் டன் ஆக இருந்த அதனுடைய உற்பத்தி, மாண்புமிகு அம்மாவினுடைய இந்த ஆட்சிக் காலத்தில் 22,813 மெட்ரிக் டன்னாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் எந்த அளவிற்கு பொது நிறுவனங்கள் எல்லாம் வளர்ச்சிப் பெற்றிருக்கின்றன என்பதைக் காட்டுகிறது. அவர்களுடைய நிர்வாகத் திறமைக்கு இவற்றை எல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இங்கே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும்கூட சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கக்கூடிய திருப்பூர், பின்னலாடைத் தொழிலுக்கு பெயர் பெற்ற ஒரு தொழில் நகரம். 2001 ஆம் ஆண்டு நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்கின்றபோது, திருப்பூருடைய பின்னலாடை ஏற்றுமதியினுடைய அளவு 3,000 கோடி ரூபாய்.

இன்றைக்கு காலை சட்டமன்றத்திற்கு வருகின்றபோது, நான் அந்தப் பின்னலாடை ஏற்றுமதி சங்கத்தினுடைய தலைவரை துல்லியமாக இன்றைக்கு ஏற்றுமதி எவ்வளவு என்று கேட்டபோது, அவர் 7,000 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டார்கள். 3,000 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்த பின்னலாடை வியாபாரம் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ரூ. 7,000 கோடியை எட்டியிருக்கிறது என்றால் என்ன காரணம்? 1995 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது, திருப்பூர் நகரத்தினுடைய வளர்ச்சிக்காகவும், திருப்பூர் நகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைக்காகவும், திருப்பூர் பின்னலாடைத் தொழிலுடைய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும் 3–வது குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால், இடையே 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் என்ன பண்ணினார்கள்? அந்த 3–வது குடிநீர்த் திட்டத்தை கிடப்பிலே போட்டு விட்டார்கள். செய்யவே இல்லை.

அதே மாதிரி, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த 1995 ஆம் ஆண்டு, புதிய Apparel Park, பாதாள சாக்கடைத் திட்டம் போன்றவற்றையெல்லாம் கொண்டு வந்தார்கள். இடையிலே வந்த தி.மு.க. 5 ஆண்டு காலம் கிடப்பிலே போட்டார்கள். கிடப்பிலே போட்டதோடு மட்டுமல்லாமல், அந்த பனியன் தொழிலுக்காக 5 வருட காலம் எதுவுமே செய்யவில்லை.

மீண்டும் தமிழகத்தினுடைய முதல்வராக தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பிறகு, தனது சொந்தத் தொகுதியான ஆண்டிப்பட்டிக்கு அடுத்தபடியாக திருப்பூர் நகரத்திற்கு வருகை தந்து 3–வது குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். எண்ணி வைத்து 30 மாதம். 30 மாதத்திலே அந்த 3–வது குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு அந்த பனியன் தொழில் சார்புடைய சாய சலவைப் பட்டறைகளிலே இந்த 3–வது குடிநீர்த் திட்டத்தினுடைய தண்ணீர் இப்பொழுது அங்கே விழுகின்றது.

ஆக, தண்ணீர்ப் பிரச்சினை இல்லை என்கின்றபோது, பனியன் உற்பத்தியிலே எந்தவிதமான தடையும் ஏற்படாது என்கின்ற காரணத்தினால் அங்கே கூடுதலாக நிறுவனங்கள் உருவாகி, 7,000 கோடி ரூபாய்க்கு இப்பொழுது வணிகம் பெருகியிருக்கிறது.

அதோடுமட்டுமல்ல. தி.மு.க. ஆட்சியிலே தடைப்பட்ட அந்தப் பின்னலாடை தொழிற் பூங்கா, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் திருப்பூரினுடைய வடக்குப் பகுதியில் புதிய பின்னலாடைத் தொழிற் பூங்கா தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பின்னலாடைத் தொழிற்பூங்கா தொடங்கப்பட்டதன் காரணமாக, அந்தப் பகுதியை பொதுமக்கள் புதிய திருப்பூர் என்று சொல்கின்ற அளவிற்கு பெருமை வாய்ந்த ஒரு தொழில் நகரமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–10

அதேபோல விசைத்தறி. விசைத்தறித் தொழில், ஏழை விவசாயிகள் எல்லாம் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலையில் ஒரு சார்புத் தொழிலாக விசைத்தறித் தொழிலை நடத்திக்கொண்டிருந்தார்கள். அந்த



விசைத்தறித் தொழில் நலிவுற்றுவிடுகின்ற ஒரு சூழ்நிலை உருவானபோது கடந்த காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராகப் பெறுப்பிலே இருந்தபோது, அன்றைக்கு விசைத்தறிக்கு என்று ஒரு தனி tariff–ஐ கொண்டுவந்து, மின் கட்டணத்தைக் குறைத்து, விசைத் தறித் தொழிலைப் பாதுகாத்தார்கள். அதே விசைத்தறிக்கு இன்று மீண்டும் தமிழகத்தினுடைய முதல்வராக அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு மீண்டும் மின்கட்டணச் சலுகையைக் கொடுத்து அந்த விசைத்தறித் தொழிலை பாதுகாத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நமது தமிழகத்தைப் பொறுத்தவரை தொழில் துறையிலே 2005–2006 ஆம் ஆண்டின் வருங்கால ஆசியாவின் சாதனையாளர் என்று தமிழகத்தை தேர்ந்தெடுத்து இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றபோது, உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதேபோல வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் திறன் கொண்ட மிகச் சிறந்த இடம் தமிழ்நாடு என்று Financial Times நாளேட்டின் ஓர் அங்கமான F.D.I. பத்திரிகையால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படி தொழில் துறையில் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி முன்னணியிலே திகழ்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு தடையில்லாத மின்சாரம், சட்டம்–ஒழுங்கு இப்படி பல்வேறு துறைகள் அதற்கு ஒரு பக்கபலமாக இருந்த காரணத்தால்தான் தொழில் துறையிலே தமிழகம் முன்னணியிலே இருக்கிறது என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4-½ ஆண்டு காலத்தில் கடந்த 3 ஆண்டு காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மழையில்லை வறட்சி, டேமிலே தண்ணீர் இல்லை. ஆனால் மின்வெட்டே இல்லாத ஒரு மாநிலமாக இந்தியாவிலே திகழ்ந்தது என்றால் அது தமிழ்நாடு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி? டேமில் தண்ணீர் இல்லை, மழையும் இல்லை ஆனால் தமிழ்நாட்டில் கரண்ட் கட் என்று சொன்னால், இப்போது இருக்கிற இளைஞர்களுக்கு அது எங்கே விற்கிறது என்று கேட்பார்கள். கரண்ட் கட் என்றால் என்ன என்றே தெரியாத அளவுக்கு ஒரு தடை இல்லாத மின்சாரத்தை

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள் என்றால் அதற்கு என்ன காரணம்? தொலைநோக்குப் பார்வையோடு தமிழகத்திற்குத் தேவைப்படுகின்ற மின்சாரத்தினுடைய அளவு எவ்வளவு என்பதைத் துல்லியமாக கணக்கிட்டு, அதற்குத் தேவையான மின் உற்பத்தியை நிறுவியதுதான் காரணம். தமிழகத்தினுடைய மின்சாரத்தினுடைய நிறுவுதிறன் 9,911 மெகாவாட். இன்றைக்கு 9,911 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற அளவிற்கு தமிழகத்தினுடைய மின்சாரத்தினுடைய நிறுவுதிறன் இருக்கின்றது. ஆனால், தமிழகத்தினுடைய மின்சாரத் தேவை எவ்வளவு தெரியுமா? 7,775 மெகாவாட். ஆக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்காலத்தை துல்லியமாக கணக்கிட்டு செயல்பட்ட காரணத்தால், கிட்டத்தட்ட 2,200 மெகாவாட் கூடுதலாக உற்பத்தி செய்கின்ற அளவிற்கு ஒரு நிலைமையை உருவாக்கியதால்தான், இன்றைக்கு தமிழகத்திலே மின்வெட்டே இல்லாத ஒரு மாநிலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மின்சாரத் துறையை ஒரு முன்னோடித் துறையாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அதோடுமட்டுமல்ல எந்த நிலைமையில் இன்றைக்கு இந்த மின்சாரத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது? விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்கிறது, குடிசைவாசிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்கிறது, கடந்த 6, 7 மாதங்களுக்கு முன்பு அனைத்து வீடுகளுக்கும் வரும் மின் கட்டணத்திலே மிகப் பெரிய சலுகையைக் கொடுத்தார்களே 910 கோடி ரூபாய் சலுகைகள். அனைத்து வீடுகளுக்கும் மின் கட்டணச் சலுகை. விசைத்தறிகளுக்கு மின் கட்டணச் சலுகை என்ற அடிப்படையில் இன்றைக்கு மின்சார வாரியம் இந்தியாவிலேயே தமிழகத்திலே தலைநிமிர்ந்து நிற்கிறது என்று சொன்னால், அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு அவர்களுடைய நிர்வாகத் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பலர்கூட நினைக்கலாம். அப்படி என்ன தமிழ்நாட்டிலே கரண்ட்–க்கு கட்டணம் கூடுதலாக வசூலிக்கிறார்களா என்று. கிடையாது. தமிழ்நாட்டிலே 50 யூனிட் வரைக்கும் 75 பைசா. ஆனால், இதே ஆந்திராவில் 1 ரூபாய் 45 பைசா. கர்நாடகத்தில் 1 ரூபாய் 85 பைசா, கம்யூனிஸ்ட் கட்சிகள் பேசினார்களே கொஞ்சம் நேரத்திற்கு முன்பு அவர்கள் ஆளுகின்ற கேரள மாநிலத்தில் 40 யூனிட் வரைக்குமே 1 ரூபாய் 15 பைசா (குறுக்கீடு) இல்லை கேரளா. முன்பு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆண்ட கேரளா தற்போது காங்கிரஸ் கட்சி ஆண்டு கொண்டிருக்கக்கூடிய கேரள மாநிலத்தில் 1 ரூபாய் 15 பைசா.



60 யூனிட்க்கு மேலே தமிழ்நாட்டில் 3 ரூபாய் 50 பைசா, ஆந்திராவில் 5 ரூபாய் 50 பைசா, கர்நாடகத்தில் 4 ரூபாய் 70 பைசா, கேரளாவில் 5 ரூபாய் 45 பைசா, ஆக அகில இந்திய அளவில் ஒரு குறைவான மின் கட்டணத்தைப் பெற்று மின்சாரத் துறையை ஒரு சிறந்த துறையாக செயலாற்றிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு எல்லாம் பேசுகிறபோதுகூட, திரு. துரைமுருகன் என்னைப் பார்த்து நக்கலாக பேசுவார். சட்டமன்றத்திற்கு சின்னப் பையன், புதியவன் என்று. இந்தச் சின்னவன் பேசுகிறபோது, பதில் சொல்ல முடியாது என்கின்ற ஒரு காரணத்திற்காகக்கூட திரு. துரைமுருகன் வெளியேறிவிட்டாரோ, என்னவோ என்கின்ற ஒரு ஐயப்பாடுதான் எனக்கு இருக்கிறது. ஏனென்று கேட்டால், இவர்கள் மத்தியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கக்கூடிய மத்திய அரசாங்கம் அது பாரதிய ஜனதா கட்சியோடு இருந்தபோது, பாரதிய ஜனதா கட்சியோடு கூட்டணியிலே இருந்தபோது, 27 முறை அவர்கள் பெட்ரோல், டீசல் விலையை ஏற்றினார்கள். இன்றைக்கு காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து 5 முறை பெட்ரோல், டீசல் விலையை ஏற்றியிருக்கிறார்கள். ஆக 32 முறை திமுக. டீசல் விலையை ஏற்றியது. இந்த 32 முறையும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக ஏற்றிய டீசல் விலை என்ன தெரியுமா்களா? 1-4-1999-இலே தமிழ்நாட்டிலே டீசல் விலை 10.91 பைசா. 7-9-2005-இலே தமிழ்நாட்டிலே டீசலினுடைய விலை ரூபாய் 33.26. இரண்டு மடங்கு டீசல் விலையை ஏற்றியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு லிட்டருக்கு 22 ரூபாய் 35 பைசா — மூன்று மடங்கு. ஒரு லிட்டருக்கு 22 ரூபாய் 35 பைசா கூடுதலாக டீசல் விலையை ஏற்றியிருக்கிறார்கள். மூன்று மடங்கு. 10.91 ரூபாயிலிருந்து 33 ரூபாய் 26 பைசாவாக 22.35 ரூபாய் அதிகமாக, கூடுதலாகச் சேர்த்து 32 முறையும் சேர்த்து, இவர்கள் டீசல் விலையை ஏற்றியதால், தமிழகத்திலே போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இழப்பு எவ்வளவு தெரியுமா? 3,190 கோடி ரூபாய். ஆக, நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றபோது, திமுக. அரசாங்கம் போக்குவரத்துக் கழகத்தை நட்டத்திலே விட்டுச் சென்றது, 2,035 கோடி ரூபாய். மத்தியிலே இருந்துகொண்டு, டீசல் விலையை ஏற்றியதால் இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்ட இழப்பு 3,190 கோடி ரூபாய். ஆனால், இப்படியெல்லாம் இழப்புகள்

ஏற்பட்டபோதும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த ஆட்சிக் காலகட்டத்திலேதான், போக்குவரத்துக் கழகம் இலாபத்தை ஈட்டியிருக்கிறது என்பதை நான் இங்கே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படி இலாபம் வந்திருக்கிறது என்றால், பஸ் கட்டணத்தை எங்காவது ஏற்றியிருக்கிறார்களா? கிடையவே கிடையாது. தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் எத்தனை முறை டீசல் விலையை ஏற்றினாலும்கூட, பஸ் கட்டணத்தை ஏற்றாமல், ஏழை, எளிய மக்களைப் பாதுகாத்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சரி, இதோடுகூட, இன்னொரு comparison. எப்படி என்று பார்த்தால் — பஸ் கட்டணம் என்று சொன்னால், மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டிலே கூடுதலா என்கிற ஒரு கேள்வி உங்களில் யாருக்காவது வந்திருக்கும். ஆனால் கிடையாது. தமிழ்நாட்டிலே Mofussil Bus-க்கு ஒரு கிலோ மீட்டருக்கு 28 பைசா. கர்நாடகாவிலே 35 பைசா, ஆந்திராவிலே 35 பைசா, கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற West Bengal-இலே 40 பைசா, கேரளாவிலே 48 பைசா. இது Mofussil Bus. ஆக பிற மாநிலங்களைக்காட்டிலும், குறைவானக் கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருப்பது, தமிழக போக்குவரத்துக் கழகம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, Town Bus. Town Bus-இலே எடுத்துக்கொண்டீர்கள் என்றால், தமிழ்நாட்டிலே கட்டணம் ஒரு stage-க்கு 2 ரூபாய். கர்நாடகாவிலே 3 ரூபாய், கேரளாவிலே 3 ரூபாய், அதேபோன்று, maximum என்று எடுத்துக்கொண்டீர்கள் என்றால், last stage என்று எடுத்துக்கொண்டீர்கள் என்றால், ஒரு stage-க்கு தமிழ்நாட்டிலே 6.50 ரூபாய் கடைசியாக. கர்நாடகாவிலே 11 ரூபாய். ஆந்திராவிலே 11 ரூபாய், கேரளாவிலே 17 ரூபாய், ஆக மிகக் குறைந்த ஒரு கட்டணத்தை வசூலித்துக்கொண்டிருக்கக்கூடிய மாநிலம் என்று குறிப்பிட்டாலுங் கூட, அந்தப் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற இந்தத் தமிழகத்திற்கே சேரும் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சரி, bus collection-னில்தான் அப்படியென்றால், அந்த staff — driver, conductor, technical assistants, இவர்களுக்கெல்லாம் salary கொடுக்கிறதிலே ஒரு ஒப்பீடு பார்த்தோம் என்றால், தமிழ்நாட்டிலே driver-க்கு gross salary என்று எடுத்துக்கொண்டால் 5,984 ரூபாய், கர்நாடகாவிலே



4,967 ரூபாய், ஆந்திராவிலே 4,235 ரூபாய், கேரளாவிலே 4,572 ரூபாய். ஆக driver-க்கு salary என்று சொன்னால், அது தமிழ்நாட்டிலேதான் பிற மாநிலங்களைக்காட்டிலும் 2,000 ரூபாய் அதிகமாக இருக்கிறது. Conductor-க்கு salary என்று எடுத்துக் கொண்டால், gross salary-ஐப் பொறுத்தவரைக்கும், 5,945 ரூபாய் தமிழ்நாட்டிலே. கர்நாடகாவிலே 4,632 ரூபாய், ஆந்திராவிலே 3,865 ரூபாய், கேரளாவிலே 4,498 ரூபாய். இதிலே பார்த்தீர்கள் என்றாலும், தமிழ்நாட்டிலேதான் conductors-க்கும் சம்பளம் கூடுதல். சரி, Technical Assistants — அவர்களைப் பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டிலே அவர்களுக்கு salary, 5,945 ரூபாய், கர்நாடகாவிலே 4,967 ரூபாய், ஆந்திராவிலே 4,000 ரூபாய், கேரளாவிலே 4,498 ரூபாய். ஆக இந்தியாவிலேயே அதிகப்படியான சம்பளங்கள் – அது driver-ஆக இருந்தாலும், conductor-ஆக இருந்தாலும், Technical Assistants-களாக இருந்தாலும், அதிகப்படியான சம்பளத்தை – தொழிலாளர்களுக்காக வழங்கக்கூடிய ஒரு மாநிலம் என்றால், அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்கின்ற தமிழகமே என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தை இங்கே குறிப்பிட வேண்டுமென்று இருந்தேன். மாண்புமிகு அம்மா அவர்களே, பேசுகின்றபோது எதிர்க்கட்சிகளுக்கு அந்தக் கருத்தை தெள்ளத்தெளிவாக எடுத்துக் கூறிவிட்டார்கள். என்ன கருத்து என்று சொன்னால் இன்றைக்கு உலக நாடுகளுக்கெல்லாம் வல்லரசாக திகழ்வது அமெரிக்கா. ஆனால், அந்த வல்லரசுக்கே வழி காட்டுகின்ற வல்லரசியாக திகழக்கூடியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அது சுனாமியாகட்டும், வெள்ள நிவாரணப் பணியாகட்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிர்வாகத் திறமைக்கு ஈடாக உலக நாட்டிலே யாராலும் செயல்பட முடியவில்லை, செயல்பட முடியாது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கின்றேன். வெளிநாட்டிலிருந்தெல்லாம் பொருளை import பண்ணுவார்கள், export பண்ணுவார்கள். ஆனால், தமிழகத்திலேயிருந்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் நிர்வாகத் திறமையையும் இலங்கை அரசு import பண்ணியிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய திறமையை இலங்கை அரசாங்கம்

இன்றைக்கு இறக்குமதி செய்திருக்கிறது என்று சுட்டிக்காட்டுகின்றபோது, இதைவிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய நிர்வாகத் திறமைக்கு வேறு சான்றுகளே தேவையில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை ஏற்கெனவே 1½ கோடி ரேஷன் கார்டுகள் இருந்தன. புதிதாக 38 லட்சம் ரேஷன் கார்டுகள் மாண்புமிகு புரட்சித் தலைவினுடைய ஆட்சியிலே ஏழையெளிய மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக வழங்கப்பட்டது. சரி. ஏற்கெனவே 1½ கோடி கார்டுகள் இருந்தபோது அவர்கள், Centre—லிருந்து கொடுத்த சீமை எண்ணெய் எவ்வளவு? 78 ஆயிரம் கிலோ லிட்டர். இப்போது புதிதாக 38 ஆயிரம் கார்டுகள் கொடுத்திருக்கிறோம். இதுவரைக்கும் இங்கே பேசினார்களே எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் என்ன சொல்லியிருக்க வேண்டும்? அம்மா 78 ஆயிரம் கிலோ லிட்டர் கொடுத்திருக்கிறார்கள், நாங்கள் இதை 1½ லட்சம் கிலோ லிட்டராக வாங்கித் தருகிறோம் என்று சொல்லியிருந்தார்கள் என்றால் அவர்களைப் பாராட்டலாம். ஆனால், இவர்கள் என்ன பண்ணினார்கள் தெரியுங்களா? அந்த 78 ஆயிரம் கிலோ லிட்டர் சீமை எண்ணையை 59 ஆயிரம் கிலோ லிட்டராகக் குறைத்தவர்கள்தான் தி.மு.க. கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேமாதிரி இன்றைக்கு அதிக விலை கொடுத்து அரிசியை வாங்கி 3½ ரூபாய்க்கு விற்கக்கூடிய ஒரு மாநிலம் என்று சொன்னால் அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆளுகின்ற இந்த தமிழகம் மட்டுமே என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், இங்கே இருக்கக்கூடிய தி.மு.க. கூட்டணியினர் என்ன செய்தார்கள்? 8 ரூபாய் 30 பைசாவிற்கு மத்திய தொகுப்பிலே கொடுத்த அந்த அரிசியை 9 ரூபாய் 15 பைசாவிற்கு பண்ணினார்கள். ஏன்? இங்கே இருக்கக்கூடிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதற்கு ஏதாவது பதில் சொல்ல முடிகிறதா? ரூ. 8.30—க்கு விற்ற அரிசியை ரூ. 9.15—க்கு கொண்டு வந்தார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு சொன்னார்கள், மத்திய அரசாங்கம் எவ்வளவு விலையை, ரேஷன் அரிசி விலையை கூட்டினாலும் ஏழையெளிய மக்களைப் பாதிக்கின்ற விதத்தில் ரேஷன் அரிசி விலையை என்றும் ஏற்றமாட்டோம் என்று சொன்னவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அதேபோல கல்வித் துறை. எத்தனை சாதனைகள்? எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு கல்வித் துறையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் ஒட்டுமொத்தமாக சொல்வதைவிட என்னுடைய திருப்பூர் தொகுதியை மட்டும் ஒரு சான்றாகச் சொல்லலாம். ஏனென்றால், ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கின்ற அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் திருப்பூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் புதிதாக 46 தொடக்கப் பள்ளிகள், 66 நடுநிலைப் பள்ளிகள், 4 உயல்நிலைப் பள்ளிகள், 2 மேல்நிலைப் பள்ளிகள் என்று நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் கடந்த 4 ஆண்டு காலத்தில் தொடங்கப்பட்டிருக்கின்றன என்றால், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கே இந்த அளவுக்கு என்றால், ஒட்டுமொத்த தமிழகத்தைப் பற்றி சொல்லவா வேண்டும்? அந்த அளவிற்கு கூடுதலாக புதிய கல்விக் கூடங்கள், அதற்கு கட்டட வசதிகள். அதோடு மட்டுமல்ல, கூடுதலாக திருப்பூர் தொகுதியில் மட்டும் புதிதாக 128 அங்கன்வாடி மையங்களை அமைத்துக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆக, கல்வித் துறையைப் பொறுத்தவரைக்கும் சொல்லிக் கொண்டே இருக்கலாம். இலவசப் பாடப் புத்தகம், எ்ண்ணிப் பார்க்கிறோம். நான் எல்லாம் பள்ளியிலே படிக்கின்றபோது, நான் 6 ஆம் வகுப்பு செல்கின்றபோது எனக்கு மேல்வகுப்பிலே 7 ஆம் வகுப்பிலே சிவசாமி என்ற ஒரு மாணவன் இருந்தான். அந்த மாணவனிடத்திலேயே நான் பேசி வைத்து விட்டேன். ஓவ்வோராண்டும் அவனிடமிருந்து பாதி ரேட்டிலே அந்தப் பாடப் புத்தகங்களை வாங்குவேன். 11 ஆம் வகுப்பு முடியும் வரை பழைய புத்தகத்தை பாதி விலையிலே வாங்கிப் படித்தவன், என்னைப் போன்று எத்தனையோ ஏழை மாணாக்கர்கள் எல்லாம் இப்படிப் படித்துக் கொண்டிருந்தது எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்த பிறகு 1 ஆம் வகுப்பிலேயிருந்து 12 ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ மாணவியருக்கும் இலவசப் பாடப் புத்தக திட்டத்தைக் கொண்டு வந்தார்களே? மேலும், இந்தப் பாடப் புத்தகங்கள் கொடுக்கிறபோது, திமுககாரர் வீடு, கம்யூனிஸ்டுகாரர் வீடு என்று பாகுபாடு பார்த்தா கொடுத்தார்கள்? கிடையாதே. 1 ஆம் வகுப்பிலேயிருந்து 12 ஆம் வகுப்பு வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசப் பாடப் புத்தகங்களைக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதோடுமட்டுமல்ல, இலவச சைக்கிள் திட்டம். எண்ணிப் பார்க்க வேண்டும். எனது பெற்றோரிடத்திலே 9 ஆம் வகுப்பு பயில்கின்ற வரை நான் போராடிப் பார்த்தேன் ஒரு பழைய சைக்கிள் வாங்குவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து குழந்தைகளும் கட்டாயம் மேற்படிப்பு பயிலவேண்டும் என்பதற்காக பத்தாம் வகுப்போடு படிப்பு நின்று போய்விடக்கூடாது, பத்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டு, இவர்கள் பனியன் கம்பெனிக்கும், மற்ற கம்பெனிக்கும் வேலைக்குப் போய்விடக்கூடாது என்பதற்காக, இவர்கள் கட்டாயம் கல்வி அறிவு பெறவேண்டும் என்பதற்காக இலவச சைக்கிள் திட்டம் கொண்டு வந்தார்கள். இது மாணவிகளுக்கு மட்டும் என்று இல்லாமல், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. இதிலே சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு அனைத்து வகை மாணவ, மாணவியருக்கும் இலவச சைக்கிள் திட்டத்தை வழங்கினார்களே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; இன்றைக்கு இது உலக அளவிலே பாராட்டுகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 12–25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் ஒரு நிகழ்ச்சிக்கு நான் ஒரு கிராமத்திற்குப் போனேன். போனபோது பக்கத்து வீட்டிலே ஒரு பெரிய தகராறு. என்ன தகராறு என்று போய் பார்த்தால், அந்த அம்மா அவருடைய கணவரோடு சண்டை போட்டுக்கொண்டிருந்தார். என்ன சண்டை என்று கேட்டால், 'ஏன்டா, மம்மாடாப்போனவனே, அந்த அம்மா சைக்கிள் கொடுத்தார்கள், அந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு போய் தண்ணி போட்டுவிட்டு இப்படி உடைத்துக்கொண்டு வந்து நிற்கிறாயே. உங்கள் தலைவனாலே சைக்கிள் வாங்கிக் கொடுக்க முடியவில்லை, உன்னாலேயும் உன் பிள்ளைக்கு சைக்கிள் வாங்கிக்கொடுக்க முடியவில்லை, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா வாங்கிக்கொடுத்த சைக்கிளை இப்படி உடைத்துவிட்டு வந்து நிற்கிறாயே என்று சொல்லி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த அந்த வீட்டிலே அந்த அம்மா அவருடைய கணவனைத் திட்டிக்கொண்டிருந்தார்கள். நான் பார்த்துவிட்டு, அந்த அம்மாவைக் கூப்பிட்டு சைக்கிளுக்கு 100 ரூபாய் ரிப்பேருக்குச் செலவானாலும் நான் தருகிறேன் அம்மா, நீ சண்டை போடவேண்டாம் என்று சொல்லி, ரிப்பேரையும் பண்ணித் தருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். ஏன் என்று சொன்னால், இந்த இலவச சைக்கிள்கள் வழங்குவதிலேகூட கட்சிப் பாகுபாடு பார்க்கவில்லை.



தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மக்களும் பயன்பெற வேண்டும் என்பதற்காக இன்றைக்கு இலவச சைக்கிள் திட்டத்தைப் பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் கொண்டு வந்தார்களே, அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனை என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆக, தமிழகத்தைப் பொறுத்தவரை புதியதாக 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக upgrade செய்யப்பட்டிருக்கின்றன. 394 High Schools புதியதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. 406 பள்ளிகள் Higher Secondary School-களாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் படிப்பு இடையிலே நின்றுவிடக்கூடாது என்பதற்காக அவர்களது பெற்றோர் விபத்திலே இறந்துவிட்டாலும் சரி, அல்லது ஏதேனும் செயலிழந்துவிட்டாலும்கூட, அந்தக் குழந்தைகளின் பெயரிலே 50,000 ரூபாயை டெபாசிட் செய்து அந்தக் குழந்தைகளுடைய படிப்பு தொடர வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கக்கூடிய திட்டம்.

அதேபோல, உழவர் பாதுகாப்புத் திட்டம். விவசாயிகளுக்காகக் கொண்டு வந்திருக்கக்கூடிய அந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்திலேகூட கல்விக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து கல்வித் துறையை இந்தியாவிலேயே ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்றைக்கு இந்த வீரபாண்டிய கட்டபொம்மன் படத்திலே வருகின்ற ஒரு வசனம்தான் நினைவிற்கு வருகிறது. என்ன வசனம் என்று கேட்பீர்கள். வீரபாண்டிய கட்டபொம்மன் ஜாக்சன் துரையிடம் பேசும்போது சொல்வார் ஒரு வசனம். 'யாரைக் கேட்கிறாய் வரி? எதற்குக் கேட்கிறாய் திறை ? எங்களோடு வயலுக்கு வந்தாயா? ஏற்றம் இறைத்தாயா? நாற்று நட்டாயா ? களை பரித்தாயா? எம் குலத்துப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துப் பணிபுரிந்தாயா? மாமனா, மச்சானா, மானம் கெட்டவனே, யாரைக் கேட்கிறாய் வரி' என்று ஒரு வசனம் வரும். அதை நினைத்துப் பார்க்கின்றபோது, இன்றைக்குச் சட்டப் பேரவைத் தலைவருக்கும் கட்டுப்படாமல் வெளியேறியிருக்கின்றார்களே எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்கள் அவர்கள் எல்லாம் வருகின்ற தேர்தல் காலகட்டத்தில், தமிழகத்திலே மக்களைச் சந்திக்கச் செல்கின்றபோது, மக்கள் எல்லாம் இவ்வாறுதான் கேட்பார்கள். எவ்வாறு என்றால்;

டீசல், பெட்ரோல் விலையை ஏற்றிவிட்டு, எதற்குக் கேட்கிறாய் ஓட்டு? ஏன் கேட்கிறாய் ஓட்டு? டீசல், பெட்ரோல் விலையை ஏற்றிவிட்டு, எதற்குக் கேட்கிறாய் ஓட்டு? யாரைக் கேட்கிறாய் ஓட்டு?

Gas விலையை ஏற்றிவிட்டு, எதற்குக் கேட்கிறாய் ஓட்டு? யாரைக் கேட்கிறாய் ஓட்டு?

அரிசி விலையை ஏற்றிவிட்டு, எப்படிக் கேட்கிறாய் ஓட்டு? ஏன் கேட்கிறாய் ஓட்டு? எப்படிக் கேட்கிறாய் ஓட்டு? ஏன் கேட்கிறாய் ஓட்டு?

புதிய ரேஷன் கார்டுக்கு மண்ணெண்ணெய் கொடுக்காமல் ஏன் கேட்கிறாய் ஓட்டு? எதற்குக் கேட்கிறாய் ஓட்டு? ஏன் கேட்கிறாய் ஓட்டு? எதற்குக் கேட்கிறாய் ஓட்டு?

ஏற்கெனவே கொடுத்த மண்ணெண்ணெய் அளவைக் குறைத்துவிட்டு எதற்குக் கேட்கிறாய் ஓட்டு? யாரைக் கேட்கிறாய் ஓட்டு? எதற்குக் கேட்கிறாய் ஓட்டு? யாரைக் கேட்கிறாய் ஓட்டு?

வெள்ளத்தால் தமிழக மக்கள் பாதித்தபோது மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்ட நிதியைப் பெற்றுத் தராத நீங்கள் எதற்குக் கேட்கிறீர்கள் ஓட்டு? யாரைக் கேட்கிறீர்கள் ஓட்டு? எதற்குக் கேட்கிறீர்கள் ஓட்டு? யாரைக் கேட்கிறீர்கள் ஓட்டு?

விவசாயிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டியை மாண்புமிகு அம்மா அவர்கள் தள்ளுபடி செய்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்யவேண்டும் எனக் கேட்ட தமிழக அரசுக்கு உதவாத உங்களுக்கு எதற்குப் போட வேண்டும் ஓட்டு? ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு? ஏன் போட வேண்டும் ஓட்டு?

சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு இடையூறு செய்யும் நீங்கள் எதற்குக் கேட்கிறீர்கள் ஓட்டு? யாரைக் கேட்கிறீர்கள் ஓட்டு? எதற்குக் கேட்கிறீர்கள் ஓட்டு? யாரைக் கேட்கிறீர்கள் ஓட்டு? (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–30*

பைக்கார மின் திட்டம் இயங்குவதற்குத் தடையாக இருந்த நீங்கள் எதற்குக் கேட்கிறீர்கள் ஓட்டு? யாரைக் கேட்கிறீர்கள் ஓட்டு?



பைக்காரா மின் திட்டம் இயங்குவதற்குத் தடையாக இருந்த நீங்கள் எதற்குக் கேட்கிறீர்கள் ஓட்டு? யாரைக் கேட்கிறீர்கள் ஓட்டு?

பசித்து வந்த பக்தர்களுக்குப் புசிக்க அன்னதானத் திட்டம் தந்தீர்களா? எதற்குக் கேட்கிறீர்கள் ஓட்டு? யாரைக் கேட்கிறீர்கள் ஓட்டு? எதற்குக் கேட்கிறீர்கள் ஓட்டு? யாரைக் கேட்கிறீர்கள் ஓட்டு? (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்துக் குழந்தைகளும் கட்டாயக் கல்வி பயில வேண்டும் என்று இலவசப் பாடப் புத்தகம் தந்தீர்களா அல்லது இலவச சைக்கிள் தந்தீர்களா? எதற்குக் கேட்கிறீர்கள் ஓட்டு? யாரைக் கேட்கிறீர்கள் ஓட்டு? (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டம்–ஒழுங்கைப் பாதுகாக்க காட்டு வீரப்பனைச் சுட்டுக் கொன்றதை குறை பேசிய உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு? ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு?

திரைப்படத் துறைக்குச் செய்த சாதனைகளைப் பொறுக்காமல், காக்காய்க் கூட்டம் என்று கேவலப்படுத்திய உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு? திரைப்படத் துறைக்குச் செய்த சாதனைகளைப் பொறுக்காமல், காக்காய்க் கூட்டம் என்று கேவலப்படுத்திய உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு?

ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதைத் தடுக்காத உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு? ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதைத் தடுக்காத உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு?

சட்டமன்றப் பேரவைக்கு மக்களின் பிரதிநிதியாக உங்களைத் தேர்ந்தெடுத்தால், ஐயோ, சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உறுப்பினராக உங்களைத் தேர்ந்தெடுத்தால், சட்டமன்றத்திற்கே வராத உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு? (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு?

சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கும் கட்டுப்படாமல் சட்டமன்றத்திலே நித்தம் நித்தம் தகராறு செய்கின்ற உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு?

மக்களுக்காக பாடுபடுகின்றவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆனால், தங்கள் குடும்ப மக்களுக்காகப் பாடுபடுகின்ற உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு? (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு?

தமிழக மக்களை நம்பாமல், கூட்டணிக் கட்சிகளை மட்டுமே நம்புகின்ற உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு? ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு?

உலகிற்கே சோறு படைக்கும் உழவர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்தாயா? உலகிற்கே சோறு படைக்கும் உழவர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்தாயா? எதற்குக் கேட்கிறாய் ஓட்டு? ஏன் கேட்கிறாய் ஓட்டு? எதற்குக் கேட்கிறாய் ஓட்டு? ஏன் கேட்கிறாய் ஓட்டு?

காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகளைப் பாதுகாக்க, காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காணாத உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு?

சென்னை மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த புதிய வீராணம் திட்டத்தைத் எதிர்த்த உங்களுக்கு ஏன் போட வேண்டும் ஓட்டு? எதற்குப் போட வேண்டும் ஓட்டு என்று வருகின்ற சட்டமன்றப் பேரவைத் தேர்தலின்போது, தெருவிற்கு வருகின்ற உங்களிடம் மக்கள் இந்தக் கேள்வியைக் கேட்பார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி, இதை bit notice-களாக அடித்து விநியோகிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குக்கூட தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். வெள்ள நிவாரணத்தின்போது பாதிக்கப்பட்ட தாய்மார்களையெல்லாம், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கே சென்று அந்த மக்களுக்கெல்லாம் ஆறுதல் கூறி, 2000 ரூபாய் பணம், அரிசி, வேஷ்டி–சேலை, மண்ணெண்ணெய் என்று வாரி வழங்கி, அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொடுத்து, அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து ஆறுதல் கூறிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கொச்சைப்படுத்திப் பேசினார் நேற்றைக்கு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள்.



நான் ஒரு கருத்தை இங்கே பதிய வைக்க விரும்புகிறேன். தமிழகத்திலே பாதிக்கப்பட்ட ஏழைகளாக இருந்தாலும் சரி; வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்களாக இருந்தாலும் சரி; விவசாயக் குடும்பத்திலே இருக்கின்றவர்களாக இருந்தாலும் சரி; தொழிலாளர்களுடைய தோழர்களாக இருந்தாலும் சரி; பாடுபடுகின்ற பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களெல்லாம் பாதிக்கப்படுகின்றபோது, தாயுள்ளத்தோடு அரவணைத்து, ஆறுதல் கூறக்கூடிய ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால் தன் மகன் பதவிக்கு வரவேண்டும்; தன் பேரன் பதவிக்கு வரவேண்டும்; தனது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பதவிக்கு வரவேண்டும் என்பதற்காக கூட்டணி கட்சிகளைக் கட்டிக்கொண்டு போஸ் கொடுக்கக்கூடியவர் புரட்சித் தலைவி அம்மா அல்ல என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பதவிக்காக பாவம் எல்லாக் கூட்டணிக் கட்சிகளையும் சேர்த்து கட்டிப் பிடித்து நித்தம் நித்தம் பேட்டி என்ற ஒன்றைச் சொல்லி, புளுகு டி.வி.-யிலே பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் தமிழகத்தினுடைய மக்கள் உணர மாட்டார்களா, சிந்திக்க மாட்டார்களா? கட்டாயம் சிந்திப்பார்கள். உங்களுக்குத் தேர்தலின்போது தக்க பாடத்தையும் புகட்டுவார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக்கூட செய்தித்தாள்களிலே எல்லாம் மிகப் பெரிய தலைப்புச் செய்தி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. சிவசாமி:** ஒரு வாரகாலமாக பாகிஸ்தானுடன் விளையாடுகின்ற இந்திய கிரிக்கெட் அணி வெற்றிபெறுமா? பாகிஸ்தான் அணி வெற்றிபெறுமா என்கின்ற மிகப்பெரிய ஒரு பரபரப்பான சூழ்நிலை. அங்கேகூட நமது இந்திய வீரர் சேவக் அவர்கள் double சதம் போட்டு இந்திய நாட்டிற்கு ஒரு பெருமை தேடிக்கொடுத்தார்கள். அந்த விளையாட்டு விளையாடுகின்றபோது, சேவக் எந்த மதத்தைச் சேர்ந்தவர்? எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? திராவிட

எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்று யாரும் பார்ப்பது இல்லை. அங்கே மதங்களுக்கு அப்பாற்பட்டு மனங்கள் இணைகின்ற ஒரு சூழ்நிலை அந்த விளையாட்டிலே ஏற்பட்டிருக்கின்றது. அதைத்தான் அடிமட்டத்திலே இருக்கக்கூடிய இளைஞர்கள், சிறுவர்கள், இவர்களெல்லாம் ஒன்றுபட்டு — ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு அவர்களது மனங்கள் எல்லாம் ஒன்றாக — இணைய வேண்டும்; இளம் வயதிலேயே இணையவேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பாக அந்த இளைஞர்களை விளையாட்டுத் துறையிலே ஊக்குவிப்பதற்காக ஒரு திட்டத்தை வாரி வழங்கினார்களே. அது உண்மையிலேயே மனித நேயம் உள்ளவர்கள் பாராட்டக்கூடிய ஒரு திட்டம். ஒரு வீட்டிலே பார்த்தால், ஐந்து ரூபாய் கொடுத்து கிரிக்கெட் பிளாஸ்டிக் மட்டை, அதைக்கூட வாங்க முடியாமல் எத்தனையோ தாய்மார்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறபோது, அந்தக் குழந்தைகளினுடைய உடல் நலத்தையும், உள்ளத்தையும் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு இணைக்கின்றவிதமாக ஒரு மாபெரும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மனதிலே உதித்திருக்கிறது என்றால், உண்மையிலேயே எண்ணிப்பார்க்கிறோம்; எத்தனையோ முதல்வர்கள் இந்த இந்தியாவிலே இருக்கலாம்; ஆனால், அனைத்து முதல்வர்களுக்கும் வழிகாட்டுகின்ற ஒரு முதல்வராக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூறி, இன்று மட்டுமல்ல, இனி வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலிலும் — இன்றைக்கு எதிர்க்கட்சிகளினுடைய கூடாரம் காலியாக இருக்கின்றது; இதைப்போல எதிர்வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் — எதிர்க்கட்சிகளுக்கு ஒரு இடம்கூட இல்லாமல், அனைத்து இடங்களிலும் அனைந்திந்திய அண்ணா தி.மு.க. வெற்றி பெற்று மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக அரியணையிலே அமருவார்கள் என்று கூறி, அதற்கு எங்களைப்போன்ற இளைஞர்கள், எங்களைப் போன்ற தொண்டர்கள் இரவும் பகலும் அயராது பாடுபடுவோம் என்று கூறி, நல்ல வாய்ப்பைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் (குறுக்கீடு) என்ன அரசன்?

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர், கவிஞர் சிவசாமி அவர்கள்,



பெட்ரோல் மற்றும் டீசல் விலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஐந்து ஆண்டுக் காலத்திலே உயர்த்தியதைவிட காங்கிரஸ் அரசாங்கம் ஒரு மடங்கு கூடுதலாக ஓராண்டு காலத்திலே பெட்ரோல் மற்றும் டீசல் விலையை உயர்த்தியது என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிவு செய்துகொள்கிறேன். (சிரிப்பு)

***திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்றவகையில், பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என்னைப் பேச பணித்தமைக்கு நான் முதற்கண் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேதகு ஆளுநர் உரை, தமிழக அரசினுடைய நான்கரை ஆண்டுக்கால சாதனைகளைத் தெளிவாக விளக்கியிருக்கிறது. அதேநேரத்திலே, மத்தியிலே ஆளுகின்ற அரசு, தமிழக மக்களையும், தமிழக மக்களின் நலன்களையும் எவ்வாறெல்லாம் புறக்கணித்து இருக்கிறது என்பதையும் பல இடங்களிலே சுட்டிக்காட்டியிருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சிகூட நேரடியாக பதில் சொல்கின்றவிதத்திலே கேட்டு, அவர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். அதைக்கூட என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், எந்தக் காரணமும் இல்லாமல் ஒரு மாபெரும் தேசிய இயக்கம், காங்கிரஸ் பேரியக்கம் வாலாட்டிக்கொண்டு ஓடுவது வெட்கக்கேடான விஷயம் என்பதை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். காங்கிரஸ் சொந்தக் காலில் நிற்க வேண்டாம். ஆனால், சுய மரியாதையோடு நிற்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் காங்கிரஸ் இருக்கின்ற காரணத்தினால்தான் மத்தியிலே ஆளுகிற சோனியா காந்தி அவர்கள்கூட தமிழகக் காங்கிரஸை கொஞ்சம்கூட ஏறெடுத்துப் பார்ப்பது இல்லை என்று நான் கருதுகிறேன். இப்படிப்பட்ட நிலை தொடர்கின்ற காரணத்தால்தான் தமிழகத்தைச் சுற்றி இருக்கிற மாநிலங்கள் அதாவது கர்நாடகத்திலே காங்கிரஸ் ஆளுகிறது, கேரளாவிலே காங்கிரஸ் ஆளுகிறது, ஆந்திராவிலே காங்கிரஸ் ஆளுகிறது, பாண்டிச்சேரியிலும் காங்கிரஸ் ஆளுகிறது. கேரளாவிலே உள்ள காங்கிரஸ் அரசு தமிழக மக்களுடைய நீராதாரத்தைக் கெடுக்கின்ற வகையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் தமிழக மக்களும் கோருகிற முல்லைப் பெரியார் அணை நீரின் கொள்ளளவை உயர்த்துகிறபோது, அதற்கு முட்டுக்கட்டை போடுகிறது.

பிற்பகல் 12–40

அதேபோல இன்றைக்கு ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆந்திர காங்கிரஸ் அரசு பாலாற்றிலே அணை கட்டி எப்படிக் காவிரி பிரச்சினை கர்நாடகத்திற்கும் நமக்கும் இருப்பதுபோல ஒரு நிரந்தரத் தடையை, நிரந்தர நீர் வள உரிமையை, தமிழக மக்கள் பெற்று வரும் உரிமையை தடுக்க நினைக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உரிய நேரத்திலே கடிதம் மூலமாக அதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என்று தமிழகப் பிரதிநிதி என்ற முறையில், தமிழக மக்களுடைய குடிமகன் என்ற முறையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல கர்நாடகத்திலே உள்ள அரசு காங்கிரஸ் அரசு, காவிரியினுடைய தமிழக மக்களுடைய உரிமையை முற்றிலும் பறித்து எந்த அளவுக்கெல்லாம் இடையூறு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு இடையூறு செய்து, தண்ணீர் தேவைப்படுகிற நேரத்திலே தேக்கி வைத்துக்கொண்டு தர மறுப்பதும், தண்ணீர் தேவையில்லாத நேரத்திலே தமிழகம் வெள்ளக் காடாக சூழுகின்ற நேரத்திலே எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் வினாடிக்கு இரண்டு இலட்சம் கன அடித் தண்ணீரை திறந்துவிட்டு தமிழகத்தின் சரிபாதியை வெள்ளத்தில் மூழ்கடித்த பெருமைகூட கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு உண்டு. இப்படித் தொடர்ந்து காங்கிரஸ் தமிழக மக்களுடைய உரிமையை, நலனை காக்கத் தவறுகிறது. இப்படிப்பட்ட கையாலாகாத, திறமையற்ற, சுய தெம்பில்லாத காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் இருக்கின்ற காரணத்தினால்தான் பக்கத்தில் இருக்கிற காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கோலோச்சுகிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நிச்சயமாக தொலைக்காட்சியிலே இந்தப் படம் ஒளிபரப்பப்படும். வாலாட்டிக்கொண்டு ஓடுகிற காங்கிரஸ்காரர்களைப் பற்றி சுயமரியாதையுள்ள காங்கிரஸ்காரன் உங்களை மதிப்பானா என்ற கேள்வியைமட்டும் நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படித் தொடர்ந்து இருக்கிற காரணத்தால்தான், தமிழகத்தை மத்திய அரசு தொடர்ந்து புறக்கணிக்கிறது. அது சுனாமியாக இருந்தாலும், வெள்ளமாக இருந்தாலும், இங்கே காங்கிரஸ் தயவு தேவையில்லை, பாராளுமன்றத்திலே 10 இடங்கள் கிடைத்தால் போதும், மத்தியிலே ஆட்சி இருந்தால் போதும் என்ற நிலையிலே தமிழக காங்கிரஸை ஒரு செல்லாக் காசாக மத்தியிலே உள்ள காங்கிரஸ்காரர்கள் கருதுகிறார்கள்.



சுனாமியைப் பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. சுனாமியை சென்றக் கூட்டத் தொடரிலே அதிகமாக அலசி விவாதித்திருக்கிறோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்கூட தற்போது பல்வேறு சான்றுகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். யுனெஸ்கோ எத்தனை பாராட்டுகள், உலகம் பாராட்டுகிறது, வல்லரசுகள் பாராட்டுகின்றன. யுனெஸ்கோ பாராட்டுகிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–45

நான் கூடுதலாக ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாட்டுப் பொங்கல் அன்று எங்களுடைய ஷட்டீஸ்கர் முதலமைச்சர் டாக்டர் ராம் சிங் அவர்கள் நாகப்பட்டினம் வந்திருந்தார்கள். எங்கோ இருக்கிற மாநிலம், பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த முதலமைச்சர் ஷட்டீஸ்கர் முதலமைச்சர் நாகப்பட்டினம் வந்து ஐந்து கோடி ரூபாய்க்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு கிராமத்திற்கு வீடுகள் கட்டித்தர வந்து அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அங்கே உள்ள குழந்தைகளைப் பார்த்து அவர்கள் கேட்டார்கள். எல்லோரையும் பார்க்க மழையின் காரணமாக கடற்கரைவரை செல்ல முடியவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே பாதிக்கப்பட்ட மக்களை எல்லாம் அவர் சந்தித்துப் பேசுவதற்குரிய ஏற்பாடு இருந்தது. பெற்றோர்களை இழந்த, தாயை, தகப்பனை ஒருசேர பறி கொடுத்த குழந்தைகள் வரிசையாக நின்றார்கள். மலர் கொத்து கொடுத்து வரவேற்றார்கள். பேசி முடித்து வெளியே வருகிறபோது பெயரளவிற்கு சில குழந்தைகளைப் பார்த்து விசாரித்தார்கள். ஆர்வ மிகுதியால் சில குழந்தைகளைப் பார்த்து விசாரிக்கின்றபோது அவர்கள் தன்னம்பிக்கையோடு பதில் சொன்னார்கள். வியந்து போனார்கள். எங்களுடைய பி.ஜே.பி. முதலமைச்சர், எங்கோயிருக்கிற முதலமைச்சர். அரசியல் ஆதாயம் கிடையாது. எந்த இலாபமும் கிடையாது. எந்தப் பலனையும் எதிர்பார்க்காத எங்கள் முதலமைச்சர், அந்தக் குழந்தைகளைப் பார்த்துப் பேசிவிட்டு, எங்கள் மாநிலத் தலைவர் திரு. சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்களிடம் பேசுகிறபொழுது, இந்த அரசு சுனாமியை சரியாகக் கையாண்டிருக்கிறது. ஒரு பச்சிளங்குழந்தை, பெற்றோரை இழந்த குழந்தை மனத்தளர்ச்சியில்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) மனத்தளர்ச்சியில்லாமல், அவர்களுக்குக்கூட தன்னம்பிக்கையைத் தந்திருக்கிறது. நிச்சயமாக, அடிக்கல் நாட்டுவிழாவோடு நான் முடிக்கலாம் என்று நினைத்தேன். அடுத்த முறை கிரஹப்பிரவேசத்திற்கு நான் வருவேன்.

அப்போது நான் பாராட்டிப் பேசுவேன். உரக்க வெளியிலே பேசுவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுதான் தேசிய ஒருமைப்பாடு.

எங்கோயிருக்கிற முதலமைச்சர், சுனாமி வந்த அடுத்த சில மணி நேரத்திலே நரேந்திரமோடி அவர்கள் தமிழக முதல்வரிடத்திலே தொலைபேசியிலே பேசி, உதவிக்கரம் நீட்டுகிறார்கள். எங்கெங்கெல்லாம் நாங்கள் ஆட்சியிலே இருக்கிறோமோ, எல்லோருமே முடிந்த அளவிற்கு, மத்தியப் பிரதேசமாக இருந்தாலும்சரி, இராஜஸ்தானாக இருந்தாலும்சரி, தொகையாகவோ, தார்ப்பாயாகவோ, துணியாகவோ, அரிசியாகவோ கொடுத்திருக்கிறோம். தேசியம், ஒரு தேசியக் கட்சி, அது ஆற்ற வேண்டிய கடமையை, நாடு ஒன்று என்ற இலட்சியத்தோடு செய்திருக்கிறோம். ஆனால், ஒன்றாகப் பார்க்க வேண்டிய மத்திய அரசு, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற காங்கிரஸ் அரசு, இங்கேயிருக்கிற காங்கிரஸ்காரர்கள், நமக்குள்ள அடிப்படை உரிமையைக்கூட பெற்றுத்தர மறுக்கிறார்கள் என்றால், வரலாறு அவர்களை மன்னிக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிகத்தொகை கேட்கவில்லை. சென்ற முறை சுனாமியிலே ஏற்பட்ட பாதிப்பு உங்கள் அனைவருக்கும் தெரியும். சில விநாடி நேரத்திலே, ஒரு *5* மணித் துளியிலே, சென்னையிலே தொடங்கி, கடலூர், நாகப்பட்டினம் வழியாக, கன்னியாகுமரி வரை, தமிழகத்தின் கடற்கரை ஓரத்திலே இருக்கிற அத்தனை மீனவ மக்களையும், சில மணித் துளிகளிலே சுனாமிப் பேரலை, பேரழிவைத் தந்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தையே பாதித்திருக்கிறது. அவ்வளவு பெரிய இயற்கைச் சீற்றத்தினுடைய இடர்பாடுகளுக்கிடையே, அடுத்த சில மணி நேரத்திலே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடற்கரைக்கே வந்தார்கள். எங்கள் நாகை மாவட்டத்திற்கு helicopter—ரிலே வந்தார்கள். சோனியாகாந்தி அவர்கள் ஆகாய விமானத்திலேயிருந்து பார்வையிட்டார்கள். பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் வந்தார்கள். எங்கள் அத்வானி அவர்கள்கூட வந்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழகத்திலே இருக்கிற *12* அமைச்சர்களும் வந்தார்கள். டாக்டர் இராமதாஸ், வை.கோ. போன்ற கட்சித் தலைவர்கள், நல்லக்கண்ணு போன்றவர்கள்கூட வந்தார்கள். மத்திய அரசு ஆய்வுக் குழுவை அனுப்பியது. சேதத்தை அவர்களே கணக்கிட்டார்கள். ரூ.*4,865* கோடி என்று புள்ளிவிவரம் தந்தார்கள். கொடுத்த தொகை எவ்வளவு? வெறும் *820* கோடி ரூபாய்தானே கொடுத்திருக்கிறீர்கள். மீதியைக் கொடுக்க மறுப்பதன் காரணம் என்ன? அது தொலையட்டும், நிறைய பேசியாச்சு. அதைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை.



இப்போது வெள்ளம். மூன்று மாதகாலம் தொடர் மழை, வெள்ளம். வரலாறு காணாத அளவிற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், எனக்கு நினைவு தெரிந்த காலம் முதல், கொள்ளிடத்திலே இவ்வளவு பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது கிடையாது. நமது அமைச்சர் அவர்கள்கூட வந்திருந்தார்கள். பார்த்தோம். அப்போதெல்லாம் கரையோரத்தில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள், வயதானவர்களைக் கேட்கின்றபொழுது, வெள்ளைக்காரன் காலத்திலே இப்படிப் போச்சு என்று சொன்னார்கள். பொதுப் பணித் துறை அதிகாரிகளைக் கேட்கின்றபொழுது, *1926*–லே *3* இலட்சம் கன அடி தண்ணீர் போச்சு. அதற்குப் பின்பு கிடையாது என்று சொன்னார்கள். ஆனால், வரலாறே காணாத அளவிற்கு, கொள்ளிடம் ஆறு தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை போகாத அளவிற்கு நாலேகால் இலட்சம் கன அடி தண்ணீர், ஒரு விநாடிக்கு கொள்ளிடத்திலே பாய்ந்திருக்கிறது. பல இடங்களிலே கரைகள் உடைபட்டிருக்கின்றன. மிகப்பெரிய சேதாரம். தமிழக அரசு ஆய்வு செய்து, வெள்ள நிவாரணத் தொகையைக் கேட்கிறார்கள். அதிகம் கேட்கவில்லை. வெறும் *13* ஆயிரத்து, *525* கோடி ரூபாய்தான் கேட்கிறார்கள். மும்பையிலே மூன்று நாட்கள் மழை. யாரும் ஆய்வுக் குழுவையே அனுப்பவில்லை. இங்கே ஆய்வுக் குழு மூன்று முறை வந்தார்கள். ஆய்வுக் குழுவேயில்லாமல் *1,000* கோடி ரூபாயை மும்பைக்கு உடனே கொடுத்தார்கள். பீஹாரிலே மூவாயிரம் கோடிக்கு மேலே கொடுக்கிறார்கள். ஆனால், இவ்வளவு பெரிய பாதிப்பு. வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறார்கள், விவசாயிகள். கடந்த மூன்று பருவத்திலே பெய்தும் கெடுத்து, பெய்யாமலும் கெடுத்து, வறட்சியாலும் பாழ்பட்டு, இன்றைக்கு கஷ்டப்பட்டு, கொஞ்சம் பருவமழை சரியான நேரத்திலே பெய்ததன் விளைவாக, விவசாயிகள் கடனை வாங்கிப்போட்டு பயிர் செய்து, குருத்து வெடிக்கிற நேரத்திலே மழை பொழிந்து, வெள்ளம் சூழ்ந்து, ஆறுகள் உடைபட்டு, ஏரிகள் உடைபட்டு, பயிர்கள் மூழ்கி *22* மாவட்டங்கள் செங்கடலைப்போலத் தோன்றியதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். பார்த்துச் சென்றிருக்கிறீர்கள்.

*பிற்பகல் 12–50*

*500* கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். அம்மா போன பிறகுதான் கொடுக்கிறார்கள். *500* கோடி ரூபாய்தான் முதலிலே கொடுக்கிறார்கள். பலமுறை கேட்கிறார்கள். பல கட்சிகள் வலியுறுத்துகின்றன. இன்னும்

குறிப்பாகச் சொல்லப்போனால் நாடகமோ, சரியோ அத்தனை அமைச்சர்களும் சேர்ந்து, அத்தனை கட்சிகளும் தீர்மானம்கூட போட்டு அனுப்பியிருக்கிறார்கள். கொடுக்க மறுக்கிறது, தயங்குகிறது மத்திய அரசு. மாண்புமிகு அம்மா அவர்கள் டெல்லி சென்றதற்கு பிறகு ஒரு 500 கோடி ரூபாய் வெள்ள பாதிப்புக்காக கொடுக்கிறார்கள். உண்மையிலேயே நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தலை வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அமைச்சர் பெருமக்களை தெருத்தெருவாக வரவழைத்திருக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அண்ணன் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் ஒரு ஊராட்சி மன்றத் தலைவரைப் போல எனது தொகுதியில் எல்லா இடங்களுக்கும் வந்தார்கள். ஆறுதல் தந்தார்கள். அம்மா இருக்கிறார்கள், பார்த்துக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். அதேபோல நானும் எல்லா இட்ங்களுக்கும் சென்றிருந்தேன்.

ஆனால் என்னுடைய பகுதியிலே இருக்கிற மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யர் அவர்கள் தொகுதிப் பக்கமே வரவில்லை. நம்முடைய மந்திரி அவர்கள் வருகிறார்கள். ஊராட்சி மன்றத் தலைவரைப் போல மூன்று முறை நான்குமுறை வந்துவிட்டார். நம்முடைய எம்.பி. எங்கே, நாங்கள் கேட்கவில்லை. காங்கிரஸ்காரர்களே கேட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். உடனே போன் பண்ணி கேட்கிறார்கள். நாங்கள் எல்லாம், காங்கிரஸ்காரர்கள் எல்லாம் கேட்ட பிறகு, தொலைபேசியிலே பேசுகிறார்கள். உடனே மணிசங்கர் அய்யர் சொல்கிறார், என்னைக் கேட்டால் நான் என்னப்பா சொல்றது, அவா விட மாட்டாளே சும்மா, அவர் பாஷையிலே பேசுகிறார். அடுத்த நாள் அமைச்சரைக் காணவில்லை. மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் மணிசங்கர் அய்யரைக் காணவில்லை. வெள்ளத்திலே அடித்து செல்லப்பட்டுவிட்டாரா என்று (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதி முழுவதும் போஸ்டர் ஒட்டப்பட்டது. தொகுதி முழுவதும் ஆயிரக்கணக்கிலே — இன்னும் குறிப்பாகச் சொன்னால் காங்கிரஸ்காரர்கள்தான் — அச்சடித்து ஒட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெட்கம். தொகுதி முழுவதும்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, போஸ்டரைப் பார்க்கக்கூட வரவில்லையா அவர்? (சிரிப்பு)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** அதன் பிறகுதான் வருகிறார். நாங்களும் ஆர்ப்பாட்டம் நடத்தினோம், மணிசங்கர் அய்யரைக் காணவில்லை என்று வந்தார்கள். அவருக்கே உரிய பாணியிலே, இரண்டே நாளிலே



6 தொகுதிகளுக்கும் ஒரு டூர் மாதிரி போட்டார். மயிலாடுதுறையிலே ஒரு ஆய்வுக் கூட்டம் கூட அவரே ஏற்பாடு செய்தார். அரசு முறைக் கூட்டம் போல. மத்திய அரசு அதிகாரிகள் வந்தார்கள். மணிசங்கர் அய்யர் வந்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தார்கள். இன்னும் குறிப்பாக சொல்லப்போனால் மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு காலம் கடந்து அவர்கள் வந்தார்கள். நானும் அதிலே பங்கெடுத்துக்கொண்டேன். நான் மட்டுமல்ல, நாகை நாடாளுமன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் விஜயன் அவர்களும் அங்கு வந்திருந்தார். ஓரளவுக்கு கூட்டம் இருந்தது. அவர்கள் பேசினார்கள். நான் சொன்னேன், நீங்கள் இவ்வளவு லேட்டாக வந்திருக்கிறீர்கள்,' பரவாயில்லை, எங்களுக்கு பயிர் எல்லாம் அழிந்துப் போய்விட்டது. மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் வருகிறபோதெல்லாம் Bank எல்லோருக்கும் Education loan தருகிறார்கள் என்று சொல்கிறார். ஆனால் எந்த Bank-மே கொடுக்க மாட்டேங்கிறாங்க. மாயவரம் Canara Bank-லேதான் அவர் கூட்டம் போட்டு பேசிவிட்டுப் போனார். அந்த Bank-லேகூட தர மாட்டேங்கிறாங்களே மணிசங்கர் அய்யர் அவர்களே, நீங்களாவது சிபாரிசு பண்ண முடியுமா, என்று நான் கேட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) உடனே என்னை ஆதரிப்பது போல விவரம் தெரியாமல், விஜயன் அவர்கள்கூட எழுந்து, ஆம். Nationalized Bank எந்த Bank-ம் நாங்கள் சொன்னால் கேட்கிறது கிடையாது. சொன்னது, தி.மு.க. எம்.பி. விஜயன். அய்யரைப் பார்த்து சொன்னார் அவர், இதுமாதிரிங்க மணி சங்கர் அய்யரைப் பார்த்து, இவ்வாறு நம்முடைய சுய உதவிக் குழுக்களுக்கும் பணம் தருவது கிடையாது. Education loan-க்கு பணம் கொடுக்கிறது கிடையாது, Agricultural loan கொடுக்கிறது கிடையாது என்று சொன்னது விஜயன் அவர்கள். ஆமாம்பா நான்போன இடத்திலேயும் இதையேதான் என்னையே கேட்கிறா எல்லோரும். அவர் சொன்னது, இதேமாதிரி பேசினார். நான் போன இடத்திலேயும் என்னை இதையே கேட்கிறா, நான் போய் பி.சி.யிடம் சொல்கிறேன். நான் வாங்கித் தருகிறேன் என்று சொல்லவில்லை. அரசு பரிசீலிக்கும் என்றும் சொல்லவில்லை. நான் பி.சி. யிடம் பேசுகிறேனப்பா. அவ்வளவுதான். அதன் பிறகு மக்கள் விடவில்லை. நாங்களும் கேட்டோம், என்னங்க, இந்த மாதிரி இருக்கிறீர்கள். இப்பொழுது நிவாரணம் — இவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறதே, நீங்கள் கொள்ளிடத்திலே சென்று பார்த்தீர்களே, ஏதாவது நீங்கள் எங்களுக்கு வாங்கித் தர முடியுமா என்று கேட்டோம். நான் பி.சி. இடம் பேசுகிறேன் என்று சொன்னார். என்னங்க பி.சி. இடம் பேசுகிறேன் என்கிறீர்கள்? பிரதமரிடம்தானே நீங்கள் பேச வேண்டும்? பிரதமரிடம் பேசாமல் பி.சி.-யிடம் பேசுகிறேன்

என்று நீங்கள் சொல்கிறீர்களே என்று கேட்டபோது, அப்படியே கூட்டத்தைக் கலைத்துவிட்டு எழுந்து வெளியே போய்விட்டார்.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பி.சி. என்றால் யார்? போலீஸ் கான்ஸ்டபிளா, அல்லது... (சிரிப்பு)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** ப. சிதம்பரம். அவர் சொன்னது பி.சி. என்றால் ப. சிதம்பரம் (மேசையைத் தட்டும் ஒலி) ப. சிதம்பரத்தைத்தான் சொன்னார். (சிரிப்பு) சரி, ப. சிதம்பரமாவது இங்கே வருகிறார், சென்னைக்கு வருகிறார். முதல்வர் அவர்கள் detail ஆக சொல்லிவிட்டார்கள். நான் சொல்லக்கூடாது. அவர் நிதி இல்லை என்று சொல்லவில்லை. மத்திய அரசிலே ஏராளமான நிதி இருக்கிறது. விவரம் தரவில்லை என்று சொல்கிறார்கள். நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் நேரிடையாக சென்று பிரதமரைச் சந்தித்து அவருக்குப் புரிய வைத்தாகிவிட்டது. அவர் வேறு மாநிலத்துக்காரர். சரியாகப் புரிந்துகொண்டு பதில் சொல்கிறார். ஆனால், நீ, இங்கேயே பிறந்து, இங்கேயே வளர்ந்திருக்கிற காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நீ கபட நாடகம் ஆடிக்கொண்டு தினம், தினம், தினம் ஒரு பொய் சொல்லிக்கொண்டிருக்கிறாய். சென்ற கூட்டத்தொடரிலே உங்களுக்கு ஒரு பட்டம் கொடுத்தார்கள், இங்கு எல்லோரும் சேர்ந்து, 'வக்கற்ற நிதி அமைச்சர்' என்று. (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ்காரர்கள் எல்லாம் வெளியிலே போனார்கள். அப்பொழுது வெளிநடப்புச் செய்கிறோம் என்று வெளியிலே போய்விட்டார்கள். இன்றைக்குச் சொல்றோம் புதுப் பட்டம், "வாய்ப் பந்தல் வீரர் ப. சிதம்பரம் அவர்கள்" (மேசையைத் தட்டும் ஒலி) அவர், தேர்தல் நேரத்திலே சொன்னார்கள், சிவகங்கையிலிருந்து வெற்றிபெற்றதற்குப் பிறகு, இனி சிவகங்கையிலிருந்து இந்தியாவைப் பார்ப்பேன் என்று சொன்னார்கள். ப. சிதம்பரம் அவர்கள் பேசிய பேச்சு இது. பத்திரிகையிலே ஆசிய கண்டத்திலேயே மிகச் சிறந்த நிதி அமைச்சர் என்றெல்லாம் உங்களைப் புகழ்ந்து பேசியதை நான் பத்திரிகையிலே படித்திருக்கிறேன். டெல்லியிலே இருந்து தமிழகத்தைப் பார்க்க வெட்கப்படுகிறீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். சிவகங்கையிலிருந்து இந்தியாவைப் பார்க்க வேண்டாம் — டெல்லியிலே இருந்துகொண்டு சென்னைக்கு வந்த பிறகுகூட இந்த பாழ்பட்டு நிற்கிற, முற்றிலும் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கிற



விவசாயிகளைப் பார்க்க மறுக்கும் நோக்கம் என்ன? அரசியல் ஆதாயத்தைத் தவிர வேறு என்ன இருக்க முடியும் என்பதை அறிவார்ந்த நிதி அமைச்சரிடம் நான் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

தமிழக முதல்வர் அவர்கள் இந்த வெள்ள நிவாரணத்திலே நற்பெயரை ஈட்டி இருக்கிறார் என்பதற்கு ஏராளமான சான்றுகளைச் சொல்லலாம். எனது தொகுதியிலே election-க்கு ஓட்டு போட எப்படி க்யூவிலே நிற்பார்களோ, அப்படித்தான் வரிசையாக எல்லாத் தரப்பு மக்களும், அதிலே வெள்ளைக் கார்டு, பச்சைக் கார்டு என்றெல்லாம் பார்க்கவில்லை. சில பேர் நிறைய நகைகளைப் போட்டுக்கொண்டுகூட நிவாரணம் வாங்கிக் கொண்டு போனார்கள். அதிக நகை போட்டு காரிலே வந்துகூட, நின்று, க்யூவிலே நின்று (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) ரொம்ப வெட்கமாகக்கூட எனக்கு இருந்தது. காரிலே வந்து, 3 கார் அப்படியே எம்எல்ஏ. மாதிரி, சாதாரணமாக கட்சி ஊர்வலம்போல வந்து நிற்பார்கள். உடனே கியூவிலே நிற்பவர்கள் க்யூ, க்யூ என்று தடுக்கச் சொல்வார்கள். நான்கூட வெட்கப்பட்டு போய் விடுவார்களோ என்று பார்த்தால் போக மாட்டார்கள். வரிசையிலே நின்று எல்லோரும் பணம் பெற்றார்கள். நான் மயிலாடுதுறை நகரத்தைப் பொறுத்தவரைக்கும் சில குழுக்களாக எல்லா கட்சிக்காரர்களும் நில்லுங்கப்பா. இதில் ஒன்றும் அரசியல் ஆதாயம் எல்லாம் தேவையில்லை. நில்லுங்கள் என்றேன். எதிர்க்கட்சிக்காரர்கள் முகம் வாடி இருந்த மாதிரி இருந்தது. அவர்களே நாங்கள் நின்று என்ன பிரயோஜனம்? எல்லாம் அம்மா கொடுத்தார்கள், அம்மா கொடுத்தார்கள் என்று சொல்லிக்கொண்டு போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மை. கரை வேட்டி கட்டியிருக்கிறார்கள் — நான் உடனே கிண்டல் பண்ணினேன் அவர்களைப் பார்த்து. வேட்டி கட்டிக்கொண்டிருக்கிறாயா, கரை வேட்டி கட்டிக்கொண்டு இருக்கிறாயா, நில்லுப்பா, நின்று கும்பிடுப்பா என்று. என்ன பயன்? கும்பிட்டுவிட்டு அவர்களுக்கு ஓட்டு கேட்டுக்கொண்டிருக்கிறோம். வேதனையோடு எதிர்க்கட்சிகள் சொல்லியதை நான் நேரிலே அறிவேன். அந்த பயம்தான் சாதாரண ஆயிரம் கோடி கொடுத்ததற்காகவே இந்த அளவிற்கு நற்பெயரை ஈட்டி விட்டார்களே? மேலும் 12 ஆயிரம் கோடி கொடுத்துவிட்டால் என்ன செய்வது? எவ்வாறு இவர்களை எதிர்ப்பது? எத்தனை கட்சி சேர்ந்தாலும்கூட எதிர்க்க முடியாதே என்ற அச்சத்தில்தான் (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) பிரதமர் கொடுக்க நினைத்ததை இவர்கள் தடுக்கிறார்கள் என்பதற்கு இதுவே சான்றாக நான் கருதுகிறேன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227002
சென்னை-600 008
நூலகம்
D
V 24,3/06
Pol.S7.3

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இது தேசிய ஒருமைப்பாட்டிற்கு விடப்பட்டிருக்கிற சவாலாகத்தான் நாங்கள் எடுத்துக்கொள்ள விரும்புகிறோம். என்னைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் சென்றபோது கூடுதலாக 500 கோடி ரூபாய் கொடுத்தார்கள். ஆனால், டெல்லிக்குச் செல்கிறபோது இங்கே உள்ள சில புலனாய்வு வாரப் பத்திரிகைகளில் எல்லாம், முதல்வர் அவர்கள் டெல்லி செல்கிறார்கள், பிரதமர் பணம் கொடுக்கவில்லையென்றால் அவர்கள் அங்கு ஒரு போராட்டம் நடத்துவார்கள் என்பதைப்போல ஒரு செய்தியை வெளியிட்டன. இன்றைக்குக் காலம் கனிந்து இருக்கிறது. மக்கள் சரியாக பிரச்சினையைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசு இயன்ற அளவுக்குக் கொடுத்திருக்கிறது. நேற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் சபையில் அறிவித்ததைப்போல, நெற்பயிர் பாதித்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூபாய் 8,000 கிடைக்க வேண்டுமேயானால், கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10,000 கிடைக்க வேண்டுமேயானால், தோட்டப்பயிர் வளர்த்த விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டுமேயானால் டெல்லியிலிருந்து வரவேண்டிய 12,000 கோடி ரூபாய் வந்தால்தான் கொடுக்க முடியும் என்ற நிலையை பாதிக்கப்பட்டிருக்கிற, 3 ஆண்டுக்காலம் வறட்சியிலே வாடி, வெள்ளத்தினால் மூழ்கி அழிந்து கொண்டிருக்கிற விவசாயிகள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். தவறு எங்கே இருக்கிறது என்பதை மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள், பயன்பெறப் போகின்றவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இதிலே எந்தக் கட்சிக்காரர்களும் சொல்லி யாரும் கேட்க மாட்டார்கள். (குறுக்கீடு) ஆமாம். தி.மு.க.காரங்களே நிவாரணம் வாங்க வேண்டாமென்று சொன்னால் போகாமல் இருப்பார்களா? பார்த்தார்கள் மயிலாடுதுறையிலே.

பிற்பகல் 1–00

நான் ஒரு சான்று சொல்ல விரும்புகிறேன். மயிலாடுதுறையிலே முதல் நாள் நிவாரணம் ஒழுங்காகக் கிடைத்தது. அடுத்த நாள் நிவாரணம், அதிகாரிகள் வந்து விட்டார்கள், V.A.O. வந்துவிட்டார், Bill Collector வந்துவிட்டார். சில அரசியல் காரணங்களுக்காக பணம் வர தாமதமாகியது. மக்கள் வீதிக்கு வந்துவிட்டார்கள். அந்தந்தக் கட்சி கவுன்சிலர்கள்கூட போகாதீங்க, நாளைக்கு வாங்கலாம் என்று சொல்லியும் போகத் தயாராக இல்லை. வீதிக்கு வந்துவிட்டார்கள். நான்கரை மணி நேரம் போக்குவரத்து தடை செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியர் வந்ததற்குப் பிறகு பணம் கொடுக்கப்பட்டது. போராடியதன் மூலம்தான் அந்தப்



பணம் கிடைத்ததாக நம்பிக் கொண்டிருந்தார்கள். நான் சொல்கிறேன், இன்றைக்கு 12,000 கோடி ரூபாய், நீங்கள் கோரிய தொகையிலே, ஒரு ரூபாய்கூட குறைத்துத் தரக்கூடாது. தமிழக அரசு ஒரு ரூபாயைக்கூட, வெறும் ஒரு ரூபாயைக்கூட மைய அரசிடமிருந்து குறைத்து கேட்கக்கூடாது. அதை அப்படியே நாம் பெற்றாக வேண்டும், பெற வேண்டும். தமிழக மக்களுடைய நலனுக்காக தமிழகத்தில் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுடைய நலனுக்காக அவ்வளவையும் பெற்றாக வேண்டும். நீங்கள் கோபப் பார்வையோடு இருக்கிற காரணத்தால்தான், போன காரணத்தால்தான், 500 கோடி ரூபாயை தந்ததாக நாங்கள் நம்புகிறோம். மீண்டும் உங்களை நாங்கள் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களே, நீங்கள் சென்று டெல்லியிலே அமர்ந்தால் ஒரு ரூபாய்கூட குறைக்காமல் மைய அரசு தானாகவே கொண்டு வந்து கொட்டும். போராட வேண்டிய அவசியமே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) டெல்லியிலிருந்து ஒரு போராட்டத்தை அறிவித்தால் போதும்.

நோக்கம் எதுவாக இருந்தாலுங்கூட, இந்த நாடு ஒரே நாடு, ஒரே மக்கள், தேசிய ஒருமைப்பாட்டிலே நம்பிக்கை உள்ள நாங்கள், பாரதிய ஜனதா கட்சியின் அத்தனை எம்.பி.–க்களும், நாங்களும் தெளிவாக தீர்மானம் போட்டோம். தேசிய செயற்குழுவிலே, பி.ஜே.பி.–யினுடைய தேசிய செயற்குழுவிலே, தமிழக அரசு கோரிய தொகையை அப்படியே கொடுக்க வேண்டுமென்று மைய அரசுக்கு அகில இந்திய பி.ஜே.பி.–யில் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம்.

தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள், டெல்லிக்குச் சென்று தமிழக மக்களுடைய வாழ்வுரிமைக்காக—யாசகம் கேட்கவில்லை, தமிழக மக்களுக்கு யாசகம் கொடுப்பதைப்போல, மைய அரசு தன் கைப்பணத்தை எடுத்துக் கொடுப்பதைப்போல கேட்கவில்லை. இங்கிருந்து திரட்டப்படுகின்ற வரிப் பணம், வரிப் பணம், எங்களுடைய வரிப் பணம், எங்கள் வரிப் பணம். (மேசையைத் தட்டும் ஒலி) பல வகைகளிலே—டீசல் விற்றால் வரி, பெட்ரோல் விற்றால் வரி, Gas விற்றால் வரி, வங்கியிலே பணத்தைப் போட்டு எடுத்தால் வரி—இந்த சிதம்பரம் புண்ணியத்திலே, பணத்தை போட்டு எடுத்தாலும் வரி. (சிரிப்பு)—இப்படிப்பட்ட நிலையிலே எங்கள் பணத்தை, தமிழக மக்கள் பணத்தை, நாங்கள் பாதிக்கப்படுகிறபோது நீ கொடுக்க மறுத்தால் எடுக்கின்ற உரிமை எங்களுக்கு இருக்கிறது என்பதை உணர்த்துகின்ற வகையிலே தமிழக முதல்வர், எங்கள் தலைவராக இருக்கின்ற—தமிழக மக்கள்

அனைவருக்கும், 6 கோடி தமிழக மக்களுக்கும் தலைவி நீங்கள், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஒரு கட்சிக்கு அல்ல; ஒரு கட்சிக்கு சிலர் தலைவராக இருக்கலாம். இந்த அவையில் பி.ஜே.பி.–க்கு எங்கள் கே.என். இலட்சுமணன் அவர்கள் எங்களுக்கு எல்லாம் தலைவராக இருக்கிறார். திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் எங்கள் கட்சிக்குத் தலைவராக இருக்கிறார். முதலமைச்சர் என்ற முறையிலே எல்லா கட்சி உறுப்பினர்களுக்கும் நீங்கள்தான் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினால், தமிழக மக்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காக, உரிமையைப் பெறுவதற்காக நீங்கள் ஒருநாள் டெல்லியிலே அமர்ந்தால், ஒரு போராட்டம் நடத்தினால் நிச்சயமாக தமிழகம் ஸ்தம்பிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்று சொல்வார்கள், உண்டு கொழுத்தவன் தரமாட்டான், அதை வயிறு பசித்தவன் விடமாட்டான் என்பதுதான் பழமொழி. பசித்திருக்கிறார்கள். வயிறு பசித்தவன் விடமாட்டான். நிச்சயமாக மைய அரசு கொழுத்திருக்கிறது. காரணம், அரவணைப்போடு இவ்வளவு பெரிய கட்சி இருக்கிறது. ஆகையால் அவர்கள் கொழுத்திருக்கிறவர்கள், தரமாட்டார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட நாம் அதைப் பெறாமல் விடக்கூடாது என்று மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகையினாலே அப்படி ஒரு போராட்டத்தைக்கூட நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் டெல்லியிலே அறிவித்தால் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த அத்தனை எம்பிக்களும் உங்கள் பக்கம் நிற்கத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த தமிழக மக்களுடைய வரிப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, இவர்கள் தர மறுப்பது தேசத் துரோகம் என்பதை மைய அரசு உணர வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

*பிற்பகல் 1–05*

ஆகையினாலே ஒரு விஷயம். எவ்வாறு நாங்கள் கேட்பது அரசியல் என்று நீங்கள் சொன்னால், இங்கே இருக்கின்ற அத்தனை கட்சிகளும் ஏதோ அரசியல் ஆதாயம் பெறுவதற்குத்தான் இவர்கள் கேட்கிறார்கள் என்று சொன்னால், அது தவறு. நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும், தர மறுப்பதும் அரசியல் என்பதை ஆளுங்கட்சி புரிந்துகொள்ள வேண்டும். தமிழக முதல்வர் அவர்கள் நான் சொல்லியதைப்போல ஒரு போராட்டத்தை அறிவித்தால் இங்குள்ள மக்கள் 12 அமைச்சர்களையும், மத்திய அமைச்சர்களையும் நடமாட விடமாட்டார்கள். நீங்கள் இராஜினாமா செய்யுங்கள் என்று கோரியே போராட்டம் நடத்துவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



கொஞ்சம், கொஞ்சமாக இந்தப் பிரச்சினை பள்ளி மாணவர்கள் முதல் வயதானவர்கள் வரை, எல்லாத் தரப்பு மக்களிடத்திலும் சென்று சேர்ந்து இருக்கிறது. மைய அரசு வஞ்சம் தீர்க்கிறது. மைய அரசு பழி வாங்குகிறது. மைய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொண்டிருக்கிறது என்பதை தமிழகத்தினுடைய அத்தனை மக்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நமக்கு சார்பாக எழுதுகிற பத்திரிகைக்காரர்களும், எதிர்ப்பாக எழுதுகிற பத்திரிகைக்காரர்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள அத்தனை நிருபர்களுக்கும் தெரியும். எல்லா நிருபர்களுக்கும் தெரியும். மைய அரசு நாடகம் ஆடுகிறது, கபட நாடகம் ஆடுகிறது, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழக மக்களுடைய அரசியல் ஆதாயம் கருதி நிவாரணத் தொகையை ஒத்திப் போடுகிறது என்பது எல்லா மீடியாக்களுக்கும் தெரியும். அது தொலைக்காட்சியாக இருந்தாலும் சரி, இதழியல் துறையாக இருந்தாலும் சரி, தெரிந்திருக்கும். நீங்கள் போராட்டத்தை அறிவித்தால், போராடியே பழக்கப்பட்டிருக்கிற அந்த கிழிசல் பதாகையை தூக்கிக்கொண்டு, நீங்கள் கேட்காமலேயே, சிகப்புக் கட்சிக்காரர்கள் ஓடிவந்து விடுவார்கள். உங்களோடுகூட ஓடிவந்து விடுவார்கள். எல்லா கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் உங்கள் பக்கம் ஓடிவந்து விடுவார்கள். அவர்களை நான் கேட்கிறேன், சாதாரணமாக திருவாரூரிலே, திருத்துறைப்பூண்டியிலே வறட்சிக் காலத்திலே, வயோதிகத்தாலோ, நோயாலோ, இயற்கையாலோ யாராவது மரணம் அடைந்தால் 'பட்டினிச் சாவு, பட்டினிச் சாவு' என்று பேட்டி கொடுத்தீர்களே, எங்கே போயிற்று உங்களுடைய போராட்ட உணர்வு? (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு பொதுவுடைமைக் கட்சிக்காரர்களுக்கும்தான், வலது கம்யூனிஸ்டும் சரி, இடது கம்யூனிஸ்டும் சரி, உங்களுடைய போராட்ட உணர்வு மழுங்கிப் போனதற்குக் காரணம் என்ன? வெறும் அரசியல், அரசியல், அரசியல். (மேசையைத் தட்டும் ஒலி)

மன்மோகன் சிங் அவர்களிடத்திலே பெட்ரோலியப் பொருட்களின் விலை உயருமா என்று கேட்பார்கள். அவர் வெளிநாட்டிலே இருப்பார். தொலைக்காட்சியிலே பார்த்திருக்கிறோம். பத்திரிகையிலே படித்திருக்கிறோம். தொலைக்காட்சியிலே பேட்டி கேட்பார்கள். பெட்ரோலியப் பொருட்களின் விலை உயரப் போகிறதாமே? என்று. "இன்னும் முடிவு எடுக்கவில்லை. நாங்கள் கம்யூனிஸ்ட் கட்சியோடு சேர்ந்து பேசி முடிவு எடுப்போம்" என்று அவர் சொல்வார். (சிரிப்பு) ப. சிதம்பரத்திடம் கேட்பார்கள். கூட்டுக் குழுக் கூட்டம் நடத்துவோம். அங்கே முடிவு எடுப்போம். அதன் பிறகுதான் அறிவிப்போம் என்று

சொல்வார்கள். கூட்டுக் குழுக் கூட்டம் நடக்கும். எல்லாக் கட்சிகளும் உட்கார்ந்திருக்கும். தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் வலது, இடது எல்லோரும் உட்கார்ந்திருப்பார்கள். ஒன்றாக முடிவு எடுப்பார்கள். பெட்ரோலியப் பொருட்களின் விலை உயரும். உடனேயே, இங்கே வெளிநடப்புச் செய்துவிட்டு ஓடிப்போய் பேட்டி கொடுப்பார்களே, அதே மாதிரி முன்னுக்கு வெளியே ஓடிவந்து கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் 'எதிர்ப்போம், எதிர்ப்போம், எதிர்ப்போம்' என்று சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளே ஆதரிப்பது, கையெழுத்துப் போடுவது, பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வதற்கு ஆதரவு தருவது. அங்கே சோம்நாத் சாட்டர்ஜி உட்கார்ந்திருப்பார். எல்லோரும் ஆதரிப்பார்கள். வெளியிலே வந்து எதிர்த்து பேட்டி கொடுப்பது, போராடுவது. இரட்டை வேடத்திலே கை தேர்ந்தவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக நீங்கள் குரல் கொடுத்தால் அதையும் ஆதரிப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ஒரு புதிய காரணத்தைச் சொல்வார்கள். ஆகையினால் நாம் இதிலே ஒருமித்த கருத்தோடு, ஒரு ரூபாயைக்கூடக் குறைத்துக் கொள்ளாமல், முழு நிவாரணத்தையும் பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். யாரும் நெடுங்காலத்திற்கு இந்தப் பிரச்சினையை ஒத்திப்போட முடியாது. Climax–க்கு வந்துவிட்டது பிரச்சினை. பிரச்சினை Climax–க்கு வந்துவிட்டது. துரதிஷ்டவசமாக election–ம் நெருங்கி வந்துவிட்டது. என்னைப் பொறுத்தவரைக்கும், எங்களுக்கு எந்த அரசியல் ஆதாயமும் இல்லை. மக்கள் பசித்த நேரத்திலே, அவன் பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்திலே, உரிய நேரத்திலே அவனுக்கு உணவு கிடைக்க வேண்டுமென்றுதான் நாங்கள் விரும்புகின்றோம். வேதனையின் விளிம்பில் நிற்கின்றான் விவசாயி. ஆகையினால் இதை ஒத்திப்போட முடியாது.

*பிற்பகல் 1–10*

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிட வேண்டாமென்றுதான் எண்ணினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திரும்பத் திரும்ப டெல்லிக்குச் சென்று நியாயத்தைக் கேட்டால், கேட்ட நிதி உதவி கிடைக்கும் என்று இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். ஏற்கெனவே மத்திய அரசு இரண்டு தவணைகளில் 500 கோடி, 500 கோடி ரூபாய் என்று கொடுத்ததை இங்கே குறிப்பிட்டார். பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் மிகவும் நல்லவர், அவருடைய சக்திக்கு உட்பட்டு என்ன செய்ய முடியுமோ, அவர் ஏற்கெனவே செய்து முடித்துவிட்டார். ஆரம்பத்தில் இந்த உதவி கோரியபோது, மத்திய அரசு அறிவித்தது, கொடுத்தது, வெறும் 500 கோடி ரூபாய்தான். அதற்கு மேல் கொடுப்பதாக அவர்களுக்கு எண்ணம் இல்லை. பின்னர் நானே டெல்லிக்குச் சென்றேன். பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தேன். விவரமாக இங்கே ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து நான் அவரிடம் விளக்கினேன். அதன் பிறகு, டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் மிகவும் நல்லவர், நல்ல மனம் படைத்தவர் என்பதால், அவராகவே துணிந்து, 500 கோடி ரூபாய் மேலும் தரப்படும் என்று அறிவித்தார். அதனால்தான் மொத்தம் 1000 கோடி ரூபாய் கிடைத்தது. ஆனால் அதை அறிவித்த உடனேயே, தி.மு.க. தலைவர், அங்கே காங்கிரஸ் தலைவருக்கு Phone செய்து பேசி, 'பிரதமர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார், இந்த அம்மா வந்து கேட்டவுடன் எப்படி மேலும் 500 கோடி ரூபாயை அறிவித்தார்? நாங்களெல்லாம் இல்லையா? நாங்களெல்லாம் உங்கள் கூட்டணி கட்சிகளாக இல்லையா? நாங்களும் மத்திய அரசில் இடம் பெறவில்லையா? எங்களிடம் ஆலோசனை கேட்கமாட்டீர்களா? எங்களிடம் கருத்து கேட்காமல் நீங்கள் எப்படி மேலும் 500 கோடி ரூபாயை அறிவித்தீர்கள்? மீண்டும் ஒரு முறை இப்படி நடந்தால் ஆதரவை வாபஸ் பெறுவோம்' என்று மிரட்டியிருக்கிறார். இதுதான் நடந்தது. அதனால்தான் இப்படி நடக்கும் என்று தெரிந்துதான் நான் டெல்லிக்குச் செல்வதையே ரகசியமாக வைத்திருந்தேன். நான் செல்லுகின்ற அந்த நாள் வரை, நான் டெல்லிக்குப் போகின்ற செய்தி யாருக்குமே தெரியாது. அன்று காலையில்தான், பத்திரிகைகளில் யாரோ பாதுகாப்பு அதிகாரிகள் லீக் செய்துவிட்டதால் அந்தச் செய்தி வந்தது. இல்லையென்றால், விமானம்கூட செல்ல முடியாத அளவுக்கு அவர்கள் தடைகளை ஏற்படுத்தி இருப்பார்கள். ஆகவே எவ்வளவு கஷ்டப்பட்டு, எவ்வளவு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ்நாட்டுக்காக மேலும் 500 கோடி ரூபாயை தந்திருக்கிறார்கள் என்பதை விளக்கினேன். இதற்கு மேல் கேட்டால், கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.



**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கொடுத்த விளக்கத்தை நான் புரிந்திருக்கின்றேன். நிச்சயமாக அவர்கள் ஆதரவை வாபஸ் பெறமாட்டார்கள். (சிரிப்பு) வாபஸ் பெற்ற மறுநாளே அவர்களுக்குப் பதவி போய்விடும். (சிரிப்பு) ஆகையினால் பிரதமர் அவர்கள் துணிச்சலாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது இந்த சபையில் நான் பேசினது மாதிரி நானே பர்சனலாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, பிரதமர் அவர்கள் மிகவும் நல்லவர். அவருக்கு செய்ய வேண்டுமென்ற மனம் இருக்கிறது. தமிழ்நாட்டின் கஷ்டம் அவருக்குப் புரிகிறது. தமிழ்நாட்டுக்காக எல்லா உதவிகளையும் செய்ய வேண்டுமென்றுதான் அவர் நினைக்கிறார். ஆனால் அவருடைய கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. தி.மு.க. ஆதரவை வாபஸ் பெறுமா, இல்லையா என்பது உங்களுக்குப் புரியும், எங்களுக்குப் புரியும். ஆனால் காங்கிரஸ் தலைமைக்குப் புரிய வேண்டுமே. *(சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** காங்கிரஸில் ஒரு சிலருக்குப் புரிந்திருக்கிறது. *(சிரிப்பு)* அவர்கள் இப்பொழுதே எதிர்த்துப் பரணி பாட ஆரம்பித்துவிட்டார்கள். மற்றவர்களுக்கும் புரிந்தால் நிச்சயமாக இந்த 12 ஆயிரத்து சொச்சம் கோடி நமக்குக் கிடைத்துவிடும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களின் நல்லெண்ணத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நிச்சயமாக தமிழ்நாட்டின் உரிமையை நாங்கள் விட்டுக் கொடுக்கமாட்டோம். மக்களுக்காகத்தான் இந்த 13,685 கோடி ரூபாய் உதவியை நாங்கள் கேட்டிருக்கிறோம். ஆயிரம் கோடி ரூபாய்தான் கிடைத்திருக்கிறது. நாங்கள் கேட்ட மீதி உதவித் தொகை கிடைப்பதற்கு என்னென்ன வழிமுறைகள் உள்ளனவோ அத்தனை வழிமுறைகளையும் நாங்கள் கையாள்வோம், தமிழக மக்களின் உரிமைக்காகப் போராடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–15*

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** போர்க்குணம் என்பது நமது தமிழக முதல்வர் அம்மாவினுடைய இரத்தத்தில் கலந்த ஒன்று. *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் மைய அரசுக்கு எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"



என்று சொல்வார்கள். உங்களுடைய ஆட்சி – நான் பிரதமரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நிழல் பிரதமரையும், so called பிரதமர் என்று சொல்வார்கள். எல்லா பிரதமர், நிழல் பிரதமர், நிஜ பிரதமர், ஒவ்வொரு மாநிலத்தையும் இயக்குகின்ற எல்லா பிரதமர்களுக்கும் சேர்த்துச் சொல்கிறேன். ஆட்சி முறையால் அவதிப்பட்டு அல்லலுற்று நாள்தோறும் மக்கள் வடிக்கின்ற கண்ணீர், கொடுங்கோலனுடைய செல்வச் செருக்கை அழிக்கவல்ல படை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பட்டுக்கோட்டையார் அவர்கள் தெளிவாகச் சொல்வார்கள்; மிக நீண்டகாலம் அரசியல் நடத்தத் தேவையில்லை என்று. இன்று வெளிநடப்புச் செய்த அத்தனைக் கட்சிகளுக்கும் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, தயவுசெய்து உண்மையை உணருங்கள், தமிழக மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள். தேர்தலிலே போட்டியிட்டு களம் காணுங்கள், வெற்றி பெறுங்கள், எங்களுக்கு அதைப் பற்றிக் கவலை கிடையாது. பட்டுக்கோட்டை பாட்டிலே சொன்னான்,

"உண்மை ஒருநாள் வெளியாகும் — அதில்
உள்ளங்கள் எல்லாம் தெளிவாகும்.
பொறுமை ஒருநாள் புலியாகும் — அதில்
பொய்யும் புரட்டும் பலியாகும்."

*(மேசையைத் தட்டும் ஒலி)*

அவர்தான் சொல்லியிருக்கிறார். அன்பு நெஞ்சிலே ஆத்திரம் வந்தால் ஆண்டவன்கூட அஞ்சுவான் என்பதுதான் பொதுவான நியதி. ஆகவே, தமிழக மக்களுடைய நெஞ்சங்களை, பொறுப்புள்ள மத்திய அமைச்சர்களும் பொறுப்புள்ள அத்தனைக் கட்சிகளும், புரிந்து நடந்துகொள்ளாவிட்டால் நம்முடைய எதிர்காலம் — என்னையும் சேர்த்து — நம்முடைய எதிர்காலம் கேள்விக்குறி என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர்களோடு நானும் சேர்ந்து இந்த அவையிலே ஒப்புக்கொள்கிறேன். பிரச்சினையை இன்றோடு விட்டால்கூட சரி. சில விஷயங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டுக்கோட்டையார்

பாடல் வரிகளில் சொன்னதற்கு நான் கவியரசர் கண்ணதாசன் அவர்களின் வரிகளில் பதில் சொல்ல விரும்புகிறேன்.

"காலம் ஒரு நாள் மாறும் — நம்
கவலைகள் யாவும் தீரும்.
வந்ததை எண்ணி அழுகின்றேன்,
வருவதை எண்ணி சிரிக்கின்றேன்."

(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு அம்மா அவர்கள் அவருக்கே உரிய பாணியிலே நம் அனைவரின் நெஞ்சங்களும் குளிர்கின்றவகையிலே, தமிழக மக்களுக்குப் புரிகின்றவகையிலே, எளிய உதாரணத்தைச் சொல்லிவிட்டார்கள். அதுவே போதும் என்று நான் கருதுகிறேன். நிறைய விஷயங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுனாமியின்போது நீங்கள் ஆற்றிய அருந்தொண்டுக்கு நன்றி. இந்த வெள்ளப் பெருக்கிலே ஒரு மாநில அமைச்சரை எங்களோடு வாழ வைத்து எங்கள் துன்பங்களையெல்லாம் புரிந்துகொண்டு, அதைப்போல எல்லா அரசு இயந்திரங்களையும் முறையாக வேலை வாங்கி எங்களை ஆற்றுப்படுத்தியிருக்கிறீர்கள், தமிழக மக்களை ஆற்றுப்படுத்தியிருக்கிறீர்கள். என் தொகுதி மக்களை ஆற்றுப்படுத்தியிருக்கிறீர்கள். அனைவருக்குமே நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது, முதல் கட்ட நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது, எந்தக் குறையும் இல்லாமல் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் நன்றியோடு இந்த மாமன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல சென்ற கூட்டத்தொடரிலே நான் விளையாட்டாகத்தான் பேசினேன், ஒரு வேனிலே, இந்த மேக்சி கேப் வேன்களுக்கு வரியைக் குறைக்க வேண்டும் என்று. என்னுடைய சொந்த அனுபவம். நடுத்தர மக்கள், ஏழை குடும்பத்து மக்கள், நல்ல காரியங்களுக்கு, கெட்ட காரியங்களுக்குச் செல்கின்றபோது, அதிக எண்ணிக்கையிலே ஏற்றிக்கொள்வது வழக்கம். அதற்குத்தான் அந்த வேனைப் பயன்படுத்திக்கொண்டிருந்தார்கள். கூடுதல் வரியாக இருந்த காரணத்தால் அந்த வேன் ஓட்டுநர்களும் உரிமையாளர்களும் முடங்கிப்போய் வேனை எல்லாம் விற்றுவிட்டார்கள், பாதி விலைக்கு



விற்றுவிட்டுப் போய்விட்டார்கள். அந்த நிலையை நான் இந்த மாமன்றத்தில் சொன்னபோது, தாயுள்ளத்தோடு, எதிர்பார்த்ததைவிட வரியை அதிகம் குறைத்து (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்றியிருக்கிறார்கள். அதற்கு நான் இந்த அவையிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–20

அதைப்போல தொகுப்பு வீடுகள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருகின்ற பிரச்சினை எல்லாம், போனால் ரோடு போட்டாயா என்று கேட்பார்கள், எல்லாம் கேட்பார்கள். உடனடியாக செய்ய முடியாத சில விஷயங்கள் இருக்கும். தொகுப்பு வீட்டிற்கு நான் கேட்டேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 25 இலட்ச ரூபாய் M.L.A. Fund-லிருந்து கொடுக்கலாம் என்று சொன்னார்கள். சந்தோஷத்தோடு நான் அந்த அதிகாரிகளையெல்லாம் அழைத்து வந்து என்னுடைய தொகுதியிலே 55 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. இந்தப் பணம் எல்லோருக்கும் சேர்ந்து கிடைக்க வேண்டும் என்கிற மாதிரி 250 வீடுகளை ஒரு பஞ்சாயத்திற்கு 5 என்ற முறையில் கொடுத்துவிட்டேன். போய்ப் பார்த்தால் ஒவ்வொரு ஊராட்சியிலும் 50–க்கும் மேற்பட்ட வீடுகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பணம் போதவில்லை.

நான் மணிசங்கர் அய்யர் இருக்கும்போதுகூட சொன்னேன். இந்த மாதிரி ஒரு சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து ஏதாவது பெற்றுத் தர முடியுமா? ONGC–லே Fund இருக்கிறதே, –Welfare Fund– இருக்கிறதே, இது உங்கள் சொந்த தொகுதிதானே, நீங்கள் ஏதாவது பெற்றுத் தர முடியுமா என்று கேட்டேன். நீங்கள் மாநில அரசைக் கேளுங்கள் என்று சொன்னார். இதை டி.வி.–யிலே, ஜெயா டி.வி.–யிலே ஒளிபரப்பும்போது நிச்சயமாக அவர்கள் பார்ப்பார்கள். அந்தக் கூட்டத்திலே வந்தவர்கள் பார்ப்பார்கள். இதே விஷயத்தை நான் சொன்னேன். தமிழக அரசு ஒரு நிதி ஒதுக்கியிருக்கிறது. 25 இலட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அது போதவில்லை. மயிலாடுதுறையில் 3000 வீடுகள் பழுதடைந்து இருக்கின்றன. நான் 250 வீடுகளுக்குத்தான் கொடுக்க முடிந்திருக்கிறது. ஒரு வீட்டிற்குக் கொடுத்ததால், கொடுக்காதவர்கள் எல்லாம் எதிரியாகிவிட்டார்கள். நண்பர்கள் கிடைப்பார்கள் என்பதற்காக 55 பஞ்சாயத்துகளிலே கொடுத்துவிட்டோம். இப்போது 55 பஞ்சாயத்துகளில் 10, 10 விரோதிகள் எனக்கு உண்டாகி இருக்கிறார்கள். ஆகையால் தாய் உள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர்

அம்மா அவர்கள் இதற்கென்று கூடுதல் நிதியைக் கொடுத்து அந்த பாதிக்கப்பட்ட, 1990 ஆம் ஆண்டிற்கு முன்பாக கட்டப்பட்ட வீடுகளுக்கு 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் வரை கொடுத்தால் போதும். மேற்கொண்டு 50 இலட்ச ரூபாய் ஒரு ஒன்றியத்திற்குக் கொடுத்தால் பலரைத் திருப்திப்படுத்த முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வேண்டுகோளாக இங்கே வைக்க விரும்புகின்றேன். கொடுத்ததற்காக நன்றி. அதைப்போல எனது தொகுதியிலே...

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்கின்ற வகையிலே 25 இலட்சத்திற்கு மேலாக மீண்டும் 10 இலட்சத்தை சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும், அதற்கு அடுத்த கட்டமாக 250 கோடியை இப்போது அடிப்படை வசதிக்காக ஒதுக்கப்பட்டவகையில் 65 ஆயிரம் வீட்டுக்கும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** அமைச்சரின் பதிலுரைக்கு நன்றி. இந்த வெள்ளப்பெருக்கு நான் சொன்னதைப்போல கொள்ளிடத்திலே வரலாறு காணாத, கொள்ளிடம் நதி தோன்றிய காலத்திலிருந்து வராத வெள்ளம் வந்திருக்கிறது. கொள்ளிடக் கரை எனது தொகுதியில் 3, 4 பஞ்சாயத்துகள் வழியாக வருகிறது. கொள்ளிடம் நதியின் வலது கரை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளுடைய இரவு, பகல் காணாத உழைப்பு, பொதுமக்களுடைய பங்களிப்பு எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் துணை இருந்ததன் காரணத்தால்தான் மக்கள் காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள். கொள்ளிடம் ஆறு வழிந்தோடியது, மிகப் பெரிய கரை அது. அது வழிந்தோடியது. எனது தொகுதியில் 2 இடங்களிலும், சீர்காழி தொகுதியில் 2 இடங்களிலும் உடைப்பு எடுத்து மிகப் பெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டது. சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையால் மக்களும், கால்நடைகளும் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தருணத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் எனது தொகுதியில் கொள்ளிடத்தின் கரையை உயர்த்த வேண்டும். அதற்காக வரும் நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல ஒரு சந்தோஷமான விஷயத்தை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். மயிலாடுதுறையில் ஒரு மிகப் பெரிய பள்ளிக்கூடம், 3 ஆயிரம் பிள்ளைகள் படிக்கின்ற பள்ளிக்கூடம். அதில் பெற்றோர்



ஆசிரியர் சங்கத் தலைவராக நான் இருக்கிறேன். பெண்களுக்கு தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவிகளுக்கு சைக்கிள் கொடுத்தீர்கள். எம்.எல்.ஏ. என்கிற முறையில் போய் நான் கொடுத்தேன். அதன் பிறகு பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவிகளுக்கு சைக்கிள் கொடுத்தீர்கள். நான் என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களான, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர், குத்தாலம் சட்டமன்ற உறுப்பினர், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரை நீங்களும் வாருங்கள், நீங்களும் உங்கள் கையால் கொடுங்கள், ஆட்சியைப் பற்றி நீங்களும் பேசினால் நன்றாக இருக்கும் என்று அவர்களையும் அழைத்துக் கொண்டு கொடுப்பதுதான் என் வழக்கம். ஒவ்வொரு முறையும் ஆண்கள் மத்தியிலே ஒரு ஏக்கம் இருந்தது. நான் சொன்னேன் எல்லா உறுப்பினர்களையும் வைத்துக் கொண்டு கவலைப்படாதீர்கள் வரும் தொடரிலே மாண்புமிகு அம்மா அவர்களை சந்தித்து உங்கள் குறையைச் சொல்வேன் என்று சொன்னேன். கேட்பதற்கு முன்பாகவே, சென்னை வருவதற்கு முன்பாகவே அத்தனை பிள்ளைகளுக்கும் பால் வேறுபாடு பார்க்காமல் (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இலவச சைக்கிள் வாங்கித் தந்திருக்கிறீர்கள். அனைவரின் சார்பாகவும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு சைக்கிள் கொடுக்கும்போது ஒரு அந்தஸ்து, கிராமத்திலே ஒரு வாகனம் என்பது பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு மட்டும் அல்ல, குடும்பத்திற்கே அதை ஒரு அந்தஸ்தாக கருதுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அந்தஸ்தை நீங்கள் உருவாக்கித் தந்திருக்கிறீர்கள். ஒரு மனத்தெம்பும், மனத்தெளிவும் அந்த மாணவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அது அவர்கள் தேர்ச்சி விழுக்காட்டிற்கு பெரும் வகையில் உதவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த வகையிலே அனைவருக்கும் நீங்கள் சைக்கிள் வழங்கியதற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1–25*

எனது சொந்தப் பிரச்சினை. நான் கன்னிப் பேச்சிலே தொடங்கி இன்றைக்கு கடைசி கூட்டத் தொடரிலே நிற்கிறேன். மயிலாடுதுறையில் புதிய பேருந்து நிலையம் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். பல தடைகள், எவ்வாறு கடல் நீரை குடிநீராக ஆக்குவதற்கு நீங்கள் முயற்சி செய்கிறபோதெல்லாம், அத்தனைக் கட்சிகளும் ஏதாவது முட்டுக்கட்டைப் போடுகிறார்களோ அதைப்போல கடந்த நான்கு ஆண்டுக் காலமாக தொடர்ந்து அங்கே ஒரு பேருந்து நிலையம் வரக் கூடாது என்பதற்காக, அரசியல் காழ்ப்புணர்ச்சியை மட்டுமே காரணமாக வைத்து, அத்தனை பிரதான எதிர்க்கட்சிகளும் ஒன்றுகூடி எதிர்த்தார்கள். நான்கூட மாவட்ட ஆட்சியரிடத்திலே, இதற்கு என்னதான் தீர்வு என்று

கேட்டேன். ஒன்றும் கவலைப்படாதீர்கள் என்று முன்னாள் மாவட்ட ஆட்சியர் இன்றைக்கு தஞ்சாவூர் கலெக்டராக இருக்கிற வீரசண்முகமணி அவர்கள். "அம்மாவினுடைய கவனத்திற்குக் கொண்டு போங்கள். அம்மாவால் மட்டுமே இது முடியும்" என்று சொன்னார்கள். அதன் அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்களினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தேன். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடைய ஆதரவோடும், அம்மாவினுடைய உத்தரவோடும் நமது இந்து சமய அறநிலையத் துறை ஆணையர், திரு. பிச்சாண்டி அவர்களுடைய ஆதரவோடும், இன்றைக்கு அந்தத் திட்டம் நிறைவேறுகிற தருவாயில் இருக்கிறது. மயிலாடுதுறை தொகுதி மட்டுமல்லாமல், அதைச் சுற்றியிருக்கிற நான்கு சட்டமன்றத் தொகுதி மக்களும் உங்களுக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீண்டகாலப் பிரச்சினை. பதினைந்து ஆண்டுக்காலப் பிரச்சினை. இன்றைக்குத்தான் அதற்குத் தீர்வு வந்திருக்கின்றது. ஆகையால் நான் தெளிவோடு ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். நான் ஒரு மனுவாகக்கூட கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள்தான் அந்தப் புதிய பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்ட வேண்டும் என்பது என்னுடைய அன்பான வேண்டுகோள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல என்னுடைய தொகுதியிலே Caesarian Operation இல்லாத மருத்துவமனையே கிடையாது. இருபத்தைந்தாயிரம் ரூபாய் செலவழியும், ஒரு நடுத்தரக் குடும்பத்திற்கு. அதோடு அந்தக் குடும்பம் அழிந்து போய்விடும். இந்த மாமன்றத்திலே பேசியபொழுது, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு கோடி ரூபாயை மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்குத் தந்திருக்கிறீர்கள். அதற்கு அடிக்கல் நாட்ட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அதற்கும் நீங்கள்தான் அடிக்கல் நாட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல என்னுடைய தொகுதியிலே, பாதாளச் சாக்கடை திட்டப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெள்ளத்தின் சீற்றத்தைப் பார்த்தார்கள். அதைப்போல நகரத்தில் தங்கியிருக்கிறபொழுது, 50 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து ஒரு அரை மணி நேரத்திலே வந்துவிடுவார்கள். ஆனால், ஒரு 5 கிலோ மீட்டர் துரத்தை அவரால் கடக்க முடியாது, நானும் அவருடன் சென்றிருக்கின்றேன். என்னையேகூட கிண்டல் பண்ணுவார். எப்படி நரக ஆட்சியிலே வாழ்கிறீர்கள் என்று என்னைக் கேட்டிருக்கின்றார்கள்.



மயிலாடுதுறை நகராட்சி, நரக ஆட்சியாக மாறியிருக்கிறது. அண்ணன் ஜீவானந்தம் அவர்கள்கூட அதை அடிக்கடி சொல்லுவார்கள். அந்த அளவிற்கு மிக மோசமாக சாலை பாதிக்கப்பட்டிருக்கிறது. போதிய நிதி ஆதாரம் இல்லை. ஆகையால், மயிலாடுதுறை நகராட்சிக்கு சாலை மேம்பாட்டிற்காக கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். கொஞ்சம் grant–ஆக, கொஞ்சம் மானியமாக ஒன்றரை கோடி ரூபாய் அளவிற்காகவாவது கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், மயிலாடுதுறையிலே — நீங்கள் தொடக்கத்திலே அறிக்கை வாசித்தீர்கள் விளையாட்டுத் துறையை மேம்படுத்த வேண்டுமென்று. — ஒரு மிகப் பெரிய விளையாட்டு அரங்கத்தை இப்பொழுதுதான் கட்டி முடித்திருக்கிறோம். பத்து இலட்ச ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நான் கொடுத்திருக்கிறேன். மிகப் பெரிய புகழ்பெற்ற ராஜன் தோட்டத்திலே, எங்கள் மாவட்டத்திலே மிகப் பெரிய அரங்கமாக அது உருவாகியிருக்கிறது. விளையாட்டு அரங்கம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. ஆனால் விளையாட்டு மைதானம் மிகவும் பாழ்பட்டுப்போய்விட்டது. Cricket விளையாட முடியாமல், ஓடு தளம் அமைக்கின்ற முயற்சியிலே விளையாட்டு மைதானத்தை மிக மோசமாக பாதிக்கச் செய்துவிட்டார்கள். குமுதம் ரிப்போர்ட்டரிலேகூட மிகப் பெரிய படம் எடுத்து அதையெல்லாம் cover story–ஆக எழுதியிருக்கிறார்கள். நான்கூட அமைச்சரிடத்திலே இதைப் பற்றிச் சொன்னேன். மேற்கொண்டு புதிதாக ஒன்று கட்ட வேண்டுமா என்று ஒரு பதில் எனக்கு வந்திருந்தது. என்னுடைய வேண்டுகோள் இந்த விளையாட்டுத் துறைக்கு தனிக் கவனம் செலுத்துகிற மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மைதானத்தைச் சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விளையாட்டுத் துறையில் பணம் இல்லை. மாவட்ட ஆட்சியரிடமும் பணம் கிடையாது. விளையாட்டுத் துறையிலும் பணம் இல்லை என்று என்னிடத்திலேயும் கேட்டார்கள். என்னிடத்திலே உண்மையிலே இல்லை. நான் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன். இருந்தால் அதையும் கொடுப்பேன். ஏழு இலட்ச ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். பொதுப் பணித் துறையிலே இருந்து கணக்கிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் பொங்கல் திருநாள் அன்று தமிழகத்தினுடைய மிக உயர்ந்த அணிகள் எல்லாம் வந்து விளையாடும். இரண்டு முறை ஸ்ரீகாந்த் அவர்கள் வந்திருக்கிறார்கள். இந்த முறை கபில்தேவ் அவர்கள் தேதி கொடுத்திருந்தார்கள். மைதானம் சரியில்லாத காரணத்தினால், விளையாட்டு விழா நடக்க முடியாமல் போய்விட்டது.

ஏப்ரல் மாதத்திலே தேர்தலுக்கு முன்பாகவே ஒரு விளையாட்டு விழா நடத்த வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம். மாண்புமிகு அம்மா அவர்களை கருணைகூர்ந்து, அந்த மைதானத்தை சீரமைக்க நிதி ஒதுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மயிலாடுதுறை சுற்றுலா மையங்கள் நிறைந்த ஒரு பகுதி. மயிலாடுதுறையை மையப்படுத்தித்தான் அத்தனை நவகிரகங்களும் இருக்கின்றன. வைணவத் தலங்களும், சிவத் தலங்களும் இருக்கின்றன. ஆகையால் அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். அதைப்போல, மயிலாடுதுறையிலே பழங்காவிரி என்று ஒரு நதி ஓடுகிறது.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** சென்னையிலுள்ள கூவத்தை அடையாளப்படுத்துவதைப் போல அந்தப் பழங்காவிரி முற்றிலும் சாக்கடையாக மாறி, ஆக்கிரமிக்கப்பட்டு பல நிலைகளிலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தூர் வாரி, பாசன வாய்க்காலாகப் பயன்படுத்தினால் நகரத்தில் 82 குளங்களில் நல்ல நீரை நிரப்ப முடியும். இது தொகுதி மக்களுடைய நீண்டகால கோரிக்கை. இதையும் நிறைவேற்றித் தரும்படி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்கு டெபாசிட் தொகை 50 ஆயிரமாக இருக்கிறது. அதை 5 ஆயிரமாக குறைக்குமாறு அல்லது ஏதாவது குறைக்குமாறு நான் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே பெரும்பாலோருக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. நகரத்திலே மட்டும் 20,050 பேருக்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால், நகரத்திலே, மயிலாடுதுறை நகரத்திலே O.A.P. வாங்குபவர்களுக்கு யாருக்கும் கொடுக்கவில்லை. அதைப்போல, பழைய கார்டுகளை புதிய கார்டுகளாக மாற்றுகிறபோது ஏற்பட்ட காலதாமதத்தால் அவர்களுக்கும் கொடுக்க முடியாமல் போய்விட்டது. சில சர்க்கரை கார்டுகள், இரண்டாயிரம் பேர், ஆயிரம் பேர்தான் பாக்கியிருக்கிறார்கள். ஆகையினாலே, முழுமையாக, இரண்டாயிரம் பேருக்குத்தான் நிவாரணம் வழங்க வேண்டும். ஆயிரம் ரூபாய் வீதம்



இரண்டாயிரம் பேருக்குத்தான் வழங்க வேண்டும். அதற்கும் உத்தரவிடுமாறு பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்கு எனக்கு நேரம் ஒதுக்கி, நான் பேசியதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பேரவைத் தலைவருக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன அரசன்?

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜெவீ. அவர்களிடத்திலே முடிக்கிறபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறித்து ஒரு பாடலைச் சொல்லி முடிக்குமாறு சொன்னேன். அவர்கள் மறந்துவிட்டார்கள். அந்தக் கடமையை இப்போது நான் செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாடப் போகிறீர்களா?

**திரு. ப. அரசன்:** என்ன பாடல் என்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்களே, "நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற" *(மேசையைத் தட்டும் ஒலி)* என்ற பாடலை பாடச் சொன்னேன். அவர் பாடாமல் இருந்ததால் அதைப் பாட விரும்பினேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மங்களகரமாக முடித்த அரசனுக்கு நன்றி. பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19–01–2006) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*16.* 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] *(தமிழ், ஆங்கிலம்)*

*17. 2004–2005* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*18. 2004–2005* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

*19. 2004–2005* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–

*****

D
424,31/06
106.87.7

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227002
சென்னை-600 008
நூலகம்